20.00

அரசை விழ்த்தும் பக்கம் 8 | அரசியல் பக்கம் 12 | றோயல் பக்கம் 22 | 500 பக்கம் 23

www.onlineuthayan.com

பக்கங்கள் : 26

# உதயன்

சுடர் 27
கதிர் 181

வள்ளுவர் ஆண்டு 2043 வைகாசி 12 வெள்ளிக்கிழமை (25/05/2012) UTHAYAN - A Lively National Tamil Daily

## வெலிக்கடை முன் 29இல் போராட்டம்

கொழும்பு, மே 25

நீண்டகாலமாகச் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நீதி-நியாயத்தைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தி எதிர்வரும் 29ஆம் திகதி வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு முன்பாக நடைபெறவுள்ள 04

# எப்போது வருவார் அப்பா?

### வவுனியா சத்தியாக்கிரகத்தில் கண்ணீர் வடித்த தாயிடம் ஏக்கத்துடன் கேட்டான் மகன்



வவுனியா, மே 25

"அப்பா எப்போது வருவார்? நான் அப்பாவை பார்க்க முடியாதா?" என கண்ணீர் விட்டு அழுதுகொண்டிருந்த தாயிடம் கவலையுடன் கேட்டான் நான்கு வயது மகன். இந்த நெஞ்சை உருக்கும் சம்பவம் நேற்று வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் இடம்பெற்றது.

இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்துக்கு இளம் தாய் ஒருவர் தனது நான்கு வயது மகனுடன் வருகை தந்திருந்தார். காணாமற் போன தனது கணவரை விடுவிக்குமாறு அந்தத் தாய் கண்ணீர் மல்கியவாறு கோரிக்கை விடுத்தார். கணவரின் படத்தையும் அவர் கையில் தாங்கியிருந்தார்.

இலங்கையின் அனைத்துச் சிறைச்சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனைத்துத் தமிழ் அரசியல் கைதிகளையும் விடுதலை செய்யக்கோரியும், காணாமல் போனோர் தொடர்பில் அரசு விரைவில் உரிய பதிலளிக்கக் கோரியும் நேற்று வவுனியாவில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டு தமது பிள்ளைகளை விடுவிக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுத்தனர். "எமது பிள்ளைகள் எங்கே இருக்கிறார்கள்?, பல வருடங்களாக சிறையில் இருக்கும் அவர்களை மனமிரங்கி விடுவியுங்கள்." என்று சத்தியாகிரகத்தில் கலந்துகொண்ட பெற்றோர்கள், இளந் தாய்மார்கள் அனைவரும் உருக்கத்துடன் கோரிக்கை விடுத்தனர். காணாமல் போன உறவுகளின் புகைப்படங்களையும், சுலோகங்களையும் இவர்கள் தாங்கிநின்றனர். இந்தப் போராட்டத்திலாவது தமக்கு ஒரு உறுதியான முடிவு கிடைக்க வேண்டும் என அவர்கள் அங்கு வலியுறுத்திக் கோரினார்கள்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் வவுனியா நகரசபை மைதானத்தில் நேற்று இந்த சத்தியாக்கிரகப் போராட்டம் நடைபெற்றது. காலை 7 மணிக்கு ஆரம்பமான போராட்டம் மாலை 4 மணி வரை நீடித்தது. போராட்டத்தில் கலந்துகொண்ட மக்களுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, சுரேஷ்.க.பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன், .சிவசக்தி 04

## மாணவியை பலாத்காரம் செய்ய முயன்ற சிப்பாய்

நெடுங்குளம்,மே 25

வவுனியா, தேக்கவத்தைப் பகுதியில் பாடசாலை மாணவியைப் பாலியல் பலாத்காரம் செய்ய முயன்ற ஊர்காவல் படையைச் சேர்ந்த ஒருவர் பொது மக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

தாயை இழந்த இந்த 14 வயதான மாணவி தனது தாய்வழிப் பேர்த்தியாருடன் வசித்து வருகின்றார். இவர்களுடைய வீடு தேக்கவத்தை இராணுவ காவலரணுக்கு அருகில் அமைந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வீட்டுக்கு வெளியே இந்தச் சிறுமி வந்தபோது குறித்த ஊர்காவல் படை 'ஆசாமி' அவரை மடக்கிப் 04

# வடக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு

### படைமுகாம்கள் அகற்றப்படுவது கட்டாயம்
### உதயனுக்குப் பொன்சேகா பரபரப்புப் பேட்டி



கொழும்பு, மே 25

வடக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு இருப்பதைத் தாம் ஏற்றுக்கொள்கிறார் என முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்தார்.

'உ தயனு'க்கு வழங்கிய விசேட பேட்டி ஒன்றின்போது இவ்வாறு கருத்துவெளியிட்ட அவர், வடக்கில் மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாத வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு அங்குள்ள படைமுகாம்கள் படிப்படியாக அகற்றப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார். 04

# அரசுக்கு ஒரு மாத அவகாசம் உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

### கூட்டமைப்பின் கோரிக்கையை ஏற்றனர் கைதிகள்

கொழும்பு, மே 25

தமிழ் அரசியல் கைதிகளின் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் ஒருமாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

கைதிகளின் கோரிக்கைகளுக்கு ஒருமாத காலத்துக்குள் தீர்வு காண்பதாக நேற்றுமுன்தினம் நாடாளுமன்றில் தெரிவிக்கப்பட்டதையடுத்தே கைதிகளின் உண்ணாவிரதம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் 04

## குற்ற விசாரணை இலங்கை மீது வேண்டாம்

மொஸ்கோ,மே 25

இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தின் இறுதி மாதங்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பொது மக்களின் மரணங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணையை இலங்கை மீது திணிக்க மேற் 04

## கனேடியத் தமிழர் கொலை: நால்வருக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, மே 25

கிளிநொச்சி, பரந்தனில் கனேடியக் குடியுரிமை பெற்ற தமிழர் ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட ஐவரில் நால்வரை நீதிமன்றம் நேற்று விளக்க மறியலில் வைத்தது.

சம்பவத்தில் அந்தோனிப்பிள்ளை ஜெயரட்ணம் (வயது 52) என்ற கனேடியக் குடிமகன் வெட்டிக் கொல்லப்பட்டிருந்தார். கமறிக்குடா என்ற இடத்திலிருந்த அவரது வீட்டிலேயே கொலை நிகழ்ந்துள்ளது.

கடந்த 3ஆம் திகதி இடம்பெற்ற கொலை தொடர் 04

# பேச்சை உடன் உயிர்ப்பியுங்கள்

### நாடாளுமன்றில் வலியுறுத்தினார் ரணில்

கொழும்பு, மே 25

அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையிலான தீர்வுத்திட்டப் பேச்சுகள் ஸ்தம்பிதமடைந்துள்ள இவ்வேளையில், விரிசலடைந்துள்ள பேச்சுகளை நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு சமாந்தரமாகக் கொண்டுசெல்லும் வகையில் உடனடியாக உயிர்ப்பித்தல் அவசியம் - என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி நேற்று நாடாளுமன்றில் வலியுறுத்தியது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையை அரசு சரிவரப் பயன்படுத்துவதற்குத் தவறும் பட்சத்தில் சர்வதேச சமூகத்திலிருந்து தனிமைப்படுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்படலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் தெரிவித்தார்.

அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைக் காணும் பட்சத்திலேயே நிரந்தரமான சமாதானத்தை நோக்கி நகரமுடியும் என்றும் அவர் 04

# யாழ்., வன்னிப் பகுதிகளில் படையினரைக் குறையுங்கள்

### இலங்கை அரசைக் கோருகிறது பிரிட்டன்

கொழும்பு, மே 25

இலங்கையின் வடபகுதியில், குறிப்பாக யாழ்ப்பாணம் மற்றும் வன்னியில் இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்துக் கொள்ளுமாறு பிரிட்டன் இலங்கை அரசை வற்புறுத்தியுள்ளது.

இது குறித்துக் கருத்து வெளியிட்ட இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரிட்டன் தூதுவர் ஜோன் றன்கின், இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள இராணுவப் பிரசன்னம் போன்ற அளவுக்கு வட பகுதிக்கான இராணுவப் பிரசன்னம் மாற்றியமைக்கப்பட வேண்டுமெனத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், இராணுவம் மேற்கொண்டு வடக்கு, கிழக்குப் பகுதியில் குடிசார் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட மாட்டாதென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது போர் வெற்றிக்கொண்டாட்ட உரையின்போது தெரிவித்திருந்தார். இப்பகுதிகளின் நிலைமையைத் தொடர்ந்தும் அவதானித்து வரவேண்டியது அவசியமாயுள்ளது.

குடிசார் நடவடிக்கைகளை முடிந்தவரை சாதாரண நிலைக் 04

## 'ஜெனரல்' பதவி மீண்டும் வழங்கப்படாது

கொழும்பு,மே 25

'இராணுவ நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பினை நிராகரிக்கும் வகையில் இந்த நாட்டில் ஆட்சியில் இருந்த எந்தவொரு ஜனாதிபதியும் நடந்துகொள்ளவில்லை. சரத் பொன்சேகா விடயத்திலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறே நடந்து கொண்டுள்ளார். இந்நிலையில், இராணுவ நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் பறிக்கப்பட்ட 04


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# எமது பிள்ளைகளுக்கு எப்போது விடுதலை...?

வவுனியாவில் நேற்று நடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் பதிவுகள் இவை.









# இலங்கை அரசின் செயற்பாட்டில் அமெரிக்காவுக்கு திருப்தியில்லை

## வொஷிங்டன் பயணம் பிசுபிசுப்பு

நியூயோர்க்,மே 25

போருக்குப் பிந்திய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் தமது முயற்சிகளின் முன்னேற்றம் குறித்து, அமெரிக்காவைத் திருப்திப்படுத்த இலங்கை அரசு தவறிவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் அமெரிக்கா சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தலைமையிலான குழுவினர், ஒபாமா நிர்வாகத்தின் முக்கிய முடிவெடுக்கும் அதிகாரமுடையவர்கள் உள்ளிட்ட அமெரிக்கக் கொள்கை வகுப்பாளர்களைச் சந்தித்திருந்தனர்.

எனினும் இந்தக் குழுவினர் போருக்குப் பிந்திய நிலைமைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை, அமெரிக்க அதிகாரிகளிடம் காண்பிக்கத் தவறியுள்ளனர்.

இலங்கையின் முன்னேற்றங்கள் தொடர்பாகத் தமது நம்பிக்கையைக் கட்டியெழுப்ப இலங்கைக் குழுவின் பயணம் உதவவில்லை என்று அமெரிக்க அதிகாரிகள் உணர்ந்துள்ளனர். அமெரிக்க அதிகாரிகளுடனான சந்திப்புகளின் போது எந்தப் புதிய முன்னேற்றங்கள் குறித்தும் இந்தக் குழு பேசவில்லை.

வொஷிங்டனில் முன்னர் நடத்திய சந்திப்புகளில் பேசப்பட்ட விடயங்களையே இலங்கை வெளிவிவகார அமைச்சர் பேசியிருந்தார். அவர் வழக்கம் போலவே இலங்கை அரசினால் முன்னெடுக்கப்படும் மீளக்குடியமர்வு, புனர்வாழ்வு, அபிவிருத்தித் திட்டங்கள் குறித்தே பேசினார். அமெரிக்க அதிகாரிகள் இதனை எதிர்பார்க்கவில்லை.

எவ்வாறாயினும், முக்கிய அமெரிக்க அதிகாரிகளான சமந்தா பவர், மற்றும் ஹிலாரி கிளின்ரன் ஆகியோர், நல்லிணக்க முயற்சிகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

சமந்தா பவருடனான சந்திப்பு மிகவும் முக்கியமானதாக இருந்தது. அவர் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பாக தீவிர கவனம் செலுத்தியிருந்தார். அதன் பரிந்துரைகள் எவ்வாறு நடைமுறைப்படுகிறது என்று விளக்கமளிக்குமாறும் இலங்கை வெளிவிவகார அமைச்சரிடம் கேட்டிருந்தார்.

அத்துடன், வடக்கு, கிழக்கில் அரசியல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்தும், வடக்கில் படைக் குறைப்புச்செய்யப்பட வேண்டியது குறித்தும் சமந்தா பவர் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையில் போருக்குப் பிந்திய நிலைமைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து நேரில் கண்டறிய வருமாறு சமந்தா பவருக்கு பீரிஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த)

# தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும்

## மங்கள சமரவீரவும் வலியுறுத்து

கொழும்பு,மே 25

தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்ய உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பல வருடங்களாக அரசியல் கைதிகளாகத் தடுத்து வைக்கப்பட்டு, தற்போது போராட்டத்தை முன்னெடுத்துள்ள 234 தமிழ் அரசியல் கைதிகள் உள்ளிட்ட அனைத்து அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும்.

இதுவரை காலமும் எவ்வித குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படாது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் எனவும் நாங்கள் கோருகிறோம்.

குற்றச் செயல்களில் ஈடுபட்டிருந்தால் அவர்கள் மீது வழக்குகள் தொடரப்பட்டு நீதிமன்றில் முன்னிலைப்படுத்த வேண்டும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட குற்றச் செயல்கள் தொடர்பில் தற்போது புதிதாக குற்றம் சுமத்த முடியாது.

அரசியலமைப்பின் 34ஆவது அதிகாரத்தின் கீழ் சரத் பொன்சேகாவுக்கு எஞ்சியுள்ள தண்டனைக் காலம் இரத்துச் செய்யப்பட்டுள்ளது.

ஜனநாயக உரிமைகளைக் பாதுகாப்பதாக சர்வதேசத்துக்குப் பிரசாரம் செய்வது மாத்திரம் போதுமானதாக இருக்காது. நாட்டு மக்களுக்கு ஜனநாயக சுதந்திரத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். (த)

# ஆணைக்குழுப் பரிந்துரைகளின் செயல்திட்டம் வெகுவிரைவில்

கொழும்பு,மே 25

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைபடுத்தும் ஒரு வேலைத்திட்டம் விரைவில் தயார்ப்படுத்தப்படுமென வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சு உட்பட ஏனைய பங்குதாரர்களின் உதவியுடன் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க தலைமையிலான குழுவொன்று இதனைத் தயாரித்து வருகின்றது என அமைச்சின் செயலாளர் கே.அமுனுகம கூறினார்.

இந்தப் பணி எப்போது முடியுமென்பது பற்றிய திகதியை குறிப்பிட முடியாதெனவும் ஆனாலும் இது விரைவில் தயாரிக்கப்பட்டுவிடுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரனுக்கு வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் எழுத்துமூலமான ஆவணத்தை சமர்ப்பிக்கவில்லையெனவும் ஆனால் அரசின் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான திட்டத்தை வாய்மொழி வழியாக விளக்கியதாகவும் கே.அமுனுகம தெரிவித்துள்ளார். (த)

# கத்தோலிக்க மதகுருமாருக்கு அழைப்பாணை

## மன்னாரில் பரபரப்பு

மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து கத்தோலிக்க மதகுருமாருக்கு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கோரி பொலிஸாரால் அழைப்பாணை விடுக்கப்பட்டதால் அப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்பணி ஏ.விக்ரர் சோசை, மடு பரிபாலகர் அருட்பணி எஸ். எமிலியானுஸ்பிள்ளை, முருங்கன் பங்குத் தந்தை அருட்பணி அருள்ராஜ், வாங்காலை பங்குத் தந்தை அருட்பணி எஸ். ஜெயபாலன் குரூஸ், தலைமன்னார் பங்குத் தந்தை அருட்பணி பி.டெஸ்மன் குலாஸ் ஆகிய அடிகளார்க்கு இன்று காலை 9 மணிக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு பொலிஸாரால் அழைப்பாணை வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகைக்கு எதிராக வெளியிடப்படும் கருத்துக்களைக் கண்டித்தும் அவருக்கு யேசுவின் ஆசி வேண்டியும் நாளை மறுதினம் மன்னார் மாவட்ட பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட மக்கள் ஒன்றிணைந்து வழிபாட்டில் ஈடுபட இருந்த சமயம் இவ்வாறு குருமாருக்கு அழைப்பாணை விடுக்கப்பட்டிருப்பது மக்கள் மத்தியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த வழிபாட்டைத் தடுத்து நிறுத்தும் நோக்கில் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-16)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அதிகரித்த விலையில் கோழி இறைச்சி, முட்டை

யாழ்ப்பாணம், மே 25

யாழ்.மாவட்டத்தில் சாவகச்சேரியில் முட்டை மற்றும் சுத்தம் செய்யப்பட்ட கோழி ஆகியவற்றின் விலைகள் பெருமளவில் அதிகரித்து விற்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

சுத்தம் செய்யப்பட்ட புறொயிலர் கோழி இறைச்சி ஏனைய பிரதேசங்களில் கிலோ 450 ரூபா விற்பனை செய்யப்படுகின்ற போதிலும் சாவகச்சேரிச் சந்தையில் உள்ள கோழி இறைச்சிக் கடையில் கிலோ 600 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது என்று பொதுமக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் முட்டை 9 ரூபா வரை விற்பனை செய்யப்படும்போது சாவகச்சேரி சந்தையில் ஊர்க்கோழி முட்டை மற்றும் புறொயிலர் கோழி முட்டைகள் 15 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-9)

## போக்குவரத்துப் படி அதிகரித்தது

யாழ்ப்பாணம், மே 25

யாழ்.மாவட்ட சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் பணியாற்றும் வைத்திய அதிகாரிகளுக்கான போக்குவரத்துப் படி அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை 12 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வந்த இந்தக் கொடுப்பனவு இனிமேல் 15 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## 60 இற்கும் மேற்பட்ட படகுகள் நயினாதீவுக்கான சேவையில்

### பக்தர்களின் வசதி கருதி

யாழ்ப்பாணம், மே 25

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருந்திருவிழாக்காலத்தில் பக்தர்களின் போக்குவரத்து வசதி கருதி இம்முறை 60 இற்கும் மேற்பட்ட படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

குறிகாட்டுவான்- நயினாதீவு இடையே இந்தப் படகுச் சேவைகளைச் சீரான முறையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் தற்போது நடைபெற்று வருகின்றன என்று படகுகளின் உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

இதற்கெனப் படகுகளைத் திருத்தியமைக்கும் பணிகளில் படகுகளின் உரிமையாளர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த முறை படகுச் சேவை போதாமையால் ஆலயத்துக்குச் செல்வதில் பக்தர்கள் தாமதங்களை எதிர்கொண்டனர். எனவே இம்முறை இந்தத் தாமதங்களைத் தவிர்ப்பதற்கு மேலதிக படகுகளைச் சேவையில் ஈடுபடுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது.

அத்துடன் இம்முறை படகுகளில் ஏற்றும் பயணிகளின் எண்ணிக்கையும் வரையறுக்கப்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அளவுக்கதிகமான பயணிகளை ஏற்றும் படகுகளின் அனுமதிப் பத்திரம் இரத்துச் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-17)

# வீட்டுக்குப் போக என்னை விடுங்கள்

### கடத்தப்பட்டு, மீட்கப்பட்ட சிறுவன் கதறல்

யாழ்ப்பாணம், மே 25

*"அம்மா! இனியும் என்னால் உங்களைப் பிரிந்திருக்க முடியாது. என்னை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போங்கள். கொத்தடிமையாக்கப்பட்டு இப்போது மீட்கப்பட்ட பின்னரும் குடும்பத்தாருடன் செல்ல முடியாமல் வைத்தியசாலையிலேயே வைத்திருக்கிறார்கள். நான் மீண்டும் என் தாய் மற்றும் சகோதரருடன் இணைந்து வாழ - வீட்டுக்குப் போக - வழிவிடுங்கள்". இவ்வாறு கண்ணீர் மல்கி தாயைக் கட்டிப்பிடித்துக்கொண்டு வைத்தியசாலையில் கதறினான் பரமநாதன் ரஜிராம் (வயது- 13). கல்லையும் கரையச் செய்தது இந்த காட்சி. நீதிமன்றில் நகர்தல் பத்திரம் சமர்ப்பித்து சிறுவனை இன்று விடுவிக்கவுள்ளதாக நன்னடத்தை அதிகாரிகள் தெரிவித்தனர்.*



சண்டிலிப்பாயைச் சேர்ந்த குறித்த சிறுவன் கடத்தப்பட்டு, முஸ்லிமாக மாற்றப்பட்டு, யாழ்.நகருக்கு மீண்டும் கொண்டுவரப்பட்டு புடைவை வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்ட போது கண்டுபிடிக்கப்பட்டான். ஏறக்குறைய ஒரு வருடத்துக்கு மேலாக கொத்தடிமையாக்கப்பட்ட சிறுவன் தற்போது மருத்துவப் பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டான்.

மருத்துவப்பரிசோதனையின் பின்னர் குறித்த சிறுவன் வீடு செல்ல அனுமதிக்கப்படுவான் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது. நேற்று மருத்துவப் பரிசோதனைகள் யாவும் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சிறுவனை அழைத்துச் செல்ல அவனது சகோதரனும் உறவினர்களும் வைத்தியசாலைக்கு வந்துள்ளனர். எனினும் நீதிமன்ற உத்தரவு இல்லாமல் சிறுவனை விடுவிக்க முடியாது என்று வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர். இதனால் நேற்று வீடு செல்லும் கனவுடன் இருந்த சிறுவன் ஏமாற்றம் அடைந்து கதறியழத் தொடங்கினான். விடுதிக்குச் செல்ல மறுத்ததுடன், தனது சகோதரனுடன் வீட்டுக்கு செல்ல விடுமாறு மன்றாடினான். ஏனினும் சட்டப்படியே இந்த விடயத்தை அணுக வேண்டியிருப்பதால் சிறுவன் நேற்று வீடுசெல்ல அனுமதிக்கப்படவில்லை.

இது குறித்து சிறுவர் நன்னடத்தை அதிகாரிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

குறித்த சிறுவன் தனது தாயாருடன் செல்ல விரும்பியதையடுத்து மல்லாகம் நீதிமன்றில் இன்று நகர்தல் பத்திரம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன் பின்னர் இன்று வெள்ளிக்கிழமை தாயாரிடம் அவன் ஒப்படைக்கப்படுவான்- என்றனர். இதேவேளை, சிறுவனைக் கடத்திய குற்றச்சாட்டின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்பட்ட அப்துல்லாஹ் மொஹமட் ஜமீல் மற்றும் காத்தான் குடியைச் சேர்ந்தவர்களான மொஹமட் சுல்தான் மொஹமட் றியாஸ், மொஹமட் முஸ்தப்பா மொஹமட் நஜீம் ஆகியோரில் 3 ஆவது நபரான நஜீப் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். மற்றைய இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ங)

சவுதி அரேபியா விமான நிலையத்தில்

الخطوط الجوية العربية السعودية
SAUDI ARABIAN AIRLINES



GROUND SERVICES
உடனடி தொழில் வாய்ப்பு

GENERAL WORKERS - 350 Nos.
பொது வேலையாட்கள் - 350 பேர்

சம்பளம் – SR 690/-

TEC. OPERATOR / DRIVERS - 50 Nos.
தொ.இயக்குனர் / சாரதிகள் - 50 பேர்

சம்பளம் – SR 1609/-

1 SR = Rs. 34/-

Terms & Conditions:

- உணவு, தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து இலவசம்.
- நாளொன்றுக்கு 8 மணித்தியால வேலையுடன், வாரத்தில் 1 நாள் விடுமுறை.
- 2 வருட ஒப்பந்த காலம்
- ஏனையவை சவுதி அரேபியாவின் தொழிலாளர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணம்
ரூபா : 80,000/- மட்டுமே அறவிடப்படும்

பாஸ்போட்டுடன் உடன் நேரே வாருங்கள்

உடன் தொடர்புகளுக்கு: 0779283535

QP Employment (pvt) Ltd
இல: 06, கெம்பல் டெரஸ், கொழும்பு - 10.
(பாஸ்போட் காரியாலயம் அருகில்) AL1316/Advt:/05/12

## '5 – எஸ்' செயற்றிட்டத்தில் யாழ்.மாவட்டமும் பங்கேற்பு

யாழ்ப்பாணம், மே 25

ஜப்பானிய அரசின் நிதி உதவியுடன் நாடளாவிய ரீதியில் சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களிடையே நடத்தப்படும் 5- எஸ் என்னும் செயற்றிட்டப் போட்டிகளில் இம்முறை யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆதார வைத்தியசாலைகள், சுகாதார வைத்திய அதிகாரிகள் பணிமனை போன்றவையும் பங்குபற்றவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிய வருகிறது.

கடந்த வருடம் நடத்தப்பட்ட போட்டிகளில் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளர் பணிமனை, மந்திகை ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஆகியவை தெரிவு செய்யப்பட்டு பெறுமதிமிக்க பரிசில்கள் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-9)

## பல்கலை மாணவர்களின் அச்சத்தைப் போக்குங்கள்

### பல்கலைக்குழு படைத்தளபதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

தொடர்ச்சியாக பல்கலைக்கழக மாணவர்கள் தாக்கப்படுவதால் ஏற்பட்டுள்ள அச்சநிலையைப் போக்க வேண்டும். இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட படைத் தளபதியுடனான சந்திப்பின்போது கோரினர்.

யாழ். சிவில் நிர்வாக அலுவலகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் துணைவேந்தர், பீடாதிபதிகள், மாணவர் சங்கங்களின் பெரும் பொருளாளர்கள், மாணவர் சங்கத் தலைவர்கள் அடங்கிய குழுவினர் படைத்தளபதியுடன் கலந்துரையாடினர். இதன்போது பல்கலைக்கழக மாணவர்கள் தொடர்ச்சியாக தாக்குதலுக்கு இலக்காவதால் எழுந்துள்ள அச்சநிலை பற்றி பல்கலைக்கழக குழுவினர் படைத்தளபதியிடம் எடுத்துரைத்தனர். இது தொடர்பாக உரிய கவனம் எடுத்து மாணவர்கள் சுமுகமான சூழ்நிலையில் கற்கும் வாய்ப்பை உருவாக்க ஒத்துழைப்பு வழங்குவேன் என்று படைத்தளபதி உறுதியளித்தார். (ங)

## ஒரு லட்சத்து 22 ஆயிரம் வாகனங்களுக்கு இந்த வருடம் வடக்கில் வரி அனுமதி

யாழ்ப்பாணம்,மே 25

வடமாகாணத்தில் ஒரு லட்சத்து 22 ஆயிரத்து 434 வாகனங்களுக்கு இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் வரையில் வரி அனுமதி பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று வடமாகாண மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த வருடம் கணினி மயப்படுத்தப்பட்ட புதிய பதிவுகளுக்கு அமைவாக வரி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டன. வடமாகாணத்தில் வவுனியா பிரதேச செயலர் பிரிவிலேயே அதிகளவான வரி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன என்று கூறப்பட்டது.

யாழ்.மாவட்டத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலேயே அதிக எண்ணிக்கையான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 81 ஆயிரத்து 156 வரி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தில் கரைச்சி உதவி அரச அதிபர் பிரிவிலேயே அதிக எண்ணிக்கையான வரி அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் மொத்தமாக 5 ஆயிரத்து 903 வரி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தில், வவுனியா நகர பிரதேச செயலர் பிரிவிலேயே, அதிகளவான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. வவுனியா மாவட்டத்தில் 4 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 22 ஆயிரத்து 766 வரி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மாவட்டத்தில் மன்னார் நகர பிரதேச செயலர் பிரிவிலேயே அதிக எண்ணிக்கையான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் 5 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மொத்தமாக 8 ஆயிரத்து 754 வரி அனுமதிப் பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் பிரிவில் அதிக எண்ணிக்கையான வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்தில் மொத்தமாக 3 ஆயிரத்து 855 வரி அனுமதிப்பத்திரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெலிக்கடை முன் 29இல் போராட்டம்

01↘ மறியல் போராட்டத்துக்கு அனைவரும் ஆதரவு வழங்கவேண்டும் என்று நவசமசமாஜக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

மேற்படி போராட்டத்தை நவசமசமாஜக் கட்சி, முன்னிலை சோசலிசக் கட்சி, ஜனநாயக மக்கள் முன்னணி, ஐக்கிய சோஷலிசக் கட்சி, சோஷலிசக் கட்சி, தியச கல்வி வட்டம், ஜனநாயகச் செயற்பாட்டு அமையம் என்பவை ஒன்றிணைந்து நடத்த முன்வந்துள்ளன.

ஆயுதம் தூக்கியவர்களைப் பயங்கரவாதிகள் என அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா அடையாளம் காண்பாரானால், இன்றைய அரசியல் தளத்தில் உள்ளவர்களில் அநேகர் பயங்கரவாதிகளாக அடையாளம் காணப்படுவர். இந்த நாட்டில் நடைபெற்ற ஆயுதக் கிளர்ச்சிகளில் சம்பந்தப்பட்டவர்கள் அரசியல் கட்சிகளில் முக்கிய தலைவர்களாக இன்றும் உள்ளனர். எனவே, பொறுப்பற்ற வியாக்கியானங்களை வெளியிடுவதைத் தவிர்த்துக் கொண்டு தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் நீதி-நியாயத்தைக் கடைப்பிடிக்குமாறே நவசமசமாஜக் கட்சி வலியுறுத்துகின்றது.

எனவே, சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாகத் தாக்கமான போராட்டச் செயற்பாடுகள் அவசியமாகின்றன. எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெற இருக்கும் மேற்படி போராட்டத்துக்கு சகலரினதும் ஒத்துழைப்பை நவசமசமாஜக் கட்சி எதிர்பார்க்கின்றது.

-இப்படி அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 'ஜெனரல்' பதவி மீண்டும் வழங்கப்படாது

01↘ முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் 'ஜெனரல்' பதவிநிலை மீண்டும் வழங்கப்படுவதென்பது சாத்தியப்படாத விடயமே' என்று அமைச்சரவையின் பதில் பேச்சாளரும் பிரதியமைச்சருமான லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்தார்.

இது குறித்து மேலும் அவர் தெரிவித்ததாவது:-

'சரத் பொன்சேகா இராணுவத் தளபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் இராணுவ நீதிமன்றத்தின் கீழ் சுமார் 7,500 பேருக்கு தண்டனை பெற்றுக்கொடுத்துள்ளார். அப்படிப்பட்ட ஒருவர் இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்புக் குறித்து நன்றாக அறிந்திருப்பார். சிறைத்தண்டனை அனுபவித்துவரும் ஒருவருக்கு மன்னிப்பு வழங்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. ஜனாதிபதியின் இந்த மன்னிப்பின் மூலம் தேர்தலுக்கான உரிமை தவிர்ந்த அனைத்து உரிமைகளும் சரத் பொன்சேகாவுக்கு கிடைக்கப்பெறுகின்றது.

விடுதலைப்புலிகளுடனான யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்குச் சரத் பொன்சேகாவின் தலைமைத்துவம் சிறந்து விளங்கியது. அதனாலேயே யுத்த வெற்றியின் மூன்றாம் ஆண்டில் அவர் விடுதலை பெற வேண்டும் என்று ஜனாதிபதி மன்னிப்பு வழங்கினார். இருப்பினும் இராணுவ நீதிமன்ற தீர்ப்பு விடயத்தில் ஜனாதிபதி ஒருபோதும் தலையிட மாட்டார்.

அதனால், இராணுவ நீதிமன்றினால் சரத் பொன்சேகாவிடமிருந்து பறிக்கப்பட்ட 'ஜெனரல்' பதவி மீண்டும் கொடுக்கப்பட வாய்ப்பு இல்லை' என்றார். (த)

## கனேடியத் தமிழர் கொலை: நால்வருக்கு விளக்கமறியல்

01↘ பாக கொழும்பிலிருந்து வந்த விசேட பொலிஸ் குழு விசாரணை செய்து வருகிறது. அவர்களால் 21ஆம் திகதி 5 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவரான சுயந்தன் என்பவர் அரச தரப்புச் சாட்சியாக மாறியதைத் தொடர்ந்து பொலிஸார் அவரைப் பொலிஸ் பிணையில் விடுவித்துள்ளனர். எஞ்சிய நால்வரையும் கிளிநொச்சி நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர்.

கண்டாவளையைச் சேர்ந்த அருளம்பலம் அகிலன், வவுனியாவைச் சேர்ந்தவர்களான அப்பாவு ஆனந்தராஜா, கல்லுச்சாமி பாலச்சந்திரன் (பாலா), அபயசிங்க முதியான் சலாகே மைக்கல் பிரதீப் குமார ஆகியோரே நேற்று நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இவர்களை அடுத்த மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டது. கொலைசெய்யப்பட்டவரின் வீட்டைக் காட்டியவர் தானே என்று அகிலனும் கோடரியால் அவரை தானே வெட்டினார் என்று பிரதீப் குமாரவும் தான் அவரை அடித்துத் துன்புறத்தினார் என்று பாலாவும் ஒப்புக் கொண்டுள்ளனர் எனப் பொலிஸார் கூறுகின்றனர். குற்றஞ்சாட்டப்பட்டிருப்பவர்களில் ஒருவரை மோட்டார் சைக்கிளில் ஏற்றி வந்து அந்த வீட்டுக்கு முன்பாக விட்டுச் சென்றார் என்று ஒப்புக் கொண்ட வவுனியாவைச் சேர்ந்த சுயந்தனே அரச தரப்புச் சாட்சியாக மாறி உள்ளார். (உ-06)

## குற்ற விசாரணை இலங்கை மீது வேண்டாம்

01↘ கொள்ளப்படும் முயற்சிகள் ஏற்கப்பட முடியாதவை என ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் சேகெய் லவ்றோவ், இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸைச் சந்தித்து பேசியபோது தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் 2011 இல் வெளியிட்ட அறிக்கையில் இரண்டு பக்கத்தினரும் மக்களுக்கு எதிரான யுத்தக் குற்றம் புரிந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் ஒன்றை நிறைவேற்றுவதில் அமெரிக்கா முக்கிய பாத்திரம் வகித்தமை இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவு பாதிக்கப்படக் காரணமாயிற்று.

இறைமையுள்ள இலங்கையின் சம்மதமின்றி அதன் மீது சர்வதேச விசாரணையைத் திணிப்பதும் ஐ.நா. பாதுகாப்புச்சபை விலக்கிவிட்டதும் மாபெரும் தவறாகும். அத்துடன் இது மனித உரிமை விடயத்தில் எமது அபிலாஷைகளை மறுதலிப்பதாகவும் உள்ளது என லவ்றோவ் கூறினார்.

யுத்தக் குற்றம் தொடர்பான விடயங்களைக் கவனிக்க என இலங்கை ஒரு நம்பத் தகுந்த ஆணைக்குழுவை அமைத்துள்ளது எனவும் அவர் வலியுறுத்தினார். (த)

## மாணவியை பலாத்காரம் செய்ய முயன்ற சிப்பாய்

01↘ பிடித்து இராணுவக் காவலரணுக்கு அருகிலுள்ள வீட்டுக்குள் இழுத்துச் சென்று பாலியல் வன்புணர்வு மேற்கொள்ள முயன்றுள்ளார். சிறுமி குளறிய சத்தத்தைக் கேட்ட அருகில் வசித்த இளைஞர் ஒருவர் சம்பவ இடத்துக்கு வந்து கூக்குரலிட்டு ஊரைக் கூட்டியுள்ளார். உடனே அங்கு திரண்ட மக்கள் அந்தப் பேர்வழியைப் பிடித்து நையப் புடைத்துள்ளனர்.

உடனடியாகச் சம்பவ இடத்துக்கு வந்த சிவில் பாதுகாப்புக் குழுவினர் அந்த நபரைப் பொறுப்பேற்று பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

வவுனியா, மருத்துவமனையில் சிறுமி. மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார். (க-402)

## எப்போது வருவார் அப்பா?

01↘ ஆனந்தன், வினோ நோகராதலிங்கம், ஈ.சரவணபவன், நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.சிறிரங்கா, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோரும் வடக்கு - கிழக்கைச் சேர்ந்த அனைத்து உள்ளூராட்சி அமைப்புக்களின் தலைவர்கள், உபதலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இந்த சத்தியாக்கிரகத்தின் இறுதியில் உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அரசு தமிழர்களை போராட்டம் நடத்த வேண்டும் என்று ஊக்குவிக்கிறது. அது தான் அவர்களின் விருப்பம் என்றால் போராடுவதற்கும் நாம் தயார். சிறைகளில் உள்ள உறவுகளை விடுவிக்க அரசுக்கு விருப்பம் இல்லை. இதனை நாம் தொடர்ந்தும் அனுமதிக்க முடியாது என்றார்.

இதில் உரையாற்றிய மனோ கணேசன், சிறையில் வாடும் உறவுகளை ஜூன் 24ஆம் திகதிக்கு முன்னர் விடுவிக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நாம் நாடுதழுவிய ரீதியில் போராட்டங்களை மேற்கொள்வோம் என்றார். நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோரும் உரையாற்றினர். மாலை 4 மணிக்கு சத்தியாக்கிரகப் போராட்டம் முடிவடைந்தது. (த-400)

## யாழ்., வன்னிப் பகுதிகளில் படையினரைக் குறையுங்கள்

01↘ குக் கொண்டுவந்து தம்மைப் பாதிக்கும் நாளாந்த விடயங்கள் தொடர்பான முடிவுகளை பொதுமக்கள் மேற்கொள்ள வழி செய்யப்பட வேண்டுமெனவும் தூதுவர் தெரிவித்தார். விடுதலைப் புலிகள் அமைப்பு பிரிட்டன் உட்பட ஏனைய உலக நாடுகளில் தடை செய்யப்பட்டதொரு அமைப்பாகத் தொடர்ந்திருப்பது நல்ல விடயம் எனவும் பிரிட்டன் தூதுவர் றன்கின் தெரிவித்தார்.

முன்னைய போர் இடம்பெற்ற பகுதிகளிலுள்ள இராணுவ நிலைகள் மூடப்பட வேண்டுமென்ற கோரிக்கையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது போர் வெற்றித்தின உரையில் நிராகரித்திருந்தார். அது தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானது எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

நாம் இராணுவ முகாம்களை வடபகுதியிலிருந்து அகற்றினால் எமது தேசிய பாதுகாப்பு குறித்த அக்கறையைக் குறைத்துக்கொள்வதாய் அமையும். அதை எம்மால் செய்ய இயலாது என்று அவர் கூறியிருந்தார். தமது கட்சி வடபகுதியில் போர் இடம்பெற்ற பகுதிகளிலிருந்து இராணுவ முகாம்களை அகற்றுமாறு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கப்போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கடந்த வாரம் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவும் தனது அறிக்கையில் கூட வடபகுதியிலிருந்து இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## பேச்சை உடன் உயிர்ப்பியுங்கள்

01↘ குறிப்பிட்டார். இதுதொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:-

உள்நாட்டுப் போர் முடிவடைந்து மூன்று ஆண்டுகள் கடந்துள்ள நிலையிலும், நாம் நல்லிணக்கத்தை நோக்கி இன்னும் பயணிக்கவில்லை. எனவே, அந்த இலக்கை நோக்கிப் பயணிக்கவேண்டியுள்ளது. அனைத்துத் தரப்புகளும் ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்று எட்டப்படவேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. யுத்தம் நடைபெற்ற காலம்தொட்டு இன்றுவரை அதுவே ஐ.தே.கவின் கருத்தாக இருந்து வருகின்றது.

அனைத்து சமூகமும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வொன்றை எட்டும் பட்சத்திலேயே எம்மால் நிரந்தர சமாதானத்தை நோக்கி நகரக்கூடியதாக இருக்கும். தேசிய இனப்பிரச்சினைக்குப் பொதுவானதொரு தீர்வை நோக்கி இதுவரையில் பயணிக்க முடியாமல் போனது கவலையளிக்கின்றது.

அரசியல் தீர்வை எட்டும் முனைப்புடன் அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குமிடையில் நடைபெற்று வந்த இரு தரப்புப் பேச்சுகள் ஸ்தம்பிதமடைந்தமையானது தீர்வொன்றை எட்டுவதில் ஏற்பட்ட பாரிய பின்னடைவாகும்.

அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபாரிசுகளை அமுல்படுத்தவேண்டும். அந்த அறிக்கையை உரிய வகையில் பயன்படுத்த வேண்டும். அதனைச் செய்யத் தவறும் பட்சத்தில் இலங்கை சர்வதேசத்திலிருந்து தனிமைப்படுத்தப்படும் நிலைக்குத் தள்ளப்படும்.

நல்லிணக்க அறிக்கையின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு அரசு எடுத்துள்ள மற்றும் எடுக்கவுள்ள நடவடிக்கைகளை விவரிக்கும் விரிவான செயற்றிட்டத்தை வெகு விரைவில் சமர்ப்பிக்குமாறு ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 19ஆவது கூட்டத்தின்போது நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவானது கலந்துரையாடலை மேற்கொள்ளும் வழிமுறையாக இருக்க வேண்டும் என்று அரசு கூறுகின்றது. அதேவேளை, நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆலோசனைகளை வலுவூட்டி அவற்றுக்கு அங்கீகாரத்தை பெற்றுக் கொடுக்கும் பட்சத்திலேயே நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் ஆராயப்படும் விடயங்கள் பயனுள்ளவையாக அமையும் என்ற நிலைப்பாட்டிலேயே ஐக்கிய தேசியக் கட்சி இருக்கிறது.

அதனால்தான் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர், ஜனாதிபதி ஆகியோருடன் பேச்சுகளை நடத்தினோம். நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் பங்கேற்குமாறு எதிர்க்கட்சிகளிடம் அரசு விடுத்துள்ள வேண்டுகோளுக்கிணங்க ஐ.தே.க. தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது குறித்து திட்ட வரைவொன்றைத் தயாரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது - என்றார் ரணில்.

## அரசுக்கு ஒரு மாத அவகாசம் உண்ணாவிரதம் ஒத்திவைப்பு

01↘ அவர் மேலும் கூறியவை வருமாறு -

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் அமைச்சர் கூறிய வாக்குறுதியை கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்டிருந்த கைதிகளிடம் எடுத்துக் கூறினோம். என்னுடன் நாடாளுமன்ற உறுப்பினர்களான விநாயகமூர்த்தி மற்றும் சிறிதரன் ஆகியோரும் அங்கு வந்திருந்தனர்.

இந்த வாக்குறுதிகளை தாங்கள் எப்படி நம்புவது என்று கைதிகள் கேட்டார்கள். நாங்கள் கூறினோம் நீங்கள் வாக்குறுதியை நம்பி உண்ணாவிரதத்தை கைவிடத் தேவையில்லை. ஆனால், உங்கள் பிரச்சினைகளை ஒரு மாதகாலத்தில் தீர்த்து வைப்பதாக வாக்குறுதி தந்திருக்கிறார்கள். எனவே, அந்த ஒரு மாத காலத்திற்காவது உங்களின் உண்ணாவிரதத்தைக் கைவிடுங்கள் என்று கேட்டுக்கொண்டோம்.

நாங்கள் விடுத்த இந்தக் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட கொழும்பு விளக்கமறியல் சிறையிலுள்ள அரசியல் கைதிகள் தங்களது உண்ணாவிரதத்தினை ஒரு மாத காலத்திற்கு ஒத்தி வைப்பதாக தெரிவித்தனர்.

இவர்களது முடிவினை ஏனைய சிறைச்சாலைகளில் உண்ணாவிரதமிருக்கும் கைதிகளுக்கும் அறிவித்திருக்கிறோம். எனவே, அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் ஒரு மாத காலத்திற்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது - என்றார் அவர். (த-5)

# வடக்கு சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு

01↘ அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சந்தேகத்தின் பேரில் கைதான இளைஞர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். அவர்கள்தொடர்பில்விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

நான் இராணுவத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கு முன்னர், 2010 ஆம் ஆண்டுக்குள் மீளக்குடியேற்றத்தை எப்படி முடிப்பது என்பது பற்றியும் எந்தெந்த இடங்களில் படை முகாம்களை அகற்றுவது என்பது பற்றியும் தமிழ்மக்களை எதுவித தொல்லைகளுமின்றி எப்படிக் குடியேற்றுவது என்பது தொடர்பிலும் திட்டங்களை வகுத்திருந்தேன். அந்தத் திட்டங்களை அவர்கள் அப்போது வெறுத்தனர். ஆனால் 2012 அதாவது இன்றுவரை இவர்களால் ஒன்று கூடச் செய்ய முடியாமல் போயுள்ளது.

வடக்கில் இராணுவ முகாம்கள் அகற்றப்பட வேண்டியது கட்டாயமாகும். இராணுவ முகாம்களால் மக்களுக்கு சிரமங்கள் ஏற்படுமாயின் உண்மையில் அது பிரச்சினை தான். அதே போல், கிட்டத்தட்ட 12 ஆயிரம் முன்னாள் போராளிகளுக்கு நாம் புனர்வாழ்வளித் திருக்கிறோம்.

அவர்களுக்குச் சரியான புனர்வாழ்வளிக்கப்பட்டதா? அவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளார்களா என்பதையும் பார்க்கவேண்டி இருக்கிறது. மீண்டும் ஒரு கிளர்ச்சி ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை எடுத்த பின்னர் இராணுவ முகாம்களைப் படிப்படியாக அகற்றலாம்.

வடக்கில் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினரின் தலையீடு இருக்கிறது என்பதை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தின் தலையீடு கூடாது. அது முழுமையாக நிறுத்தப்பட வேண்டும். இராணுவம் இராணுவத்தின்வேலையை மட்டும்தான்செய்யவேண்டும்.

கடந்த மூன்று வருடங்களில் இராணுவத்தை இவர்கள் சிவில் நிர்வாகத்திலிருந்து விலக்கியிருக்கலாம். இப்போது இவர்களால் போடப்பட்டிருக்கும் அதிகாரிகள் கூட தகுதிவாய்ந்தவர்கள் அல்லர். அரசியல் அடிவருடிகளைத்தான் இவர்கள் நியமித்துள்ளனர். யாழ்ப்பாணத்தைப் பாருங்கள். இது தான் நிலைமை. கொள்கை இல்லாமல் போனால் இப்படித்தான் இருக்கும் - என்றார். (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**WWW.tourismjaffna.com**



யாழ். நகரில் விடுதிகள், உணவகங்கள், சுற்றுலாத்துறை சார்ந்த நிறுவனங்கள் மற்றும் இதர நிறுவனங்களுக்கும் **www.tourismjaffna.com** என்ற இணையத்தள முகவரியுடன் இணைய ஓர் அரிய சந்தர்ப்பம் சுற்றுலாத்துறையில் செயற்படுபவரும் இணைந்து கொள்ள முடியும் யாழ். நகரின் அழகைக் கண்டு மகிழ ஒரு புதிய வழி.

*"புதுமைகள் கொண்டு புதுயுகம் செய்வோம்"*

மேலதிகவிவரங்களுக்கு:-
**0777807078, 0752898900**

# இளம் தாயின் உயிரை பறித்தது வறுமை

யாழ்ப்பாணம், மே 25

வறுமை பறித்தது ஓர் உயிரை. வறுமையில் வாடிய இளம் குடும்பப்பெண் ஒருவரே தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

வசாவிளான் சுதந்திரபுரத்தைச் சேர்ந்த மூன்று பெண் குழந்தைகளின் தாயான இவர், வறுமையின் பிடியில் சிக்கி, மனவிரக்திக்கு ஆளாகி இருந்தார் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் அர்ச்சுனன் தயாநிதி (வயது-24) என்ற இளம் தாய் ஆவார்.

இவர் தனது வீட்டில் கடந்த ஞாயிற்றுக் கிழமை தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக்கொண்டுள்ளார். உடனடியாக அச்சுவேலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையிலேயே சிகிச்சை பயனளிக்காது நேற்றுமுன்தினம் புதன்கிழமை மரணமானார்.

விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(ஒ-4)

## பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில்

## பாரதியார் பல்கலைக்கழக ஊடக பட்டப்படிப்பு

பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் பாரதியார் பல்கலைக்கழக பட்டப்படிப்புகளை மேற்கொள்ள விரும்பவோர் 26 மே 2012 சனிக்கிழமை மாலை கல்வி சான்றிதழ் நான்கு புகைப்படங்கள் கட்டணத்துடன் நேரடியாக வருகைதரவும்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்
இல,891, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி : 021 222 6085, 021 7200898

(C 362)

## வாடிக்கையாளர்களுக்கு ஓர் அன்பான அறிவித்தல்

யாழ். பஸ் நிலையத்தில் இயங்கும் எம்.ரி.என். விளம்பர நிறுவனம் 23.05.2012 தொடக்கம் எதிர்வரும் (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை வரை சேவையினை விஸ்தரிக்கும் நோக்குடனும், திருத்த வேலை காரணமாகவும் விளம்பர சேவை இடம்பெறமாட்டாது. எதிர்வரும் (28.05.2012) திங்கட்கிழமை முதல் எமது விளம்பர சேவை வழமைக்குத் திரும்பும். இதனால் ஏற்படும் சிரமத்துக்கு வருந்துகின்றோம்.

க. திவாகர்
நிர்வாக இயக்குநர்.
0773500710

(18519)(34-14)

## கணினிகள் மலிவு விற்பனை

Intel 3.0 HT LGA Processor
Intel Mother Board
1GB DDR II Ram
256MB PCI Express VGA
80 GB SATA Hard Disk
17" Samsung LCD (squre)
DVD Writer

Free 4GB Pendrive

**Rs. 22,500/=**

எங்குமில்லாத விலையில்....!

| | |
|---|---|
| 14.4 Dongle -4100/= | 512 DDR I RAM - 1300/= |
| 7.2 Dongle- 3500/= | 512 DDR 2 RAM - 850/= |
| Webcam - 600/= | 80GB SATA HDD - 2750/= |
| DVD Writer -1600/= | 3.0 LGA Proc - 2500/= |
| Headphone - 250/= | LGA Board - 3500/= |

26-05-2012 - 31-05-2012 வரை மட்டுமே

தொடர்புகளுக்கு...

நல்லூர்
174/16 கோவில் வீதி,
021 222 4692
077 9689043

உடுவில்
58 டச் றோட்
உடுவில்
0777 940939

(18517)

PC MATE SYSTEMS
Computer Sales & Repair

## கேள்வி கோரல்

கட்டடம் ஒன்றை இடித்து அகற்றுவதற்கான கேள்வி கோரப்படுகின்றது. உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:-
021 222 2393,
077 0260404

(18510) (2-6-7)

## வாடகைக்கு விடப்படும்

NP LJ - D xxxx
இலக்கமுடைய கூலர் வாகனம் (AC யுடன்) வாடகைக்குண்டு. தனியாரும் வர்த்தக நிறுவனங்களும் தொடர்பு கொள்ளலாம்.



தொடர்பு:-
0776515929, 0750420399

(18512) (2-6-7)

## கண்ணீர் அஞ்சலி



**பிரம்மஸ்ரீ குகானந்தசர்மா இரத்தினேஸ்வரஜயர்**

(ஓய்வு பெற்ற அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)

*அவர்கள் 24.05.2012 வியாழக்கிழமை காலமாகிவிட்டார். இவர் யா/மகாஜன்க் கல்லூரியின் புகழ் பூத்த பழைய மாணவன் ஆவார்.*

*ஆசிரியராக, உபஅதிபராக, அதிபராக நீண்ட காலம் சேவையாற்றிய மகாஜனனின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.*

*அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

*ஓம் சாந்தி ! ஓம் சாந்தி ! ஓம் சாந்தி !*

அதிபர், பிரதி அதிபர்,
உதவி அதிபர், ஆசிரியர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்,
மாணவர்கள், பெற்றோர்கள்,
பழையமாணவர்கள்.

யா/மகாஜனக் கல்லூரி,
தெல்லிப்பழை.

(C355) (6,9,10)

## பணிப்பெண் தேவை

குழந்தையை பராமரிப்பதற்கு 40 வயதுக்கு மேற்பட்ட பெண் மணி தேவை. சம்பளம் - 10,000/-
தொடர்பு - 0776752865
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

(18523)(34-14)




(சி-354)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் சிரேஷ்ட ஆசிரியர்
இ. பிரதாபன் (சர்மா) அவர்களின் தந்தை
**குகானந்தசர்மா இரத்தினேஸ்வர ஐயர்**
நேற்று (24.05.2012) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.
அன்னாரின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ அருணோதயக்கல்லூரி.
அளவெட்டி.

(சி-358)(34-14)

## வேலைக்கு ஆள் தேவை

நெல்லியடி பிரதான வீதியில் உள்ள பிரபல்யமான புடைவைக்கடைக்கு வேலைக்கு இருபாலாரும் தேவை.
கவர்ச்சியான வேதனம் கொடுக்கப்படும்
நேரில்வரவும்
தொலைபேசி : 077 5696817

(16995)(6-7-8)

## வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம் அராலி நிலையம்

## இலவச தொழில் திறன் பயிற்சி வகுப்பு

**பாடசாலையை விட்டு விலகியோருக்கான**

1) தையல் பயிற்சி வகுப்பு.
2) அடிப்படைக் கணினி அறிவு பயிற்சி நெறி.
3) பன்ன வேலைக் கைப்பணி பயிற்சி நெறி.

மேற்படி பயிற்சி வகுப்புக்கள் அராலி மத்தி, அராலி பயிற்சி நிலையத்தில், தொடங்கப்படவுள்ளன. ஆர்வமுள்ளவர்கள், தமது பெயர் விவரங்களை, 31.05.2012 இற்கு முன்,
திரு.வி.சிவஞானபோதம். (ஓய்வு நிலை அதிபர்),
அராலி மத்தி,

அராலி எனும் முகவரியில் பதிவு செய்துகொள்ளலாம். தையல் பயிற்சி வகுப்பு ஆசிரியர் பதவிக்கான வெற்றிடமும் உள்ளது. அராலிப் பிரதேசத்தைச் சேர்ந்த தகுதியானவர்கள், தமது தகுதிச் சான்றிதழுடன் மேற்படி முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

தலைவர்,
வாழ்க்கைத் திறன் மேம்பாட்டு நிலையம்.

(சி-352)(2-6-7)

## வலி. தென்மேற்கு பிரதேசசபை- மானிப்பாய்

## வேலைகளுக்கான கேள்வி அறிவித்தல்-2012

பின்வரும் வேலைகளுக்கு இக்ராட் (ICTAD) பதிவுடைய ஒப்பந்தக்காரர்களிடம் அறிவுறுத்தலிலுள்ள வைப்புப் பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :- 28.05.2012 - 11.06.2012 பி.ப. 2.00 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :- 12.06.2012 - நண்பகல் 12 மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி :- 12.06.2012 பி.ப. 2.00 மணி
(திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச்சபைக்கு அதிகாரமுண்டு.
5. மூல கேள்விப்பத்திரத்தை அரக்கு முத்திரையிட்டு தவிசாளர், வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய் என்ற முகவரிக்கோ அல்லது தலைமையலுவலகத்திலுள்ள கேள்விப்பெட்டியிலோ 2ஆம் பந்தியில் குறிப்பிட்டதற்கமைவாக கிடைக்கக் கூடியதாக அனுப்பப்படல் வேண்டும். ஒரு பிரதியை பிராந்திய உ.உ. ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
6. வேலைகள் யாவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட திகதியிலிருந்து இருமாத காலத்துக்குள் நிறைவேற்றப்படல் வேண்டும்.
7. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

| இல | வேலை விவரம் | இக்ராட் தரம் | கேள்வி வைப்புப் பணம் | கேள்விப்பத்திரக் கட்டணம் | Vat வரி |
|---|---|---|---|---|---|
| 1 | சங்கானை ஆஸ்பத்திரி வீதி, புனரமைப்பு | C 9 | 15300.00 | 1000.00 | 142.40 |
| 2 | வரகுசாட்டி வீதி, புனரமைப்பு, நவாலி. | C 9 | 10300.00 | 1000.00 | 142.40 |
| 3 | புக்கைப்புலோ வீதி, புனரமைப்பு, மாதகல். | C 9 | 13700.00 | 1000.00 | 142.40 |

திரு. அந்தோனிப்பிள்ளை ஜெயநேசன் (தவிசாளர்),
வலி. தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.
25.05.2012.

(C356) (6,14,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE HALO TRUST

# சாரதிக்கான பதவி வெற்றிடம்

ஹெலோ ரஸ்ட் ஆனது பிரித்தானியாவை தள மாகக் கொண்டு உலகளாவிய ரீதியில் 10 நாடுகளில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இலங்கையில் 2002 ஆம் ஆண்டு தொடக்கம் மிதிவெடிகள் மற்றும் வெடிக்கத்தக்க பொருள்களை அகற்றிக்கொண்டிருக் கின்றது.

ஹெலோ ரஸ்டின் எதிர்கால வேலைக்காக சாரதி களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவர்களின் அத்தியாவசிய சேவைகளாவன, மிதிவெடி அகற்றும் அணிகளை மிதிவெடித் தளத்துக்கு நகர்த்திச் செல்வதும், அங்கு விபத்து நிகழ்ந்தால் அம்புலன்ஸ் சேவை வழங்குவதும் ஆகும்.

அனைத்து விண்ணப்பதாரிகளும் AD ஓட்டுநர் உரிமம் வைத்திருக்க வேண்டும்.

ஆர்வமுள்ளவர்கள் உங்களுடைய சுயவிவரக் கோவை மற்றும் தொடர்பு கொள்ளவேண்டிய விவ ரங்களுடன் அனுபவமுள்ளவர்கள் தங்கள் விவரங் களை கீழ் உள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும்.

ஹெலோ ரஸ்ட், 450, திருநகர் மேற்கு,
கிளிநொச்சி.

அனைத்து விண்ணப்பங்களும் 31 வைகாசி 2012 வியாழக்கிழமைக்கு முன்னதாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(16840) (6,9,10)


## மாற்றுத் திறனாளிகளுக்கு சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவது குறித்த செயலமர்வு

தென்மராட்சி, மே 25

யாழ். மாவட்டத்தில் உள்ள மாற்றுத் திறனாளிக ளுக்காக மாற்றியமைக்கப்பட்ட வாகனங்களுக்கு சாரதிய அனுமதிப்பத்திரம் வழங்குவது தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 31 ஆம் திகதி காலை 8.30மணிக்கு யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள விசேட வளவாளர் கள் வருகை தரவுள்ளதால் பிரதேச செயலர் பிரிவுகளில் உள்ள தகுதியுடைய பயனாளிகளை அந்தந்தப் பிரிவு கிராம அலுவ லர் ஊடாகத் தெரியப்படுத்தி செயலமர்வுக்கு அனுப்பி வைக்கு மாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பயிர்களை அழித்த மாடுகள் பிடிபட்டன

தென்மராட்சி,மே 25

சாவகச்சேரி கல்வயல் விளைவேலி தோட்டங்களில் பயிர் அழிவுகளை ஏற் படுத்திய நான்கு மாடுகள் தோட்ட உரிமை யாளர்களால் பிடிக்கப்பட்டு கல்வயல் கமக் கார அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மாடுகளின் கொம்புகளில் பட்டுத் துணி கட்டப்பட்டுள்ளது. மாடுகளின் உரி மை யாளர் ஒரு வார காலத்தினுள் பயிர் அழிவு நட்டஈடு மற்றும் பரா மரிப்புச் செலவு ஆகிய வற்றைச் செலுத்தி மாடுகளை மீட்டுச் செல்லுமாறும் தவறின் சாவகச்சேரி கமநல சேவைகள் நிலையப் பெரும்பாக உத்தி யோகத்தரின் அனுமதி யுடன் பகிரங்க ஏலத் தில் விற்கப் படுமென வும் அமைப்பின் செய லாளர் வீ.கே.வேதநாய கம் தெரிவித்துள்ளார்.

(ம-9)




புலமைப் பரிசில் பெற்ற பாராட்டும் 11 ஆவது பிறந்தநாள் வாழ்த்தும்

நாகதாசன் - ராகினி
தம்பதியாரின் ஏக புதல்வன்
செல்வன் சதுசன்
10 ஆம் அகவைதனில்
புலமையில் பரிசு பெற்றாய்
இன்று 11 ஆம் அகவை
பூர்த்தி செய்யும் நீர்
பல்கலையும் கற்று
பார்போற்ற வாழ வாழ்த்தும்
சேர் மாமா (குணம் மாமா) குடும்பத்தினர்.
கிளிநொச்சி.

(16883)(6-9-7)





31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

தில்லைநாதன் பகவதியம்மா

கடந்த 26.04.2012 வியாழக்கிழமை சிவபதம் அடைந்த எங்கள் குடும்பத் தலைவி அமரர் தில்லைநாதன் பகவதியம்மா அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (26.05.2012) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் நயினாதீவு புனித கங்காதரணி தீர்த்தக் கரையிலும் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் மு.ப. 11.00 மணிக்கு எமது இல்லத்திலும் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் குடும்ப சமேதராய் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் சடங்கில் பங்குகொண்டோர்க்கும் அவரது மறைவுச்செய்தி அறிந்து பல வழிகளிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக் கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

8 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(18504) (6.9.10)

குடும்பத்தினர்.



தசாக கிருஹயக்ஞ அழைப்பு



சாம்பசிவக்குருக்கள்
இராஜேஸ்வரிஅம்மா

நிகழும் நந்தனவருடம் வைகாசி மாதம் 4 ஆம் நாள் (17.05.2012) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த, அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான பரம்பரை சிவாச்சாரியார் குடும்பத்தலைவி அமரர் சாம்பசிவக்குருக்கள் இராஜேஸ்வரி அம்மா அவர்களின் ஆத்ம சாந்திக்கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெற உள்ளன.

தசாகம் - 26.05.2012 சனிக்கிழமை மு.ப. 10 மணி
மாசியம் - 27.05.2012 ஞாயிற்றுக்கிழமை மு.ப.9 மணி
சபிண்டீகரணம் - 28.05.2012 திங்கட்கிழமை மு.ப. 9 மணி
சமராதனை - 29.05.2012 செவ்வாய்க்கிழமை மதியம் 12 மணி

மேற்படி நிகழ்வுகளில் உற்றார், உறவினர் மற்றும் அம்பிகை அடியார்கள் அனைவரையும் அம்மாவின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொண்டு சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

அராலி தெற்கு, அராலி

(18509(6-7-8)

மகள், பெறாமக்கள்,
அம்பாள் பரிபாலன சபையினர்



care

CARE International has over 60 years of experience working all across Sri Lanka in emergency, recovery, rehabilitation and development programming. CARE attempts to address the root causes of poverty, vulnerability, marginalization and exclusion. Building capacities of communities, promoting networking and good governance within state and non-governmental organizations has become an integral part of CARE's long term strategy. Currently CARE is implementing LIFT 2 (Local Initiatives for Tomorrow) project to strengthen communities by building the capacities of LIG/CBOs among conflict affected communities to undertake activities that address discrimination and rights barriers, reduce conflict, and improve livelihoods.

**Marketing Advisor – LIFT 2 (Jaffna, Polonnaruwa, Batticaloa)**

CARE is currently seeking the services of three (3) qualified and dynamic individuals to fill in as Marketing Advisors for the LIFT 2 project located in Jaffna, Polonnaruwa and Batticaloa. LIFT 2 project aims to build the capacities of community-based organizations by strengthening social cohesion, livelihood security and disaster preparedness of the daily wage labour, small holding farmer and capture fishing communities in the above areas.

The Marketing Advisor will specifically examine the local context in relation to the LIFT2 target groups to identify the marketing opportunities in the selected district of operation. (Jaffna,Batticaloa, Polonnaruwa.) He/She will work with the Local Initiative Groups (LIGs) formed through LIFT 2 project, to identify and initiate market linkages, advice on income generating activities and build capacities among the project beneficiaries and field staff to secure and enhance livelihoods.

**Requirements of the post**

- 3 years or more experience in the field of Rural Marketing Value Chain strengthening
- Sound understanding of conflict affected communities, their needs and present market dynamics.
- Expertise in identifying market linkages, developing producer networks, addressing market related issues faced by rural communities.
- English speaking and writing skills
- Fluency in Sinhala (Polonnaruwa) and Tamil (Jaffna, Batticaloa) essential
- Strong communication, networking and public relation skills
- Computer literacy
- Comprehensive report writing & analytical skills
- Ability to work under pressure and perform under difficult circumstances

The position will be based in the selected district (Jaffna, Polonnaruwa or Batticaloa).

Appointment will be for a period of 6 months commencing in mid June 2012.

Suitably qualified candidates are encouraged to apply with names, addresses, and telephone numbers of three non-related referees within 07 days of this advertisement. **The application should contain a CV and a one-page write up on how you meet the requirements of the position.**

The post and district applied for should be indicated on the top left-hand corner of the envelope. We thank all applicants, but only the short-listed candidates will be notified.

**Women are highly encouraged to apply.**
**CARE is an equal opportunity employer**

**Human Resources Unit**
**CARE INTERNATIONAL SRI LANKA**
**7A, Gregory's Road,**
**Colombo 7**
**Email: extcv@care.lk**

*Canvassing will be an immediate disqualification*

(C350) (6,7,10)



13% 12 மாதம்

12.5% 03 மாதம்
வ.வ.வீ. 13.10%

மிகச்சிறந்த வங்கியிலிருந்து மிகச்சிறந்த வட்டி

அண்மையிலுள்ள வங்கிக்கிளையை நாடுங்கள் அல்லது தகவல் நிலையத்தை தொடர்புகொள்ளுங்கள்:011-2353353

நிலையான வைப்புக்கள்

COMMERCIAL BANK

(C54)

*நியந்தனைகளுக்கு உட்பட்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# ஆணைக்குழு பரிந்துரைகளும் அரசின் செயல் திட்டமும்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் மீள்நல்லிணக்கம் தொடர்பான ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக அமெரிக்க ராஜாங்க செயலர் ஹிலாரி கிளின்டனை வொஷிங்டனில் சந்தித்துப் பேசுவதற்கு இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இங்கிருந்து புறப்படுவதற்கு முன்னர் செயல் திட்டமொன்றை தயாரித்துக் கொண்டு சென்றதாக அப்போது இங்குள்ள ஊடகங்கள் எல்லாம் தெரிவித்திருந்தன. அவர் புறப்படுவதற்கு முன்னரே அரச தரப்பு கட்சிகளின் கருத்துக்களையெல்லாம் அறிந்து ஆராய்ந்து செயல் திட்டமொன்றைத் தயாரித்துக் கொண்டு சென்றதாகப் பலரும் கருதியிருந்தார்கள்.

அரசின் செயல் திட்டமானது அமெரிக்காவுக்குக் கையளிக்கப்படுவதற்கு முன்னர் இந்த நாட்டு மக்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட வேண்டும்; நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டும் என்றெல்லாம் எதிர்க்கட்சிகள் அப்போது தூள் கிளப்பிக் கொண்டிருந்தன.

ஆனால் அதைப் பற்றியெல்லாம் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளாமல் அமெரிக்காவுக்குச் சென்று ஹிலாரி கிளின்டனைச் சந்தித்துக் கலந்துரையாடல்களிலும் பீரிஸ் கலந்துகொண்டார். அதன் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அமெரிக்க தரப்பிடம் செயல்திட்டம் எதையும் கையளிக்கவில்லை என்று பீரிஸ் அடித்துக் கூறியதாகச் செய்தி வந்திருந்தது. ஆனால் அன்றைய தினம் ராஜாங்க அமைச்சில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில் பீரிஸ் இலங்கை அரசின் செயல் திட்டமொன்றை வழங்கினார் என்பதை அந்த அமைச்சின் பேச்சாளரான விக்டோறியா நூலன்ட் தெரிவித்தார். ஊடகங்களுக்கு நூலன்ட் தெரிவித்த கருத்து பின்வருமாறு அமைந்திருந்தது.

இலங்கை வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸுடன் ராஜாங்கச் செயலர் அன்று காலை 45 நிமிட நேரம் சந்திப்பொன்றை நிகழ்த்தினார். நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் தொடர்பான விரிவானதும் பாரதூரமானதுமான தமது அணுகுமுறையை பீரிஸ் வெளியிட்டார் மற்றும் இது தொடர்பான திட்டங்களையும் முன்வைத்தார். அத்துடன் அதனை அதிகம் வெளிப்படையாக்கவும் இலங்கையர்களும் வெளியிலுள்ளவர்களும் அறிந்துகொள்வதற்கான திட்டங்களையும் அதனைச் செயல்படுத்தும் விடயத்தில் அரசின் எண்ணத்தையும் வெளியிட்டார். ராஜாங்கச் செயலர் உண்மையாக வெளிப்படைத்தன்மையை, திறந்த பொதுநடைமுறையை நல்லிணக்க ஆணைக்குழு விடயத்தில் மட்டுமன்றி அதன் செயல்பாட்டிலும் மற்றும் பொறுப்புக் கூறும் விடயத்திலும் கடைப்பிடிக்க வேண்டும் என்று ஊக்கப்படுத்தினார். நல்லிணக்கத்தையும் பொதுமக்கள் நம்பிக்கையையும் இலங்கையில் மட்டுமன்றி இலங்கைக்கு வெளியிலும் கட்டியெழுப்ப வேண்டும். அதன் மூலம் அந்த நாட்டை குணமடையச் செய்வதற்கு உண்மையில் வேகமாக செயல்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்.

அவர் மேலும் அது நல்ல திட்டம், இப்பொழுது நீங்கள் அதனைப் பகிரங்கப்படுத்த வேண்டும். உங்கள் மக்களுக்கு , உலகுக்கு முன்னேற்றத்துக்கான உறுதியான நடவடிக்கைகளைக் காட்ட வேண்டும் என்று கூறினார்.

அமெரிக்காவில் வெளியாகியுள்ள இந்தத் தகவல்களை வைத்துக் கொண்டு தென்னிலங்கையில் எதிர்த்தரப்பினர் இலங்கை மக்களுக்கு ஒன்றும் வெளி உலகுக்கு வேறொன்றும் அரசு கூறி வருகிறது என்று குற்றஞ்சாட்டுகின்றனர். ஐக்கிய தேசிய கட்சி நேற்று வெளியிட்டிருந்த அறிக்கையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயல்திட்டம் தொடர்பாக அரசு மக்களை இருளில் வைத்திருக்கிறது. ஏனென்றால் அது வெளியிடப்படுமானால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு உடைந்து சுக்கு நூறாகிப் போகும். ஆனால் அது என்னவென்று அறிந்துகொள்ளும் உரிமை மக்களுக்கு இருக்கிறது. அரசின் உண்மையான திட்டம் என்ன என்பதை எமக்குச் சொல்ல வேண்டியது அதன் கடமை என்று தெரிவித்துள்ளது.

இந்த நிலைமையில் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான செயல் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு வருவதாகவும் விரைவில் அது வெளியிடப்படும் என்றும் வெளியுறவு அமைச்சு நேற்றுக் கொழும்பில் அறிவித்துள்ளது. அப்படியென்றால் ஹிலாரி கிளின்டனிடம் கொடுத்தது அல்லது வாய்மொழி மூலம் தெரிவித்த செயல்திட்டம் வேறு ஒன்றா என்று ஐ.தே.க. கேட்பதில் நியாயம் இருக்கிறது அல்லவா?

எதுவானாலும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் படிப்படியாகச் செயல்படுத்தப்படுவதற்கான செயல்திட்டம் வெளிப்படையாக அறிவிக்கப்படுவதும் விவாதிக்கப்படுவதும் அவசியம். அதேசமயம் ஹிலாரி கிளின்டனுக்கு தெரிவிக்கப்பட்ட செயல் திட்டமும் இங்கே இனி தயாரிக்கப்படுவதும் ஒன்றாகவே இருக்க வேண்டும். இல்லையெனில் சர்வதேச மட்டத்திலும் அரசின் மீதான நம்பகத்தன்மை பிசுபிசுத்துப் போகும்.

# கல்வித்துறை, நகர அபிவிருத்திக்கு 37 பில்லியன் ரூபா நிதிக் கொடை

## உலக வங்கி வழங்கியது

யாழ்ப்பாணம், மே 25

இலங்கை அரசு கேட்டுக் கொண்டதற்கு இணங்க உலக வங்கியால் 37 பில்லியன் ரூபா நிதி கொடையாக வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியூடாக கல்வித்துறை நகர அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ளன என்று நிதி திட்டமிடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி மற்றும் நகர அபிவிருத்தித்துறைகள் வெளிநாடுகளின் உதவிகளுடன் முன்னேற்றும் வேலைத் திட்டங்கள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இருந்தும் அதனைத் துரிதப்படுத்துவதற்கு இலங்கை அரசு, உலக வங்கியிடம் நிதி உதவி கோரியிருந்தது.

உலக வங்கி, இலங்கையின் நீண்டகால நோக்கிலான அபிவிருத்தித் திட்டங்களை கவனத்தில் எடுத்தே இந்த நிதியை வழங்குவதற்குச் சம்மதித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக 100 மில்லியன் அமெரிக்க டொலர், பாடசாலை கல்வி முறைமையை 'அறிவுசார் அடித்தளத்திலிருந்து' மாற்றியமைக்கும் வேலைத் திட்டத்துக்கும் அபிவிருத்திக்குமாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் மிகத் திறமையாகச் செயற்படும் 5 ஆயிரம் முதல் நிலை பாடசாலைகள் ஆயிரம் இரண்டாம் நிலை பாடசாலைகளுடன் வலையமைப்பில் இணைக்கப்படவுள்ளன.

வெள்ளப்பெருக்கு தொடர்பான முன்னாயத்த வேலைத் திட்டங்கள், கால்வாய் புனரமைப்பு என்பவற்றுக்காக கொழும்பு நகரில் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் இந்த நிதியில் மேற்கொள்ளப்படவுள்ளன என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம-5)

# இழுபறியில் இருக்கும் வடக்கு உட்கட்டுமானப் பணி

யாழ்ப்பாணம்,மே 25

உள்ளூராட்சி உட்கட்டுமான சேவை மேம்படுத்தல் திட்டத்தின் கீழ் வடக்கில் 14 உட்கட்டுமானங்கள் இடம்பெறுகின்றன.

இதில் ஒன்று வலி.மேற்கு பல நோக்குக் கட்டடத் தொகுதி.

இந்தக் கட்டடம் குறித்த காலப் பகுதிக்குள் முடிவுறுத்தப்படாது உள்ளது அபிவிருத்தியில் பின்நிற்பதையே தொட்டு நிற்கிறது.

வலி.மேற்குப் பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புறநெகும, என்றிப், எல்ஜிஐஐபி என்று பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதில் ஒப்பந்தகாரர்கள் கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் பணிகளை முடிப்பதில்லை. இதனால் அபிவிருத்திகளில் தாமதம் ஏற்படுகின்றது. இந்த விடயத்தை வடமாகாண உயரதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும். தாமதமாக்கும் ஒப்பந்தக்காரரை இனிவரும் காலங்களில் உள்வாங்குவதைத் தவிர்க்க வேண்டும்.

இல்லாவிடில் தொடர்ந்து அபிவிருத்தி முடங்கிச் செல்வதுடன், உட்கட்டுமான சேவைகள் முழுமை பெறாது போய்விடும் என்று மேலும் தெரிவித்தார். (ம-41)

# வேலணையில் சமூகப் பொருளாதார அபிவிருத்தி மையம்

யாழ்ப்பாணம், மே 25

வேலணை பிரதேச சபைக்கு உட்பட்ட வகையில் இளைஞர்கள், நாட்டுப் பற்றாளர்கள், சமூக சேவையாளர்கள், சமாதான நீதிவான்களை இணைத்து ''சமூக பொருளாதார அபிவிருத்தி அமையம்'' ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இதில் இணைந்து பணியாற்ற விரும்புவோர் தமது பெயர், அடையாள அட்டை இலக்கம், முகவர், தற்போதைய பதவி மற்றும் விவரங்களைக் குறிப்பிட்டு அனுப்பி வைக்குமாறு வேலணைப் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-50)

# வடக்கில் போரால் சேதமடைந்த தபாலகங்களுக்கு புதிய கட்டம்

## என்றிப் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம்,மே 25

வடக்குப் பகுதியில் போரால் முற்றாகச் சேதமடைந்த தபால் நிலையங்களுக்கு என்றிப் திட்டத்தின் மூலம் புதிய கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

வடக்கு மாகாணப் பிரதி அஞ்சல் மா அதிபர் என்.ரட்ணசிங்கம் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் முற்றாக அழிவடைந்துள்ள 11 தபால் நிலையங்களுக்கும் மீள புதிய கட்டடங்கள் அமைப்பதற்கு என்றிப் 194 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

11 தபால் நிலையங்களையும் முதற் கட்டமாக அபிவிருத்தி செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளோம்.

யோகபுரம், நெடுங்கேணி, நட்டாங்கண்டல் ஆகிய 3 தபால் நிலையங்களும் தற்போது மக்கள் பாவனைக்கு விடப்பட்டுள்ளன.

தாளையடி, பூநகரி ஆகிய தபால் நிலையங்களின் 95 வீதமான பணிகள் பூர்த்தியாகி விட்டன. கிளிநொச்சி, பரந்தன், மாங்குளம், பளை ஆகிய தபால் நிலையங்களின் கட்டடப்பணிகள் ஆரம்பமாகியுள்ளன. ஒட்டுசுட்டான், அடம்பன் ஆகிய 2 தபால் நிலையங்களும் விரைவில் திறக்கப்பட்டு மக்கள் பாவனைக்கு விடப்படவுள்ளன.

இந்தத் தபால் நிலையங்கள் அனைத்தும் போருக்கு முன்னர் இயங்கிய அதே பகுதியில் தான் இயங்கும். அந்தப் பகுதிகளில் தான் கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-13)

# பருத்தித்துறை மதுவரி நிலையத்துக்கு தென்னிலங்கையர்

தென்மராட்சி,மே 25

பருத்தித்துறை மதுவரி நிலைய பொறுப்பதிகாரியாக ரி.அசோகரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னிலங்கையில் உள்ள மதுவரி நிலையத்திலிருந்து பருத்தித்துறைக்கு மதுவரி ஆணையாளர் நாயகத்தால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை மதுவரி நிலையப் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றிய எஸ்.ராஜ்மோகன் முல்லைத்தீவு மதுவரி நிலையத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டு அவரது இடத்துக்கு ரி.அசோகரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். (ம-9)

# வலுவிழந்தோரை வலுப்படுத்த விசேட கல்வி நூற்றாண்டு

யாழ்ப்பாணம்,மே 25

விசேட தேவைக்குட்பட்டவர்களை கல்வியால் வலுவூட்டுவோம் என்னும் தொனிப்பொருளில் எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை விசேட கல்வி நூற்றாண்டு கொண்டாட்ட தேசிய வாரமாக கல்வி அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் விசேட கல்வி ஆரம்பமாகி நூறு ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு கல்வி அமைச்சால் இந்த வாரம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரிமாளிகையில் இடம்பெறவுள்ளது.

இதனை முன்னிட்டு பாடசாலைகளிலுள்ள விசேட தேவை உடையோருக்கிடையில் கட்டுரை, சித்திர ஆக்கப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

கட்டுரைப் போட்டி ஆரம்பப் பிரிவுக்கு (தரம்-5) அழகான காலை பொழுது, எனது பூந்தோட்டம், எங்களுடைய பாடசாலை ஆகிய தலைப்புக்களில் 150 சொற்களுக்கு குறையாமலும்.

கனிஷ்ட பிரிவுக்கு (தரம்-6-9) நான் சென்ற சுற்றுலாப் பயணம், எங்களுடைய நல்ல நண்பர்கள், ஆதரவு நல்வோம் ஆகிய தலைப்புக்களில் 350 சொற்களுக்கு குறையாமலும்,

சிரேஷ்ட பிரிவுக்கு (தரம்-10-13) விசேட தேவைக்குட்பட்ட மாணவர்களை கல்வியால் வலுவூட்டுவோம், இயலாமையை இயலுமையால் வெற்றி கொள்வோம் என்ற தலைப்புகளில் 600 சொற்களுக்கு குறையாமலும் ஆக்கங்கள் இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் வடமாகாணப் பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள் எதிர்வரும் 06ஆம் திகதிக்கு முன்பதாக தங்கள் ஆக்கங்களை வடமாகாண கல்வித் திணைக்கள விசேட கல்விப் பிரிவுக்கு அனுப்பி வைக்குமாறு மேலதிக மாகாணக் கல்வி பணிப்பாளர் செ.உதயகுமார் வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கு அறிவித்துள்ளார். (ம-400)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் இல்லை இக்கட்டான நிலையில் முகாம் மாணவர்கள்

வவுனியா,மே 25

வவுனியா நலன்புரி பாடசாலைகளில் பிரதான பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படாமையால் எதிர்வரும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

கடந்தகால போர் அழிவுகளின் போது இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வசித்து வரும் மாணவர்களின் நன்மை கருதி கதிர்காமர், ஆனந்தகுமாரசாமி ஆகிய நலன்புரி முகாம்களில் பாடசாலைகள் இயங்கி வருகின்றன. இவ்விருபாடசாலைகளில், இதுவரை மீளக் குடியமர்த்தப்படாத மந்துவில் அரசரட்ணம் அ.த.க பாடசாலை, ஆனந்தபுரம் அ.த.க பாடசாலை, சிவநகர் அ.த.க பாடசாலை, புதுக்குடியிருப்பு றோ.க.த.க பாடசாலை, அம்பலவன் பொக்கணை அ.த.க பாடசாலை, வலைஞர் மடம் அ.த.க பாடசாலை ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் ஆயிரத்து 252 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

அதில் கதிர்காமர் நலன்புரிப் பாடசாலையில் 525 மாணவர்கள் கல்வி கற்கின்றனர். இவர்களில் 50 மாணவர்களும், ஆனந்தகுமாரசாமி நலன்புரி பாடசாலையில் உள்ள 725 மாணவர்களில், ஜி.சீ.ஈ.சா.தரப்பரீட்சைக்கு 62 பேரும் தோற்றவுள்ளனர்.

ஆனால் இப்பாடசாலைகளில் கணிதம், விஞ்ஞானம் மற்றும் தமிழ் ஆகியவற்றுக்கு இதுவரை ஆசிரியர்களை நியமிப்பதற்கு முல்லைத்தீவு கல்வித்திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இதனால் இங்குள்ள மாணவர்களுக்கான கற்றல் செயற்பாடுகளைச் சீராக மேற்கொள்ள முடியவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக எதிர்வரும் மார்கழி மாதத்தில் இடம்பெற்றவுள்ள க.பொ.த.சா.த.பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மீளக் குடியமர்த்தப்படாத பகுதிகளிலுள்ள பாடசாலைகளைச் சேர்ந்த ஆசிரியர்கள் தற்காலிக இணைப்புப் பெற்று வேறு பாடசாலைகளில் கடமையாற்றுகின்றனர் என்றும், ஏனைய பல ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுவிட்டனர் என்றும், தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாகப் பல தடவைகள் உரியவர்களால் முல்லைத் தீவுக் கல்வி வலயத்திற்குத் தெரியப்படுத்திய போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இது தொடர்பாகத் தெரியப்படுத்தும் போது உடன் நடவடிக்கை எடுப்பதாக பல முறை உறுதியளிக்கப்பட்ட போதும் செயலில் ஒன்றும் நடக்கவில்லை என்றும் மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.

(க-400)

# வீதியொன்று மூடப்பட்டதால் சிரமப்படும் கிராம மக்கள்



நெடுங்கேணி,மே 25

புனரமைப்புப் பணிகளைக் காரணம் காட்டி வீதியொன்று மூடப்பட்டதால் கிராம மக்கள் அதிக சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

நெடுங்கேணிப் பிரதேசத்திலுள்ள ஒலுமடு, மருதோடை, பட்டிக்குடியிருப்புக்களுக்கான பிரதான வீதியில் கீரிசுட்டான் சந்தியிலிருந்து கற்குளம் சந்தி வரையான வீதிப் புனரமைப்பில் ஈடுபட்டு வரும் ஒப்பந்ததாரர்கள் அந்த வீதியை மூடி ஒருமாதத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் புனரமைப்பு வேலைகள் ஆமை வேகத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

இதனால் வாகனங்களும் பொது மக்களும், பல கிலோ மீற்றர் தூரத்தைச் சுற்றிச் செல்ல வேண்டிய அவல நிலை நீடிக்கின்றது.

இதனால் தேவையற்ற நேர விரயமும், அலைச்சலும் ஏற்படுவதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த வீதி வேலைகளைத் துரிதப்படுத்துமாறு கிராம மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(க-435)

# யானைகளின் நடமாட்டத்தால் அச்சத்தில் செட்டிகுளம் மக்கள்

வவுனியா, மே 25

வவுனியா செட்டிகுளம் பகுதியில் அண்மைக் காலமாக யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால் இந்தப் பகுதி மக்கள் அச்சத்துடன் காணப்படுகின்றனர்.

செட்டிகுளம்- மெனிக்பாம் பகுதியிலுள்ள காடுகளூடாக கிராமப் பகுதிகளில் உள்நுழையும் யானைகள் இரவு நேரங்களில் நடமாடுவதால் மக்கள் அச்சத்துடன் உள்ளனர்.

நேற்றைய தினம் மன்னார் - மதவாச்சி பிரதான வீதியில் நடமாடிய இரு யானைகளால் அவ்வீதியூடான போக்குவரத்து சில மணி நேரம் தடைப்பட்டது.

அவ்விரு யானைகளும் நீண்ட நேரமாக வீதியில் நடமாடியதுடன் மதம் கொண்டவை போல அங்கு மேய்ந்து கொண்டிருந்த மாடுகளை விரட்டிச் சென்றன.

இதனையடுத்து இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து வெடியொலி மூலம் யானைகளை விரட்டி அடித்தனர்.

மேலும் கடும் வரட்சி நிலவுவதன் காரணமாக வன்னிப்பகுதிக் காடுகளில் உள்ள யானைகள் குடிமனைப் பகுதிக்குள் பிரவேசிக்கின்றன என்று கூறப்படுகின்றது.

(க-400)




வவுனியாவில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ள அரச ஈட்டு முதலீட்டு வங்கிக் கட்டடம் இவ்வாறு காட்சியளிக்கின்றது. (421)

# மஹாபொல வழங்கும் நேரத்தில் மாற்றம்

கிளிநொச்சி,மே 25

கிளிநொச்சியில் இடம்பெறவிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வின் நேரத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி அரச அதிபர் செயலகத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது.

2010/2011 ஆம் கல்வியாண்டின் பல்கலைக்கழக மாணவர்களுக்கான புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்வு நாளைமறுதினம் 27 ஆம் திகதி காலை 9 மணியளவில் கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சங்கக் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் அன்றைய தினம் நண்பகல் 12 மணிக்கு இந்த நிகழ்வு நடைபெறவிருப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் சார்பாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

# காணாமற்போன விவசாய உபகரணங்களை மீட்க உரிய விசாரணைகள் நடத்தவேண்டும்

## கிளிநொச்சி விவசாயிகள் கோரிக்கை

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் இருந்து காணாமற் போன விவசாய உபகரணங்கள் தொடர்பாக உரிய விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி கமநல சேவை நிலையத்தில் இந்திய அரசினால் வழங்கப்பட்ட உழவு இயந்திரத்தின் சுழல்கலப்பை, இழுவைப்பெட்டி உள்ளிட்ட பல லட்சம் ரூபா பெறுமதியான விவசாய உபகரணங்கள் கடந்த பெப்ரவரி மாதத்தில் காணாமற் போனதாகப் கிளிநொச்சிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் இது தொடர்பாக எந்தவித நடவடிக்கையும் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை.

அலுவலக உத்தியோகத்தர்கள், காவலாளிகள், சிற்றூழியர்கள் எனப் பலர் தினமும் தங்கியிருக்கும் கமநல சேவை வளாகத்தில் இருந்து பெறுமதியான இந்தப் பொருள்கள் களவுபோனமை தொடர்பாக இங்குள்ள மக்களின் மனங்களில் பல்வேறு சந்தேகங்கள் தோன்றியுள்ளன. மேலும் விவசாய சங்கங்களைக் கூட்டி இந்த விடயம் தொடர்பாக கலந்துரையாடப்படவில்லை என இந்த மாதம் நடைபெற்ற மாவட்ட விவசாய அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் விவசாயிகள் பலரும் கேள்வி எழுப்பியிருந்தனர். ஆனால் இதற்கு இங்கு சமுகமளித்திருந்த எவரும் உரிய பதிலை வழங்கவில்லை.

ஆகவே இது தொடர்பாக உரிய விசாரணை நடத்த வேண்டும் எனவும் இவ்வாறான துஷ்பிரயோகம் மற்றும் மோசடிகளைக் கட்டுப்படுத்த வேண்டும் எனவும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(க-6)

# வவுனியாவில் தணிகின்றது டெங்கு நுளம்பின் தாக்கம்

நெளுக்குளம் மே. 25

வவுனியாவில் டெங்குக் காய்ச்சலின் தாக்கம் குறைவடைந்து செல்வதாக வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையினர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் இந்த ஆண்டின் ஜனவரி மாதம் 13 பேரும், பெப்ரவரி மாதம் 05 பேரும், மார்ச் மாதம் அதேயளவு தொகையினரும், ஏப்ரல் மாதம் 02 பேரும் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டனர் என்றும் தெரியவருகின்றது.

வவுனியா மாவட்டத்தில் 2009 ஆம் ஆண்டு மிகவேகமாக டெங்கு நோயை உருவாக்கும் நுளம்பின் பெருக்கம் அதிகரித்திருந்தது. வவுனியா பொது வைத்தியசாலையில் கடமையாற்றவெனக் கிளிநொச்சிப் பகுதியில் இருந்து வருகை தந்த மருத்துவர் சத்தியமூர்த்தியின் தலைமையில் பல்வேறு டெங்கு ஒழிப்புக் குழுக்கள் வவுனியாக் கிராமங்களில் உருவாக்கப்பட்டு நுளம்பு பெருகும் இடங்கள் அழிக்கப்பட்டன.

2009 ஆம் ஆண்டு வாரத்தில் 191 முதல் 258 பேர் வரை டெங்கு காய்ச்சலால் பீடிக்கப்பட்டனர் என்று இனம் காணப்பட்டனர். பின்னர் 2010, 2011 ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதையடுத்து இந்த ஆண்டு டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் வீதம் குறைவடைந்துள்ளது.

2009ஆம் ஆண்டு வாரத்தில் 191 முதல் 258 பேர் வரை டெங்கு காய்ச்சலால் பீடிக்கப் பட்டனர் என்று இனம் காணப்பட்டனர் பின்னர் 2010, 2011ஆம் ஆண்டுகளில் தொடர்ச்சியான டெங்கு நோய் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட்டன.

இம்மாதம் வவுனியா சுகாதார வைத்திய பணிமனையில் டெங்கு விழிப்புணர்வு வாரம் 14 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை அனுஷ்டிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-402)

# வாகனச் சாரதிக்கு ஒத்திவைக்கப்பட்ட 2 வருட சிறை

வவுனியா,மே 25

வாகனத்தைக் கவனயீனமாகச் செலுத்தி ஒருவருக்கு மரணத்தை விளைவித்த வாகனச் சாரதிக்கு வவுனியா மேல் நீதிமன்றம் 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையை வழங்கியுள்ளது.

மகாஇறம்பைக்குளத்தைச் சேர்ந்த இராமச்சந்திரன் யோகேஸ்வரன் என்பவர் லொறியொன்றைச் செலுத்தும் போது வேப்பங்குளம் பகுதியில் அந்த லொறி விபத்தில் சிக்கியதால் நபர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இவருக்குஎதிராகவவுனியா மேல் நீதிமன்றத்தில் 2010 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் இரண்டாம் திகதி வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

லொறிச் சாரதி தனது குற்றத்தை ஒப்புக் கொண்டார். இதனையடுத்தே மேல் நீதிமன்ற நீதிபதியான திருமதி சந்திரமணி விசுவலிங்கம் இவருக்கு 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழியச் சிறைத்தண்டனை வழங்கினார். (க-400)

# மரத்துடன் மோதிய கன்ரர்

நெடுங்கேணி மே.25

நெடுங்கேணியிலிருந்து தம்புள்ளவுக்கு மரக்கறி ஏற்றிச்சென்ற வாகனம் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது.

கன்ரர் வாகனமொன்று கடந்த 21 ஆம் திகதி நெடுங்கேணியிலிருந்து தம்புள்ளவுக்கு மரக்கறியை ஏற்றிச் சென்றுள்ளது. அப்போது வவுனியாவிலிருந்து டிப்பர் வாகனமொன்று அதிவேகமாக வந்து கொண்டிருந்தது. அதனை விலத்திச் செல்ல [illegible] மரத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியது.



இரவு 9 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது.

இதில் சாரதியும் உதவியாளரும் [illegible] உயிர் [illegible] குறிப்பிடத்தக்கது. (க-435)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறிகாட்டுவான் இறங்குதுறையை புனரமைக்க நிதி ஒதுக்கீடு ஏதுமில்லை

## வசதிகள் இன்றிப் பயணிகள் அவலம்

**தீவுகளுக்கான போக்குவரத்தின் முக்கிய மையமாக உள்ள குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைக்கப்படாமல் வசதிகள் அற்ற நிலையில் உள்ளமை குறித்து தீவுப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.**

யாழ்ப்பாணம், மே 25

குறிகாட்டுவான் இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்வதற்கு இதுவரை நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படவில்லை என வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்துக்கு முன்னர் இந்த இறங்குதுறையைப் புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆயினும் இறங்குதுறையைப் புனரமைப்பதற்கான நிதி இதுவரை ஒதுக்கப்படாமையால் இந்தப் பணி உடனடியாகச் சாத்தியமாகாது என வீதி அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி ஒருவர் கூறினார்.

தீவுகளுக்கான போக்குவரத்தின் முக்கிய மையமாக உள்ள குறிகாட்டுவான் இறங்குதுறை புனரமைக்கப்படாமல் வசதிகள் அற்ற நிலையில் உள்ளமை குறித்து தீவுப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இந்த இறங்குதுறையை சகல வசதிகளுடனும் புனரமைப்புச் செய்வதற்குக் கடந்த சில வருடங்களாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதும் இதுவரை புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த இறங்குதுறை புனரமைப்புப் பணியில் அரச அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் அதிக அக்கறை காட்டிச் செயற்படவேண்டும் எனக் கோரப்பட்டுள்ளது.

நயினாதீவு உற்சவத்துக்கு இம்முறை பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் திரள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

எனவே பக்தர்களின் சீரான போக்குவரத்துக்காக இந்த இறங்குதுறையை விரைவாகப் புனரமைத்து உதவவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-17)

# உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் வலி.மேற்கில் முழுமையாகட்டும்

## பிரதேச சபை உறுப்பினர்கள் தெரிவிப்பு

**வலி.மேற்குப் பிரதேச சபையும் வலி.மேற்குப் பிரதேச செயலகமும் இணைந்தே இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச சபை தெரிவித்துள்ளது.**

யாழ்ப்பாணம்,மே 25

ஒருங்கிணைந்த உள்ளூர் அபிவிருத்தித் திட்டம் வலி.மேற்கில் முழுமை பெற வேண்டும்.

வலி.மேற்குப் பிரதேச சபையும் வலி.மேற்குப் பிரதேச செயலகமும் இணைந்தே இந்தப் பணியை மேற்கொள்ள வேண்டும் என்று வலி.மேற்கு பிரதேச சபை தெரிவித்துள்ளது.

வலி.மேற்குப் பிரதேச சபை கூட்டம் சபைத்தலைவி திருமதி ந.ஐங்கரன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கருத்துத் தெரிவித்த போதே பிரதேச சபை உறுப்பினர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இதில் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாணத்தில் பரீட்சார்த்த திட்டமாக வலி. மேற்குப் பிரதேச சபை, வேலணைப் பிரதேச சபை, பருத்தித்துறை பிரதேச சபை என்பனவற்றில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

ஆனால், வலி.மேற்கில் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் சில நடைமுறைகள் காணப்படுகின்றன.

எனவே, பிரதேச சபையுடன் இணைந்த வகையில் பிரதேச செயலகம் அபிவிருத்தித் திட்டத்தை முன்னகர்த்த வேண்டும்.

இல்லாவிடில் ஜி.ஐ. இசட் நிறுவனத்தின் பெரிய அபிவிருத்தித் திட்டமான உள்ளூர் திட்டமிடல் சேவை வலுவிழந்து விடும்.

எனவே பிரதேச சபை, பிரதேச செயலகம் ஆகிய இரண்டும் இணைந்து செல்லும் போக்கை கடைப்பிடிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-50)

# வலி.தென்மேற்குப் பகுதியில் 4 மயானங்கள் புனரமைப்பு

பண்டத்தரிப்பு, மே 25

வலி.தென்மேற்குப் பிரதேச சபை நிர்வாகத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள 4 இந்து மயானங்கள் பிரதேச சபையினரால் புனரமைக்கப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் வ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தைத் தொடர்ந்து பல வருடங்களாக கவனிப்பாரற்றுக் கிடந்த 4 மயானங்களும் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

காக்கைதீவு கரையாம்பிட்டி மயானம், கொத்துக்கட்டி மயானம், வழுக்கையாறு மயானம், நவாலி தெற்கு இந்து மயானம் என்பவையே புனரமைப்பு செய்யப்பட்டவையாகும்.

மயானங்களில் இருந்த கொட்டகைகள் திருத்தி அமைக்கப்பட்டு மயானங்களும் சுத்தம் செய்யப்பட்டிருப்பதனால் மக்கள் எதிர்நோக்கிய அசௌகரியங்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளதாக அந்தப் பிரதேச மக்கள் தெரிவித்தனர். (த-130)

# காக்கைதீவில் புதிய மீன் சந்தை

பண்டத்தரிப்பு, மே 25

காக்கைதீவு இறங்குதுறையில் புதிய மீன் சந்தை ஒன்று வலி.தென்மேற்கு பிரதேசசபையினரால் அமைக்கப்பட்டுள்ளது.

நீண்ட பல வருடங்களாக நிரந்தர சந்தை இல்லாமையால் சுகாதாரமற்ற முறைகளில் அங்கு மீன் வியாபாரம் மேற்கொள்ளப்படுவதாகப் பல தரப்பினரிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை தொடர்ந்தே பிரதேச சபையினர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

உரிய சுகாதார முறைப்படி அமைக்கப்பட்டுள்ள இந்த மீன்சந்தையில் வியாபாரம் செய்வதற்காக இடங்களை ஒதுக்கிக் கொள்வதற்கென கேள்விகள் தற்போது கோரப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் இது மக்கள் பாவனைக்காக விடப்படும் என வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் தெரிவித்தார். (த-130)

# தென்மராட்சி மாணவருக்கு பற் சுகாதாரச் செயற்றிட்டம்



தென்மராட்சிப் பிரதேச முன்பள்ளி மாணவர்களுக்கு 'பற் சுகாதாரம் பேணுதல்' தொடர்பான செயற்றிட்டம் யாழ். பிராந்திய பல் மருத்துவப் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஆரம்ப நிகழ்வு அண்மையில் சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை புவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தில் நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

நிலைய மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் யாழ். பிராந்திய பல் மருத்துவப் பிரிவுப் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி ச. பாலகுமார், யாழ்.மாவட்ட சிறுவர் நல அலுவலர் க.சிவகரன் மற்றும் நிலையச் சிறார்களின் பெற்றோர் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

பிரதேசத்தில் இயங்கும் 3 பாலர் பகல் பராமரிப்பு நிலையங்கள் உட்பட 85 முன்பள்ளிகளில் இந்தச் செயற்றிட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

# யாழ். ஆயுள்வேத வைத்தியசாலையில் புதன்கிழமைகளில் அக்குபஞ்சர் சிகிச்சை

யாழ்ப்பாணம், மே 25

கொரியன் நாட்டு வைத்தியமான அக்குபஞ்சர் சிகிச்சை முறைக்கு யாழ். மாவட்ட மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. இதனால் பிரதி புதன்கிழமை தோறும் யாழ். மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையில் சிகிச்சை வழங்கப்படுகிறது என்று குருநகரில் இயங்கி வரும் யாழ்.மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி மருத்துவர் அருந்தவராணி கிருஷ்ணானந்தம் தெரிவித்தார்.

கடந்த மாதம் கொரியன் நாட்டு வைத்தியர்களின் அனுசரணையுடன் நடமாடும் மருத்துவ சேவையில் இந்த அக்குபஞ்சர் சிகிச்சை வழங்கப்பட்டது.

இந்த சிகிச்சை முகாமில் 600 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் யாழ். மாவட்டத்தின் பல பிரதேசங்களில் இருந்தும் வருகை தந்து பயன்பெற்றுள்ளனர். தீராத, குணப்படுத்தப்பட முடியாத நீண்டநாள் நோய்களுக்கான இலகுவான சிகிச்சை முறை என்று யாழ்.மாவட்ட மக்கள் மத்தியில் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தற்போது இந்த சிகிச்சை முறையை யாழ். மாவட்ட ஆயுள்வேத வைத்தியாலையில் பிரதி புதன் கிழமைகள் தோறும் வழங்கி வருகின்றோம். இதில் 40 இற்கும் மேற்பட்டவர்களுக்கு சிகிச்சை வழங்கப்படுகிறது.

இடவசதி மற்றும் ஆளணி வசதி போதாமை காரணமாக குறிப்பிட்ட நோயாளிகளுக்கே சிகிச்சை வழங்கப்படுகிறது. அத்துடன் ஏனைய பிரதேச ஆயுள்வேத வைத்தியசாலைகளிலும் இந்த சிகிச்சை வழங்கப்படுகிறது என்று மேலும் தெரிவித்தார். (ம-14)



வலி.மேற்கு சுழிபுரம் பிரதேச சபைக்குட்பட்ட அராலி தெற்கு கற்குழி வீதி போக்குவரத்துச் செய்ய முடியாத நிலையில் உள்ளது. மழைகாலங்களில் போக்குவரத்து முற்றாக பாதிப்படையும் நிலையில் இந்த வீதி காணப்படுகிறது. கடந்த 40 வருடங்கள் மேலாக மீள்புனரமைப்பு இன்றியும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. (ம-41)

# பலாலி ஆசிரியர் கலாசாலை சொந்த இடத்திலேயே இயக்க வேண்டும்

## வலி. வடக்கு பிரதேச சபை நிறைவேற்றியது

யாழ்ப்பாணம்,மே 25

பலாலி ஆசிரியர் கலாசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயக்க நடவடிக்கை எடுப்பதுடன் முன்னர் நடைமுறைப்படுத்தப்பட்ட அனைத்து பயிற்சி நெறிகளையும் மீண்டும் நடைமுறைப்படுத்தக் கோரி வலி.வடக்கு பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

[illegible] வலி.வடக்குப் பிரதேச சபையின் மாதாந்த கூட்டம் தலைவர் சோ.சுகிர்தன் தலைமையில் இடம்பெற்றது.

இதில், பலாலி ஆசிரியர் கலாசாலையை மீண்டும் சொந்த இடத்தில் இயக்க வேண்டும். அத்துடன் அங்கு முன்னர் நடைமுறைப்படுத்துப்பட்ட அனைத்து பயிற்சி நெறிகளையும் மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் என்று [illegible] தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை கல்வி அமைச்சருக்கும் கல்வி அமைச்சின் செயலருக்கும் அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை நிரந்தர கட்டட வசதிகளின்றி அளவெட்டி பிரதேச வைத்தியசாலையில் இயங்கி வருகின்றது.

இதற்கு நிரந்தர கட்டடம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்து வழங்கப்பட வேண்டும் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் தனியார் ஒருவர் பிரதேச சபைக்கு ஊடாக 5 பரப்புக் காணி ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார். அந்தக் காணியில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையை அமைப்பதற்கு வழங்கவுள்ளதாக தலைவர் தெரிவித்தார். இது சபை உறுப்பினர்களால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. (ம-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களின் துயரக் கண்ணீர் மத்திய அரசை வீழ்த்தும்

## முதல்வர் ஜெயலலிதா சாபம்

சென்னை, மே 25

''மத்திய அரசு பெற்றோல் விலையை திரும்ப பெறாவிட்டால், மக்களுடைய கண்ணீர் ஆட்சியை விரைவில் வீழ்ச்சி அடையச் செய்யும் ஆயுதமாக மாறும்'' என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து, தமிழக முதல்வர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கை மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விலைவாசி உயர்ந்து வருவதற்கும், இந்திய ரூபாயின் மதிப்பு சரிந்து வருவதற்கும், நாட்டில் தற்போது நிலவும் மந்தமான பொருளாதார நிலைக்கும், மத்திய அரசு பின்பற்றும் தவறான பொருளாதாரக் கொள்கைதான் காரணம். சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருவதைக் காரணம் காட்டி, விலைவாசி ஏற்றத்திற்கு வழிவகுக்கும் வகையில், பெற்றோலுக்கு லீற்றருக்கு, 7 ரூபாய் 50 சதம் (இந்தியரூபாய்) வரை விலை உயர்த்தி உள்ளது. இது, ஏழை, எளிய மக்களை வஞ்சிக்கும் செயலாகும்.

மத்திய அரசு பெற்றோலியபொருள்களின்விலையை உயர்த்தும்போது எல்லாம், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஏற்றம், இந்திய ரூபாய் மதிப்பு வீழ்ச்சி போன்ற எடுபடாத வாதத்தையே எடுத்து வைப்பதை ஏற்றுகொள்ள முடியாது. மேலும், அமெரிக்க டாலரில் இந்திய ரூபாயின் மதிப்பை கட்டுப்படுத்தாமல், பெற்றோல் விலை உயர்வை ஏற்றுக் கொள்ள முடியாது.

மத்திய அரசின், இந்த மக்கள் விரோதச் செயல் காரணமாக, இரு சக்கர வாகனங்கள் மற்றும் சிற்றூர்திகளைப் பயன்படுத்தும் மக்களுக்கு, இந்த உயர்வு பெரும் சுமையாக இருக்கும். மத்திய அரசின் எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் தனியார் எண்ணெய் நிறுவனங்கள் அதிக அளவில் லாபம் ஈட்டி, மத்திய அரசு உட்பட அதன் பங்குதாரர்களுக்கு அதிக அளவு ஈவுத்தொகையினை அளிக்கின்றன.



இந்த நிறுவனங்களின் லாபத்தை குறைப்பதன் மூலமும், பெற்றோல் வரியை குறைப்பதன் மூலமும், பெற்றோல் விலை உயர்வைத் தவிர்க்கலாம். மக்களைப் பெரிதளவில் பாதிக்கும் முடிவை, மத்திய அரசு கைவிட்டு, பெற்றோல் விலையை திரும்பப் பெற வேண்டும். இல்லையெனில், மக்களுடைய கண்ணீர் ஆளும் காங்கிரஸ் கூட்டணி ஆட்சியை விரைவில் வீழ்ச்சி அடையச் செய்யும் ஆயுதமாக மாறும். இவ்வாறு ஜெயலலிதா தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் சிறை வைக்கப்பட்ட 18 இந்திய மீனவர்கள் விடுதலை

பாகிஸ்தான் சிறையில் அடைத்து வைக்கப்பட்டிருந்த 18 இந்திய மீனவர்களை அந்தநாடு நேற்று முன்தினம் விடுதலை செய்தது. அவர்கள் நேற்று அட்டாரி எல்லை வழியாக இந்தியா வருகின்றனர். இந்தியாவைச் சேர்ந்த மீனவர்கள் சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச்சென்று பாகிஸ்தான் கடற்படையினரிடம் சிக்கிய 8 இந்திய மீனவர்கள் அந்நாட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

தற்போது இந்தியா-பாகிஸ்தான் இடையே வெளியுறவு செயலர்கள் மட்டத்திலான பேச்சு இஸ்லாமாபாத் நகரில் நேற்று தொடங்கியதையொட்டி இவர்கள் விடுதலை செயயப்படுகின்றனர்.

அதன்படி குஜராத் மாநிலம் போர்பந்தர் நகரைச் சேர்ந்த 18 மீனவர்களும் அட்டாரி எல்லையில் முறைப்படி இந்திய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## சியாச்சென் பனிமலையில் மோதி விபத்தானது ஹெலி

இந்தியா-பாகிஸ்தான் நாடுகளின் எல்லைப்பகுதியான சியாச்சென் பனிமலைப் பகுதியில் நேற்று ஏற்பட்ட ஹெலிகொப்டர் விபத்தில் இராணுவ விமானி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சியாச்சென் பகுதியில் கடந்த 25 ஆண்டுகளாக சீட்டா மற்றும் சேட்டக் ஹெலிகொப்டர்கள் 10 ஆயிரம் முதல் 23 ஆயிரம் அடி உயரத்தில் இருந்து பாதுகாப்புக்கான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றன.

நேற்று வழக்கம்போல் பணியில் ஈடுபட்டு வந்த சீட்டா ஹெலிகொப்டர் திடீரெனப் பனிப்பாறை ஒன்றின் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 2 விமானிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்தார். காயமடைந்த விமானிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மோசமான வானிலை காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

## பதினொரு குழந்தைகளை பெற்ற இந்தியத் தாய்



இந்திய பெண் ஒருவர் ஒரே தரத்தில் 11 குழந்தைகளுக்கு தாய் ஆகி உள்ளார் என்கிற பரபரப்புச் செய்தி முன்னர் வெளியாகியிருந்தது. பிரசவம் பார்த்த வைத்தியர்கள் ஒன்றாகக் குழந்தைகளுடன் எடுத்துக் கொண்டவை என்று சொல்லப்படுகின்ற புகைப்படங்கள் இணையத் தளங்களில் தற்போது பிரசுரம் ஆகி இருக்கின்றன. இந்திய வைத்திய சாலை ஒன்றில் 2011 ஆம் ஆண்டு நவம்பர் 11 ஆம் திகதி இந்தக் குழந்தைகள் பிறந்தன என்றும் தாயும், சேய்களும் நலமாக உள்ளனர் என்றும் சொல்லப்படுகின்றது.

## அக்னி – ஐந்தை விட சக்தி வாய்ந்த ஏவுகணை

### தயாரிப்பில் இந்தியா மும்முரம்

அக்னி-5 ஏவுகணைப் பரிசோதனையை நடத்திய இந்தியா, அடுத்தகட்டமாக 8000 கிலோமீற்றர் தூரம் சென்று தாக்கக்கூடிய ஏவுகணையை தயாரிக்க உள்ளது.

கடந்த ஏப்ரல் 29ஆம் திகதி 5000 கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலக்கைத் தாக்கும் அக்னி-5 ஏவுகணையை இந்தியா வெற்றிகரமாகப் பரிசோதித்தது. இந்த ஏவுகணை வெற்றி சீனா உட்பட அண்டை நாடுகளை பொறாமையில் ஆழ்த்தியது.

இந்நிலையில் 8,000 கிலோமீற்றர் தொலைவு வரை சென்று தாக்கக் கூடிய ஏவுகணையையும் இந்தியாவினால் தயாரிக்க முடியும் என இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டுத்துறை (டி.ஆர்.டி.ஓ.) தெரிவித்துள்ளது.

இதுகுறித்து, மத்திய இராணுவ அமைச்சகத்தின் அறிவியல் ஆலோசகரும், இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டுத்துறையின் இயக்குநருமான ஜெனரல் வி.கே. சாரஸ்வத் தெரிவித்துள்ளதாவது:-

அக்னி-5 ஏவுகணை 5 ஆயிரம்கிலோமீற்றர் தொலைவில் உள்ள இலக்குகளை தாக்கும் ஏவுகணை. இவற்றை தவிர 8, 000 கி.மீ.க்கும் அதிகமான தூரம் உள்ள இலக்கை துல்லியமாக தாக்கும் ஏவுகணை தேவைப்பட்டால், அதையும் நம்மால் தயாரிக்கும் திறன் உள்ளது. அதற்கான பணிகளை இராணுவ ஆராய்ச்சி மேம்பாட்டுத்துறை தொடங்கியுள்ளது. இது அக்னி-5 ஏவுகணையை விட இருமடங்கு கூடுதல் சக்தி வாய்ந்தது - என்றார்.




## என்னைக் கொல்ல மார்க்சிஸ்ட் சதி

கொல்கத்தா, மே 25



வெளிநாட்டு உதவியுடன் என்னைக் கொலை செய்ய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சதியில் ஈடுபட்டுள்ளது என்று மேற்கு வங்க முதல்வரும், திரிணமூல் காங்கிரஸ் தலைவருமான மம்தா பானர்ஜி குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்காவில் வெளியாகும் 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகையில் மம்தா குறித்து வெளியாகியுள்ள கார்ட்டூன், கட்டுரை குறித்து அவரிடம் புதன்கிழமை கேள்வி எழுப்பப்பட்டது. அப்போது மார்க்சிஸ்ட் கட்சி தனக்கு எதிராக பல்வேறு சதிகளைச் செய்வதாக அவர் கடுமையாகக் குற்றம்சாட்டினார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

என்னைக் கொலை செய்வதற்காக மாவோயிஸ்ட்டுகளுடன் இணைந்து மார்க்சிஸ்ட் கட்சியினர் சதி செய்து வருகின்றனர். இதற்கு பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐஎஸ்ஐ-யும் உதவி செய்கிறது. வடகொரியா, வெனிசுலா, ஹங்கேரி ஆகிய நாடுகள் இந்தத் திட்டத்துக்கு நிதியுதவி அளிக்கின்றன - என்றார்.

ஆனால் மம்தாவின் இந்தக் குற்றச்சாட்டுக்கு மார்க்சிஸ்ட் கட்சி கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது. அவரது குற்றச்சாட்டு முட்டாள்தனமானது. மார்க்சிஸ்ட் கட்சி மீது [illegible] சுமத்தியுள்ள அவர் மீது அவதூறு வழக்குத் தொடருவது குறித்து ஆலோசித்து வருவதாகவும் மார்க்சிஸ்ட் கட்சித் தலைவர் சீதாராம் யெச்சூரி அறிவித்துள்ளார்.

## மணப்பெண்ணை மறந்து வேறு பெண்ணுக்கு தாலி கட்டினார் வாலிபர்

கோவிலில் கூட்டம் அதிகமாக இருந்ததால் மணமகன் ஒருவர் நிச்சயம் செய்யப்பட்ட மணமகளுக்குப் பதிலாக வேறு மணமகளின் கழுத்தில் தாலிகட்டிய சம்பவமொன்று சிவகங்கைப் பகுதியில் நடந்துள்ளது.

வைகாசி முகூர்த்தம் என்பதால் நேற்றுமுன்தினம் சிவகங்கையில் பல்வேறு இடங்களில் ஏராளமான திருமணங்கள் நடந்தன.

சிவகங்கை சிவன்கோவிலில் நேற்றுமுன்தினம் காலை 30இற்கும் மேற்பட்ட திருமணங்கள் நடந்தன. திருமணத்திற்கு வந்திருந்த உறவினர்களது கூட்டம் அதிகமாக இருந்தது. ஒவ்வொரு ஜோடி திருமணமும் முறையாக கோவில் நிர்வாகத்தில் பதிவு செய்து, பற்றுச்சீட்டு பெற்று நடத்தப்பட்டன. இந்நிலையில், பக்கத்துக் கிராமத்தைச் சேர்ந்த இரு ஜோடிகள் அங்கு வந்தனர். உறவினர்கள், மணமக்களை அருகருகே அமர வைத்திருந்தனர்.

அப்போது, கூட்டம் அதிகமாக இருந்ததால் மணமகன் ஒருவர் நிச்சயம் செய்யப்பட்ட மணமகளுக்குப் பதிலாக வேறு மணமகளின் கழுத்தில் தாலிகட்டிவிட்டார். இதனால் இருதரப்பு உறவினர்களுக்குள்ளும் கடும்வாக்குவாதம் ஏற்பட்டது.

''தெரிந்தோ, தெரியாமலோ தாலிகட்டியாகிவிட்டது. இனிமேல் எங்களைப் பிரிக்காதீர்கள்,'' என மாற்றித் தாலி கட்டிய புதுப்பெண் உறுதியாக இருந்தார்.

இதனால் இரு தரப்பினரும் சமாதானமாகிச் சென்றனர். இதன்பின்னர் வேறு வழியின்றி மாறிப்போன மற்றொரு ஜோடியும் திருமணம் செய்துகொண்டனர். மாற்றித் தாலிகட்டிய இரு ஜோடிகளும் கோவில் நிர்வாகத்தில் திருமணம் செய்யப்பதிவுசெய்யவில்லை என தெரியவந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 60 ஆண்டுகளுக்குப் பின்னர்

# எகிப்தில் தேர்தல்

### வாக்களிப்பதில் மக்கள் ஆர்வம்

எகிப்தில் சுமார் 32 ஆண்டுகள் சர்வாதிகார ஆட்சி நடத்திய ஜனாதிபதி ஹோஸ்னி முபாரக்கின் ஆட்சி கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து இராணுவம் இடைக்கால அரசை நடத்தி வருகின்றது.

இந்த நிலையில், ஜனநாயக முறையில் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் நேற்று தொடக்கம் நடைபெற்று வருகின்றது. அதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்தன. இதில், முன்னாள் பிரதமரும், விமானப்படை முன்னாள் தளபதியுமான அகமது ஷபீப், முன்னாள் அமைச்சர் அமர் மூசா, முஸ்லிம் சகோதரத்துவ சுதந்திர நீதிக் கட்சியை சேர்ந்த மொகமது முர்சி, சுதந்திர இஸ்லாமியக் கட்சியைச் சேர்ந்த அப்துல் முனீம் அப்துல் போடக் ஆகிய 4 பேர் போட்டியிடுகின்றனர்.



அவர்களில் முஸ்லிம் சகோதரத்துவ சுதந்திர நீதிக் கட்சியைச் சேர்ந்த மொகமது முர்சி மற்றும் சுதந்திர இஸ்லாமியக் கட்சியைச் சேர்ந்த அப்துல் முனீம் அப்துல் போடக்குக்கும் இடையேதான் கடும் போட்டி நிலவுகிறது.

வாக்குப் பதிவு நேற்றுக் காலை 8 மணிக்குத் தொடங்கியது. இதில் ஏராளமானவர்கள் ஆர்வத்துடன் வாக்குப்பதிவுகளில் ஈடுபட்டனர்.

இந்தத் தேர்தலில் வாக்களிக்க 5 கோடி பேருக்கு வாக்குரிமை வழங்கப்பட்டுள்ளது. அதற்காக நாடு முழுவதும் 13 ஆயிரம் வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிக்கப் போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே பெருமளவில் வாக்களித்து சிறந்த ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க உதவ வேண்டும் என இடைக் கால அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.

வாக்குப் பதிவு இன்று வரை நடைபெறவுள்ளது. எகிப்தில் கடந்த 60 ஆண்டுகளுக்கு முன்புதான் ஜனநாயக முறையில் ஜனாதிபதித் தேர்தல் நடந்தது.

அதன் பிறகு தற்போது தான் மக்கள் வாக்களித்துப் புதிய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்க உள்ளனர்.

முன்னாள் ஜனாதிபதி முபாரக் இராணுவப் புரட்சியின் மூலம் ஆட்சியைப் பிடித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒசாமாவைக் காட்டிக் கொடுத்த மருத்துவருக்கு 33 வருடச் சிறை



பாகிஸ்தானில் மறைந்திருந்த ஒசாமா பின்லேடன் தொடர்பில் அமெரிக்காவுக்குத் தகவல் வழங்கிய பாகிஸ்தான் மருத்துவருக்கு 33 வருடகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இஸ்லாமாபாத் அருகிலுள்ள அபோதாபாத்தில் பின்லேடன் மறைந்திருக்கின்றார் என சி.ஐ.ஏ. சந்தேகித்த வீட்டில் இருந்தவர்களின் டி.என்.ஏ. மாதிரியைப் பெறுவதற்காக, அந்தப்பகுதியில் போலியான, தடுப்பு மருந்தேற்றல் செயற்திட்டமொன்றை நடத்திய மருத்துவர் ஷகில் அப்ரிடிக்கே இந்தச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. அவருக்கு 320,000 பாகிஸ்தான் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

தங்களது நாட்டின் இறையாண்மைக்கு எதிராக அமெரிக்கா தாக்குதல் நடத்தியது என்பது பாகிஸ்தானின் வாதம். இதற்கு உதவியாகப் பாகிஸ்தான் மருத்துவர் இருந்தார் என்றும் நாட்டுக்கு எதிராக சதி செய்தார் என்றும் குற்றஞ்சாட்டி அவரை சிறையிலடைக்கப் பாகிஸ்தான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இந்த நிலையில், ஷகில் அப்ரிடியை விடுதலை செய்யுமாறு அமெரிக்க ராஜாங்க செயலாளர் ஹிலாரி கிளின்டன் பாகிஸ்தானிடம் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றார்.

கடந்த 2011ஆம் ஆண்டு மே மாதம், ஒஸாமா பின்லேடன், அமெரிக்க படையினரால் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நோயாளியை காதலித்த இந்தியத் தாதி

லண்டன்,மே.25

நோயாளிக்குக் காதல் கடிதம் எழுதி, அவருடன் உறவு வைத்திருந்த இந்திய ஆண் தாதியின் வேலை பறிபோயுள்ளது. பிரிட்டனில் உள்ள லீசெஸ்டர் பொது மருத்துவமனையில் தாதியாக வேலை பார்த்தவர் ராஜேந்திரநாத் ஜக்ரு. இரைப்பைக் கோளாறு காரணமாக இந்த மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பெண்ணுடன், ராஜேந்திரநாத் ரகசிய உறவு வைத்திருந்தார். பணி நேரத்தில் இந்தப் பெண்ணுக்கு காதல் கடிதம் எழுதுவது, அவருடன் ஊர் சுற்றுவது போன்றவற்றைப் பார்த்த மருத்துவமனை ஊழியர்கள், இது தொடர்பாக நிர்வாகத்திடம் முறைப்பாடு செய்தனர்.

மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பெண்ணை மிரட்டி, அவரைக் காதலித்தார் என இவர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து, பிரிட்டனின் தேசிய சுகாதாரத் துறை, ராஜேந்திரநாத்தை பணியிலிருந்து நீக்கியுள்ளது.

## மேலும் விஸ்தரிக்கப்படுகின்றது வடகொரிய ஏவுகணைத் தளம்

வட கொரியாவின் ஏவுகணைத் தளம் பெரியளவில் தரமுயர்த்தப்படுகின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏவுதளப் பகுதியில் பெரியளவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன என அமெரிக்க நிறுவனமொன்று கூறியுள்ளது.

2011 ஆம் ஆண்டின் நடுப் பகுதி தொடக்கம் இந்த ஏவுதளப் பகுதியில் விரைவான நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன என பி.பி.சி. செய்தி வெளியிட்டுள்ளது.

வட கொரியா மூன்றாவது அணுப் பரிசோதனையை நடத்தவுள்ளது என அறிவித்துள்ளதன் மூலம் கிளர்ச்சி மோதலை ஏற்படுத்த முயற்சிக்கின்றது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியுள்ளது.

எனினும் இந்தக் குற்றச்சாட்டை நிராகரிக்கின்றோம் என வட கொரிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் கூறியுள்ளார்.

வட கொரியா இந்தப் பரீட்சார்த்த நடவடிக்கையை முன்னெடுக்குமாயின் பிராந்தியத்தில் இருந்து தகுந்த மற்றும் நிச்சயமான பதில் நடவடிக்கைக்கு அது வழி வகுக்கும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதற்கு முன்னரும் வட கொரியா சீனா, ரஷ்யா, தென் கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளின் எதிர்ப்புக்களையும் மீறி வடகொரியா அணு ஏவுகணை ஒன்றை செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி இறுதி நேரத்தில் தோல்விக்குள்ளானது. ஆயினும் வடகொரியாவின் இத்தகைய செயற்பாடுகள் குறித்து அமெரிக்கா உள்ளிட்ட பல்வேறு நாடுகளும் தமது கண்டனங்களை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போது மீண்டும் அணு ஏவுகணைத் தள விஸ்தரிப்பில் ஈடுபட்டிருக்கின்றமையானது சர்வதேச அளவில் ஏனைய நாடுகளை ஆத்திரமூட்டும் செயலாக அமைந்துள்ளது என ஐ.நா.வின் அணுசக்திகள் பாதுகாப்பு தொடர்பிலான சபையின் பேச்சாளர் பி.பி.சியிடம் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

## ஆப்கனில் ஐவர் கடத்தல்

ஆப்கானிஸ்தானில் வடகிழக்கு மாகாணத்தில் வைத்து இரண்டு வெளிநாட்டு மருத்துவர்கள் உட்பட் ஐவர் கடத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு தன்னார்வத் தொண்டு நிறுவனமொன்றுக்காகப் பணியாற்றியவர்களே இவ்வாறு கடத்தப்பட்டுள்ளனர் என ஆப்கானிஸ்தான் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

ஆப்கன் ஆயுததாரிகளின் ஆதிக்கம், குறித்த மாகாணத்தில் இல்லாத போதிலும், குற்றச்செயல்களில் ஈடுபடும் உள்ளூர் குழுக்கள் அதிகளவில் காணப்படுகின்றன என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கடந்தப்பட்ட பெண் மருத்துவர்களையும், அவர்களின் மொழிபெயர்ப்பாளர்களையும் தேடும் பணிகள் இடம்பெறுகின்றது என ஆப்கன் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## பாகிஸ்தானில் தனி மாகாணம் அமைப்பதற்கு எதிராக ஆர்ப்பாட்டம்



பாகிஸ்தானில் மொகாஜிர் என்ற தனி மாகாணம் அமைக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அவாமி தெக்ரிக், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) மற்றும் மக்கள் அமான் கமிட்டி உள்ளிட்ட கட்சிகள் நேற்றுமுன்தினம் கராச்சியில் எதிர்ப்புப் பேரணி நடத்தின.

லயாரி என்ற இடத்தில் இருந்து கராச்சி பிரஸ் கிளப்புக்குப் பேரணி புறப்பட்டுச் சென்றபோது, மர்ம நபர்கள் பேரணி மீது சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டனர். இதனால் கூட்டத்தினர் நாலா புறமும் சிதறி ஓடினர்.

இந்தச்சம்பவத்தில் 12 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். 2பொலிஸார் உட்பட 35 பேர் காயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் தற்போது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூட்டைக் கண்டித்து, கராச்சியின் பல பகுதிகளில் கலவரம் வெடித்தது. அப்போது 40 வாகனங்களும், 6 கடைகளும் தீவைத்து எரிக்கப்பட்டன.

இதனால் போக்குவரத்து நிறுத்தப்பட்டது. கடைகள், அலுவலகங்கள் மூடப்பட்டன. வீதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.



கம்போடியாவில் இடம்பெற்று வரும் நில அபகரிப்புத் தொடர்பான வன்முறைகளில் பாதிக்கப்பட்ட சில பெண்களை அந்த நாட்டுப் பொலிஸார் அழைத்துச் செல்கின்றனர்.

## கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையைப் பரிசோதித்தது ரஷ்யா

ரஷ்யா, கண்டம் விட்டுக் கண்டம் பாயும் பெயரிடப்படாத புதிய நீண்டதூர ஏவுகணையை வெற்றிகரமாக பரீட்சித்துள்ளது.

நேட்டோவின் ஐரோப்பிய ஏவுகணைப் பாதுகாப்பு கட்டமைப்பை ஊடுருவிச் செல்லும் வகையில் இந்தப் புதிய ஆயுதம் வடிவமைக்கப்பட்டுள்ளது என ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

ஐரோப்பாவில் தமது புதிய ஏவுகணைப் பாதுகாப்புக் கட்டமைப்பை நேட்டோ செயற்படுத்தி சில நாள்களில் ரஷ்யா இந்தப் பரிசோதனையை மேற்கொண்டுள்ளது.

இந்த ஏவுகணை ஆறாயிரம் கிலோமீற்றர் வரை சென்று இலக்கை தாக்கக் கூடிய திறன் கொண்டதெனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



கடந்த செப்ரெம்பர் மாதம் தமது முதலாவது ஏவுகணைப் பரிசோதனை தோல்வியில் நிறைவடைந்த நிலையில், ரஷ்யா இந்தப் பரிசோதனையை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

நேட்டோ தமது அணு செயற்பாட்டை தடுப்பதற்கு முயற்சிப்பதாக ரஷ்யா குற்றஞ்சாட்டியுள்ள போதிலும், ஈரான் போன்ற நாடுகளில் இருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகவே இந்தக் கட்டமைப்பை உருவாக்கியுள்ளது என நேட்டோ கூறியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நாவின் தலைமைத்துவம் பலமற்றது



ஜெனிவா, மே.25

ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபை சிறந்த தலைமைத்துவத்தை வழங்குவதில் தோல்வி கண்டுள்ளது என்று சர்வதேச மன்னிப்புச் சபை குற்றஞ்சாட்டியுள்ளது.

சிரியா தொடர்பாக வலுவான நடவடிக்கையை மேற்கொள்வதில் உலக நாடுகள் தோல்வி கண்டுள்ளதாகவும் தனது வருடாந்த அறிக்கையில் சர்வதேச மன்னிப்புச் சபை குறிப்பிட்டுள்ளது.

சபையின் நிரந்தர உறுப்பு நாடான ரஷ்யா சிரியாவுக்கு ஆயுதங்களை விநியோகிக்கின்றது எனவும், சிரிய ஜனாதிபதி பஷார் அல் அசாத்தை தடைகளில் இருந்து சீனா பாதுகாக்கின்றது எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஐ.நா பாதுகாப்புச் சபையில் மறுசீரமைப்புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமெனவும் சர்வதேச மன்னிப்பு சபையின் செயலாளர் நாயகம் சலீல் செட்ரி கூறியுள்ளார்.

மனித உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு வீட்டோ அதிகாரம் பயன்படுத்தப்படக் கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சிரியாவில் பஷார் அல் அசாத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களின் போது இதுவரை ஒன்பதாயிரத்திற்கு அதிகமானவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா மதிப்பீடு செய்துள்ளது

# லிபியாவின் மனித உரிமை மீறல்களுக்கு தகவல் தொடர்பு நிறுவனம் உதவியதா?



லிபியாவின் முன்னாள் ஜனாதிபதியான கடாபி மேற்கொண்ட சித்திரவதைகளுக்கு உடந்தையாக இருந்தது என அமேசைஸ் என்ற தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளது. ஆனால் இந்த நிறுவனம் கடந்த செவ்வாயன்று இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ளது.

மனித உரிமைக்கான சர்வதேச அமைப்பும், மனித உரிமை சங்கமும் அமேசைஸ் நடவடிக்கைகள் குறித்து வழக்குத் தொடர்ந்தன. இதற்கிடையில் பிரான்ஸ் நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைக்கு வந்து விட்டது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த நிறுவனத்தின் மீது கடந்த ஒக்டோபர் மாதம் வழக்குத் தொடுக்கப்பட்டது.

பாரிஸ் உயர் நீதிமன்றத்தில் இனப்படுகொலை மற்றும் மனித உரிமை மீறலுக்கு எதிரான குற்றங்களையும், போர்க்குற்றங்களையும் விசாரிக்கும் நீதிபதி, அமேசைஸ் வழக்கையும் விசாரிப்பபார் என மனித உரிமைக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்தது.

லிபியாவில் மக்கள் பேசுவதைக் கண்காணிக்க அமேசைஸ் உதவியதால், தனக்கு எதிராகத் திட்டம் தீட்டுவோரின் உரையாடல்களைக் கேட்டு அவர்களைக் கடாபி சித்திரவதை செய்து கொன்று குவித்தார்.

எனவே மக்களின் பேச்சுரிமைக்குப் பாதிப்பு விளைவித்த அமேசைஸ் நிறுவனத்தின் மீது மனித உரிமை மீறல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அமேசைஸ் நிறுவனம், பாரிஸ் நீதிமன்றத்தில் நீதிபதி கோரும் அனைத்து ஆதாரங்களையும் சுட்டிக்காட்டி தான் குற்றம் புரியவில்லை என்பதை நிரூபிக்க முடியும் என்று உறுதிபடத் தெரிவித்தது.

# தீவிரவாதி அபுகதாதாவுக்காக வழக்கு நடத்தியவர்கள் அதிக பணம் பெற்றனர்

லண்டன்,மே.25

பிரிட்டனில் இஸ்லாமியத் தீவிரவாதியான அபுகதாதாவுக்காக வழக்கு நடத்தியவர்கள் 21 மில்லியன் பவுண்ட்ஸ் சேவைக்கட்டணமாகப் பெற்றனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிர்ன்பெர்க் பயர்ஸ் மற்றும் அவரின் நண்பர்கள் நிறுவனத்தைச் சேர்ந்த மனித உரிமை வழக்கறிஞர்கள் காரேத் பியர்ஸ் என்பவரைத் தலைமை வழக்கறிஞராகக் கொண்டு அபு கதாதாவை ஜோர்டான் அனுப்ப வழக்கு நடத்தினர்.

கடந்த 2002ஆம் ஆண்டிலிருந்து நடந்த இந்த வழக்குக்கு சேவை ஆணையத்தின் கணக்கின் படி 181,000 பவுண்ட்ஸ்கள் சராசரியாக ஒவ்வொரு சட்டத்தரணிக்கும் வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதாரம் சிக்கலாக இருந்த காலகட்டத்தில் இந்தத் தொகை வழங்கப்பட்டதற்கு வரி செலுத்துவோரிடையே மனவேதனை ஏற்பட்டது. தங்களின் வரிப்பணம் தீவிரவாதிகளுக்காக வாதாடும் சட்டத்தரணிகளுக்கு வருமானமாகப் போகிறதே என்று வருந்தினர்.

தலிபான் மற்றும் பிரிட்டனின் குவாண்டனாமோ வளைகுடாவைச் சேர்ந்த கைதிகளுக்காகவும் பியர்ஸ் போன்ற சட்டத்தரணிகளுக்கு அரசு தன் பொது நிதியிலிருந்து சேவைக் கட்டணம் செலுத்தியுள்ளது.

இவர்களின் வழக்குச் செலவும் வழக்கறிஞர் சேவைக் கட்டணமும் சேர்ந்து 21 மில்லியன் பவுண்ட்ஸ் என்றாலும் ஒவ்வொரு சட்டத்தரணியும் தனித்தனியாகப் பெற்றது ஆண்டொன்றுக்கு 29,000 பவுண்ட்ஸ் மட்டுமே ஆகும்.

## கனடாவில் 100 ஆவது நாளாகப் போராட்டம்

கனடாவில் கல்விக் கட்டண உயர்வை எதிர்த்து 1,55,000 பேர் மாண்ட்ரியல் மாநிலத்தில் மூன்று மாதங்களாகப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

போராட்டம் நூறாவது நாளை எட்டியதால் அந்த நாளைக் குறிக்கும் வகையில் ஆயிரக்கணக்கானோர் நேற்று முன்தினம் தெருவில் இறங்கிப் போராட்டம் நடத்தினர். இவர்களுக்கு கியூபெக் வழக்கறிஞர்கள் சங்கமும், தொழிற்சங்கமும் மற்றும் சிலரும் ஆதரவு தெரிவித்தனர்.

முதல்வர் ஜீன் கேரஸ்ட் கல்விக் கட்டண உயர்வுக்காக அறிமுகம் செய்த 78 ஆம் சட்ட வரைவை எதிர்த்து வாசகங்கள் எழுதிய அட்டையை ஏந்தி வந்தனர். காவல்துறையினர் நூற்றுக்கணக்கானோரைக் கைது செய்தனர்.

இதனையடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் பெரும் கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ளனர்.

சரவணா ரெக்ஸ்
வாடிக்கையாளருக்கான விசேட சலுகை
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு இந்தியாவில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட Special OFFICE WARE பஞ்சாபிதுணிகள் சாறிகள் இந்தியா விலைக்கே விற்பனை செய்யப் பட்டுவருகின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.
(கையிருப்பு முடியும் வரை)
இடம் - சரவணாரெக்ஸ் களஞ்சிய சாலை
சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம்
(ஆடித்தள்ளுபடி நடைபெற்ற இடம்)
கையிருப்பு முடியும்வரை
நேரம்- காலை 9.00 மணி தொடக்கம்
இரவு 7.00 மணி வரை
1 சில்க் சாறி- 500/=
1 கொட்டன் சாறி- 500/=
* இந்தியன் சீக்குன்ஸ் சாறிகள் - 1500/=
* இந்தியன் பட்டுச் சாறிகள் - (Full work) 3000/=
* இந்தியன் கஸ்மீர் சாறிகள் - 1500/=
* இந்தியன் மைசூர் சில்க் சாறிகள் - 2500/=
* இந்தியன் சுங்குடி வோயில் சாறிகள் - 1000/=
* ஜப்பான் சில்க் சாறிகள்
* இந்தியன் பான்சி சாறிகள் மற்றும் பாகிஸ்தான் பஞ்சாபித்துணிகள், சில்க் பஞ்சாபித் துணிகள், கொட்டன் பஞ்சாபித் துணிகள் மற்றும் ரெடிமேற் பஞ்சாபிகள்
* பெண்களுக்கான ரொப் - 500/=
* இந்தியன் ரெடிமேற் பஞ்சாபி - 2000/=
மற்றும் விதவிதமான சாறித் தெரிவுகள்
(சி/348) (2-6-9)

கணபதி துணை
ஸ்ரீ பரராஜசேகரப்பிள்ளையார் திருக்கோவில்
மஹோற்சவம் -2012
25.05.2012 வெள்ளிக்கிழமை

தீர்த்தோற்சவம்
மாலை 04.00மணி
மாலை 6.00மணி தென்னிந்திய புகழ் செல்வி B.சுசித்திரா அவர்களின் இசைக்கச்சேரி இடம்பெறும்.
www.inuvilinfo.com இணுவில்
(சி/1602)

இறைச்சிக்கோழி விற்பனை
புறொயிலர் குஞ்சு
சிவப்பின முட்டைக் குஞ்சு — நியூ பேனாட்
கோழித் தீன் வகைகள்
என்பனவும், இறைச்சிக்கோழி மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்கப்படும்.
சுத்தம் செய்த இறைச்சி 440/=
உயிர்கோழி-270/=
பிரின்சி கோழி பாம்
380, [illegible] வீதி, யாழ்ப்பாணம். 0776095749
உரிமையாளர்:- [illegible]
(C/1583) (2)

Restaurant TILKO
(Fully Air condition)
10% விலைக்கழிவு
(உணவுக்கு மட்டும்)
❖ சிக்கின் புரியாணி 395/-
❖ சிக்கின் நூடுல்ஸ் 295/-
❖ கொத்து 295/-
❖ Rice Meal 450/-
மேலும் மேலைத்தேய இந்திய, யாழ் உணவு வகைகளும்
Tilko Jaffna City Hotel(pvt) Ltd.
70/6, K.K.S. Road,Jaffna.
T.P:- 021 222 5969, 0771064385
0776943479
TILKO
(C/1671) (6-7-8)

Sale! Sale!
Sale! LANKA TILES
லங்கா ரைல்ஸ் இன்
வாடிக்கையாளர் நலன் கருதி
மாபெரும் மலிவு விற்பனை
23.05.2012 தொடக்கம் 30.05.2012 வரை
இடம்: 406, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்
(மனோகரா தியேட்டருக்கும் யாழ்.இந்துக்கல்லூரிக்கும் இடையில்)
Sale! Sale! Sale! Sale! Sale! Sale! Sale!
(C/153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவலைகளுக்கு விடை கொடுங்கள்

(21)

கணவர் அண்மையில் இல்லாத நிலையில் மனைவி மனோவியாதிக்குள்ளானாள். பிள்ளைகள் ஊதாரிகளாகிப் போனார்கள்.

குடும்பத்தில் அவர் எதிர்பார்த்த அன்போ, மகிழ்ச்சியோ இல்லாமல் போனது. அவர் நிம்மதியற்றவரானார். உள்ளேயும் வெறுமை, வெளியேயும் வெறுமை, 'வாழ்க்கை என்னை வஞ்சித்து விட்டது.'! என்று புலம்பினார்.

பணம் சொகுசுகளைப் போலவே கவலைகளையும் தந்துவிடுகிறது.

பணம் நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கும் வரைதான் வாழ்க்கை மகிழ்ச்சியளிக்கும். நாம் எப்போது பணத்தின் கட்டுப்பாட்டுக்குப் போய்விடுகிறோமோ அப்போதே மகிழ்ச்சியும் நம்மை விட்டு விலகிவிடுகிறது.

வறுமைதான் கவலைக்குக் காரணம் என்று எண்ணிக் கொள்ளாதீர்கள். வசதியுள்ளவனும் கவலைப்படுகிறான். இந்தப் பணத்தை எப்படிப் பாதுகாப்பது, எப்படிப் பெருக்குவது என்று. தோற்றவன் தான் கவலைப்படுவான் என்றில்லை. வெற்றி பெற்றவனும் கவலைப்படுவான், 'தொடர்ந்து வெற்றி பெற வேண்டும். தோல்வியை என்னால் தாங்கிக் கொள்ளமுடியாது' என்று.

கதே என்கிற அறிஞர் சொன்னார். 'வாழ்க்கை என்பது துயருறுவதே' என்று . கடவுள் யார் கையிலும் மகிழ்ச்சியை முழுசாய் தூக்கிக் கொடுத்துவிடவில்லை. தோற்றவன் எப்போதும் தோற்றுக் கொண்டிருக்கும் படியாக அவர் வைக்கவில்லை. அவர் தோல்விக்குப்பின் வெற்றியையும், துன்பத்துக்குப் பின் இன்பத்தையும் தரவே செய்கிறார்.

தன்னுடைய வாழ்க்கையில் பல இழப்புகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளானவர் அந்த ரொட்டிக்கடைத் தொழிலாளி. காலம் அவரைப் புடம் போட்டுக் கவிஞனாக்கியது. ஒரேயொரு கவிதைத் தொகுப்பின் மூலம் உலகப் புகழ் பெற்ற அந்த மனிதர் தான் கவிஞர் ரஃபீல். ஒரு சமயம் பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸ் அவரிடம் கேட்டார், ''எது உங்களைக் கவிஞனாக்கியது?'' என்று.

'துயரந்தான். என் காதல் மனைவியை மரணம் கைப்பற்றிக் கொண்டது. அந்தக் கவலை மாறுவதற்கு முன்பே அருமையான குழந்தையையும் நான் இழக்க நேர்ந்தது. சொல்லி முடியாத என் வருத்தங்களை நான் வெளியில் சொல்ல முயன்றேன். கவிதை எனக்குக் கைகொடுத்தது. அதுவே கவலைகளில் இருந்து என்னை மீட்டெடுத்தது. என் தனிமைத் துயர்நீக்கி அதுதான் என்னை இளைப்பாற்றியது' என்றார்.

இந்த வாழ்க்கையில் நாம் கவலைப்படக் காரணம் இருப்பது போலவே, மகிழ்ச்சி கொள்ளவும் காரணம் இருக்கிறது. ரஃபீலுக்கு கவிதை மாதிரி, பெர்னார்ட்ஷாவுக்கு நாடகம் மாதிரி, பீத்தோவனுக்கு இசைமாதிரி, எல்லோருக்கும் தங்கள் கவலைகளில் இருந்து வெளியே வர ஒரு வடிகால் இருக்குந்தானே!

அதீத எதிர்பார்ப்பும், திருப்தியற்ற மனப்போக்கும் கவலையைத்தரும். நம்முடைய நிகழ்த்தும் தன்மை (Possibility) யையும், அறிவுத் திறனையும் பொறுத்தே நம் எதிர்பார்ப்புகள் இருக்க வேண்டும். நம் சக்திக்கு அப்பாற்பட்டவைகளை அடைய முயன்று தோற்கிறபோது கவலை வருகிறது. எதிலும் மனநிறைவு காண முடிகிறவருக்கு கவலைப்படும் நிலை இருக்காது.

கவலையை வரமால் தடுத்துக் கொள்ளவும், வந்த கவலையை வெளியேற்றவும் வழியா இல்லை?

எத்தனையோ வழிகள்.

கவிதை எழுதுவது
ஓவியம் வரைவது
இசை கேட்பது
தோட்ட வேலையில் ஈடுபடுவது
வீட்டை ஒழுங்கு படுத்துவது.

என்று எத்தனையோ வேலைகள், வேலையறிந்து வேலை செய்தால் விரல் மடக்க நேரம் இருக்காது , என்பார்கள். மனதுக்குப் பிடித்த ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருங்கள். பின் கவலைப்படவே நேரம் இருக்காது.

உங்கள் கவலைக்குத் தீர்வு உலகின் மறுகோடியில் இல்லை, உங்கள் தெருமுனையில் நண்பனின் உருவிலும், உங்கள் வீட்டுக்குள் மனைவி, குழந்தைகளின் வடிவிலும் அது இருக்கிறது.!

**மனம் வசப்பட வேண்டும்**

மனதின் ஆற்றல்கள் மகத்தானவை. அவற்றைக் கொண்டு, பல அற்புதங்களை நிகழ்த்தலாம். எந்த மனம் தனது கற்பனை ஆற்றலைக் கொண்டு கவலைகளை வளர்த்துக் கொள்கிறதோ, அந்த மனத்தால் அதே கற்பனையைக் கொண்டு மகிழ்ச்சியைத் தோற்றுவித்துக் கொள்ள முடியும்.

நம் மனதுக்கும், உடலுக்கும் தொடர்பிருக்கிறது. மனதுக்கும் மூளைக்கும் தொடர்பிருக்கிறது. ஆம் மனம்தான் உடலுக்கும் மூளைக்கும் உயிர்ப்பு.

எண்ணமிடுதல், கற்பனை செய்தல், உள்ளுணர்வு, கருத்தறிவித்தல், ஞானதிருஷ்டி, தொலைவில் கேட்டல் என்று எண்ணற்ற ஆற்றல்களைக் கொண்டது. இந்த மனம் உடம்பையும், மனதையும், சமநிலையில் வைத்துக் கொள்ள வேண்டும். நேரிய சிந்தனை, நேர்மறை மனோபாவம், மனதை ஒரு முனைப்படுத்துதல், இவை மனதைச் சமநிலையில் வைத்துக் கொள்ள உதவும். உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, யோகா இவை உடம்பைச் சமநிலையில் வைக்கும்.

கவலை போன்ற எதிர்மறை உணர்வுகளில் மனதின் ஆற்றல் சிதறிவிடும். மனக்குழப்பம், சந்தேகம் இவை மனதின் செயல் வேகத்தைப் பாதிக்கும். நல்லொழுக்கமும், நற்சிந்தனைகளும் நம் மனதைக் கட்டுப்பாட்டில் வைக்கும். மனக் கட்டுப்பாடு [illegible] வலிமைக்கு உதவும்.

-சி.எஸ்.தேவநாதன் (தொடரும்)

# வறிய குடும்பங்களின் உற்பத்திகளுக்கு வங்கிகள் கடன்களை வழங்க வேண்டும்

## யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் கருத்து

யாழ்ப்பாணம்,மே 25

வறிய குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வங்கிகள் கடன் உதவிகளை வழங்கி அவர்களால் மேற்கொள்ளப்படும் விவசாயம், மீன்பிடி, சிறுகைத்தொழில் போன்ற துறைகளில் உற்பத்திகளை பெருக்க ஊக்குவிப்பு வழங்க வேண்டும் என யாழ். பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் பேராசிரியருமான பொன் பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

இலங்கை வங்கியின் வட மாகாண பிராந்திய நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட காலாண்டு பரிசுச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பாலசுந்தரம்பிள்ளை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-

வங்கிகள் தற்போது பல்வேறு துறைசார்ந்த அபிவிருத்திகளுக்குக் கைகொடுத்து வருகின்றன. தொழில் புரிவோர், தொழில் அற்றோர் எனும் பாகுபாடு இன்றி அனைவரும் வங்கிகளில் சேமிப்பை ஏற்படுத்துவதற்கு புதிய கணக்குகளை அறிமுகப்படுத்திய வண்ணம் உள்ளன.

வங்கிகள் மூலம் சேமிக்கும் பணம் ஒரு நீண்ட கால இடைவெளியின் பின்னர் அதிகளவு வருமானத்தைப் பெற்றுத்தர கூடியதாக உள்ளது.

அத்துடன் வங்கிகள் மூலம் கடன் பெற்றுக் கொள்ளும் வசதிகளும் உள்ளன.

வங்கிகள் குறிப்பாக வறிய மக்களின் வாழ்வாதார மேம்பாட்டை உயர்த்துவதற்கே தமது பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் எமது பிரதேச அபிவிருத்தியில் விவசாயம், மீன்பிடி ஏனைய சிறுகைத்தொழில் கள் முக்கிய பங்கு வகிப்பதால் அவற்றை மேற்கொள்வோருக்கு ஊக்குவிப்பு வழங்க வேண்டும்-என்றார்.

(எ-14)

> வங்கிகள் தற்போது பல்வேறு துறைசார்ந்த அபிவிருத்திகளுக்குக் கைகொடுத்து வருகின்றன. தொழில்புரிவோர், தொழில் அற்றோர் எனும் பாகுபாடு இன்றி அனைவரும் வங்கிகளில் சேமிப்பை ஏற்படுத்துவதற்கு புதிய புதிய கணக்குகளை அறிமுகப்படுத்திய வண்ணம் உள்ளன.

# கலாசார இலக்கியப் போட்டிகள்

யாழ்.பிரதேச செயலகம், சமுர்த்தி மகா சங்கம், சமுர்த்தி வங்கிகளூடாக சமுர்த்தி சிறுவர் கழகங்களுக்கிடையிலான கலாசார மற்றும் இலக்கியப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

வலயம், பிரதேசம், மாவட்டம், தேசிய மட்டங்கள் ரீதியாக நடத்தப்படும் இந்தப் போட்டிக்கு 5 முதல் 18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் பங்குபற்றலாம்.

தனிநபர் பாடல், நாட்டார் பாடல், கிராமியப் பாடல், அறுவடைப் பாடல்கள், ஊஞ்சல் பாடல்கள் கிராமிய நடனங்கள், அம் மன் கூத்து, காவடி, கோலாட்டம், அறிவிப்பாளர் போட்டி, பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டி, சிறுவர் கதைகள், குறு நாடகம் போன்ற போட்டிகளில் பங்குபற்றலாம்.

ஆர்வமுடைய மாணவர்கள் தங்கள் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், யாழ்.நகர் கிழக்கு சமுர்த்தி வங்கி, யாழ்.நகர் மேற்கு சமுர்த்தி வங்கி, சமுர்த்தி மகா சங்கம் ஆகியவற்றுடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். (எ-14)



சர்வதேச லயன்ஸ் கழகங்களின் இலங்கை மாவட்டம் 306 பி இற்கான வருடாந்த மகாநாடு அண்மையில் நீர்கொழும்பில் நடைபெற்றது. இதில் 47 ஆண்டுகள் லயன்ஸ் கழகங்களின் வரலாற்றில் வட மாகாணத்திலிருந்து முதன்முறையாக 2012/ 2013 ஆண்டுக்கான மாவட்ட ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக சிரேஷ்ட தலைவர் லயன் எஸ்.எஸ்.தங்கராஜா அவரின் பாரியார் லயன் சீமாட்டி ஜெயசோதி தங்கராஜா ஆகியோரை முதலாவது மாவட்ட உப ஆளுநராக தெரிவு செய்யப்பட்ட நீர்கொழும்பு லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த றஞ்சித் பெனார்ன்டோவும் அவரது பாரியாரும் வரவேற்கின்றனர். (ம)

# கணித செயற்பாட்டு போட்டி முடிவுகள்

சுன்னாகம்,மே.25

வலிகாமம் வலயத்தால் நடத்தப்பட்ட கணிதச் செயற்பாடுகள் போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. முதலாம் இடத்தை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை மாணவி செல்வி லக்சனா பரமசீலனும், இரண்டாம் இடத்தை வயாவிளான் மத்திய மகா வித்தியாலய [illegible] போட்டிக்குத் தெரிவாகியுள்ளனா.

பு. நிலவரசன்(இணுவில் மத்திய கல்லூரி), ஜோ. டியோன்(மல்லாகம் மகா வித்தியாலயம்), அ.சங்கீதா(உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயம்).அ. சஞ்சீவ்குமார் (வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்), கை.திபாகர் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை), த.தஜீபன்(சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம்), யே.டைசிகா (மயிலிட்டி வடக்கு கலைமகள் ம.வி.), த.தனிகன்(ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாலயம்) ஆகியோர் சிறப்புத் தெரிவுகளாகத் தெரிவாயின. (எ-38)

# வடமாகாண எழுத்தாக்க போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 25

மாகாணநிலைத் தமிழ் மொழித் தினப்போட்டிகள் -2012 இன் எழுத்தாக்கப் போட்டி முடிவுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. விவரம் வருமாறு:-

**சிறுகதை ஆக்கம்**

முதலாம் இடம் அ.கஜன் மு/ மல்லாவி மத்திய கல்லூரி, இரண்டாம் இடம் சு.சோபிகா யா/ மகாஜனாக் கல்லூரி, மூன்றாம் இடம் ய.பொஸ்ரினா கிளி/வேரவில் இந்து ம.வி,

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து**

நிர்மாணி வக்சலா வ/அக்ர போதி ம.வி,

பிரிவு 2

கவிசா சந்தகெரணி வ/மடு கந்த ம.வி.

(முற்றும்)

# சுற்றாடல் புகைப்படப் போட்டி

சுன்னாகம்,மே.25

மத்திய சுற்றாடல் அதிகார சபை உலக சுற்றாடல் தினத்தையொட்டி சுற்றாடல் புகைப்படப் போட்டியொன்றை நடத்தவுள்ளது.

பாடசாலைப் பிரிவு,திறந்த பரிவு என இரு பிரிவுகளாக நடத்தப்படும் இப்போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்கள் வழங்கப்படுவதுடன் ஜூன் 5ஆந் திகதி நடைபெறும் கண்காட்சியிலும் வெற்றி பெற்ற புகைப்படங்கள் சேர்த்துக் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

12 அங்குல உயரமும், 16 அங்குல அகலமும்கொண்டதான புகைப்படங்களை இம்மாதம் 27 ஆந் திகதிக்கு முன்னர் பரதிப் பணிப்பாளர் நாயகம், மத்திய சுற்றாடல் அதிகார சபை, இல.104, பரிசர பயச, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,பத்தரமுல்ல என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
**தொலைபேசி:**021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹறா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## எதிர்காலத் திட்டமிடல்கள் இப்போதே தேவை

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்திலும் வன்னி மாவட்டத்தின் சில இடங்களிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்கள் நடந்து கிட்டத்தட்ட ஒரு வருடமாகின்றது. சரியாகச் சொன்னால் 10 மாதங்கள் கடந்திருக்கின்றன.

30 வருட காலப் போரால் பாதிக்கப்பட்ட பின்னர், கடும் பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்ட பின்னர், ஜனநாயக வழியிலான பொறிமுறைகள் அனைத்தையும் இழந்து போன பின்னர் நடந்த தேர்தல் இது. அதன் மூலம் அரசின் மீதான தமது எதிர்ப்பை வெளி உலகுக்கு ஆணித்தரமாகப் பதிவு செய்த வடக்குத் தமிழர்கள், உள்ளூராட்சி சபைகளில் பெரும்பாலானவற்றின் நிர்வாகங்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கைகளில் ஒப்படைத்தனர். ஒரு சில சபைகளை அரசு கைப்பற்றியது.

வழக்கம் போலவே தமது அரசியல் தலைமைகளிடம் பொறுப்புக்களை ஒப்படைத்துவிட்ட தமிழர்கள், அவர்கள் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்கள் என்று வாளாவிருந்துவிட்டனர், தமக்கு ஒரு ஆபத்து வரும் வரைக்கும்.

ஆபத்து வந்தபோது இந்த உள்ளூராட்சி மன்றங்களும் அரசியல் தலைவர்களும் ''இதுநாள் வரை என்னத்தைக் கிழித்தார்கள்'' என்று கேள்வி எழுப்ப ஆரம்பித்துள்ளனர்.

நெல்லியடியில் கடை ஒன்று தீப்பற்றி எரிந்தபோது இத்தகைய குரல்களைத் தாராளமாகக் கேட்க முடிந்தது. தீயை அணைப்பதற்கான பொறிமுறை அங்கிருக்கவில்லை என்பதே அதற்கான காரணம். பருத்தித்துறை நகர சபை மற்றும் பிரதேச சபைகளுக்கு தொலைபேசி மூலம் தகவல் கொடுத்து சுமார் முக்கால் மணி நேரத்தின் பின்பே அங்கிருந்து பவுஸர்கள் தண்ணீருடன் வந்து சேர்ந்தன.

அதற்கு முன்பாக கடையிலுள்ள பொருள்கள் முற்றாக எரிந்து முடிந்திருந்தது. அங்கிருந்த இளைஞர்கள் சிலர் கிடைத்தமட்டில் தண்ணீரை அள்ளி தீ மேலும் பரவாமல் தடுப்பதில் மும்முரமாக இருந்தனர். பின்னர் இராணுவத்தினரின் பவுஸர் ஒன்று தண்ணீருடன் வந்து சேர்ந்து அந்த இளைஞர்களுடன் சேர்ந்து கொண்டது.

இவற்றின் பின்னரே நகர, பிரதேச சபைகளின் பவுஸர்கள் தண்ணீருடன் அங்கு வந்தன என்பதாலேயே மக்கள் வெகுண்டெழுந்து தீயை அணைப்பதற்கு இந்தச் சபைகளைச் சேர்ந்தவர்கள் எந்த வசதியையும் செய்து வைக்கவில்லையே என்று பேசிக் கொண்டார்கள்.

அதன் பின்னர் வடமராட்சிக்குத் தனியாக ஒரு தீயணைப்புப் பிரிவு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. வடமராட்சிக்கு என்றில்லை, எல்லா பிரதேச சபைகளிலுமே தீயணைப்புக்கான ஒரு தனியான பிரிவு இருக்க வேண்டியது அவசியம். யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் வன்னியிலும் அப்படியில்லை. யாழ். மாநகர சபையில் மட்டுமே தீயணைப்பு வண்டிகள் இப்போது உள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகங்கள் ஜனநாயகத் தலைமைகளின் கீழ் வந்த பின்னரும், மக்களின் இத்தகைய அவசியத் தேவைகளுக்கான கட்டமைப்புக்களை உருவாக்க மக்களாகிய நாமும் தமிழ்த் தலைவர்களும் தவறி இருக்கிறோம் என்பதையே இவை உணர்த்துகின்றன.

எதிர்காலம் குறித்த தீர்க்கமான திட்டமிடல்கள் எதுவுமின்றி எப்போதும் நாம் எதிலும் வெற்றியை அடையப் போவதில்லை. சிறந்த திட்டமிடல்களே தமிழர்களின் சிறப்பான எதிர்காலத்தை நிர்ணயிக்கும்.

# ஜனாதிபதி - ரணில் சந்திப்பும் திரைமறைவு அரசியலும்

■ சுழியன்

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் ஊடாகவே தீர்வு காணப்படும் என்று இலங்கை அரசு திட்டவட்டமாக அறிவித்துள்ள நிலையில், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்குமிடையில் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விவகாரம் தொடர்பில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது. இது தேசிய ரீதியாக மட்டுமல்ல சர்வதேசத்தின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

கடந்த திங்கட் கிழமை அலரி மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் அமைச்சர்களான மைத்திரிபால சிறிசேன, நிமல் சிறிபால டி சில்வா, சுசில் பிரேம ஜயந்த, டலஸ் அழகப்பெரும, பஸில் ராஜபக்ஷ ஆகியோரும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் மைக்கல் பெரேரா, ஜோன் அமரதுங்க, திஸ்ஸ அத்தநாயக்க, ரவி கருணாநாயக்க, லக்ஷமன் கிரியெல்ல ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் விசேட அழைப்பின் பேரிலேயே இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. தீர்வு விடயத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலேயே ஜனாதிபதி இந்த அவசர சந்திப்பை ஏற்பாடு செய்தார் என்று அரச உயர்மட்ட வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை தெரிவித்த விதப்புரைகளை நடைமுறைப்படுத்தல், தெரிவுக்குழு விடயம், சரத்பொன்சேகாவின் விடுதலை விவகாரம் ஆகியன குறித்து இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன.

எனவே தான் இந்தச் சந்திப்பின் போது மேற்குறிப்பிட்ட விடயங்களுக்குப் புறம்பாக-திரைமறைவில் பேசப்பட்ட விடயங்கள் குறித்துக் கவனம் செலுத்தப்படுகின்றது.


தென்னிலங்கையின் பிரதான இரு கட்சிகள் நடத்திய இந்தக் கலந்துரையாடலின் போது நாடாளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் கருத்துப் பரிமாறல்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கையில், ஐக்கிய தேசியக் கட்சியின் தூதுக்குழு அரசிடம் முக்கியமான நிபந்தனையை முன்வைத்தது.

### 13 ஆவது அரசமைப்புத் திருத்தம்

அதாவது 13 ஆவது அரமைப்புத் திருத்தத்தை அடிப்படையாகக் கொண்டே அரச தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்றும் அதற்கான உறுதிமொழியை அரசு எமக்குத் தர வேண்டும் என்பதுமே ஐ.தே.கவின் நிபந்தனையாக இருந்துள்ளது.

இந்தியாவின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட 13 ஆவது அரசமைப்புத் திட்டத்தை அரசு உடன் இரத்துச் செய்ய வேண்டுமெனப் பேரினவாத அமைப்புகள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில் அரசு அதற்கு அப்பால் செல்வதற்கு (13 பிளஸ்) தயார் எனக் கூறுகின்றது. சர்வதேசத்திடமும் இந்தப் பல்லவியைத் தான் பாடுகின்றது. ஆனால் ''பிளஸ்'' என்றால் என்ன என்பது இன்னும் புரியாத புதிராகவே உள்ளது.

தான் அள்ளி வீசிய உறுதிமொழிகளுக்கமைய அரசு நடவடிக்கைகளை முன்னெடுக்காததன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி மேற்படி நிபந்தனையை முன்னிலைப்படுத்தியுள்ளது என அறிய முடிகின்றது. அதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் இந்த நிபந்தனைக்கு அரச தரப்பு தன் மௌனத்தின் மூலம் சம்மதம் தெரிவித்துள்ளது.



தான் அள்ளி வீசிய உறுதிமொழிகளுக்கமைய அரசு நடவடிக்கைகளை முன் னெடுக்காததன் காரணமாகவே ஐக்கிய தேசியக் கட்சி மேற்படி நிபந்தனையை முன்னிலைப்படுத்தியுள்ளது

### ஐந்து முக்கிய அறிக்கைகள்

அடுத்ததாக, இனப்பிரச்சினைக்குத் தீர்வைக் காணும் நோக்கில் அரசுக்கும் தமிழ்த் தேசியகூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வந்த பேச்சுக்களின் போது கலந்துரையாடப்பட்ட ஐந்து முக்கிய அறிக்கைகளை அரசு முன்வைக்க வேண்டும் என்று இதன் போது ஐக்கிய தேசியக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரசுடனான பேச்சுக்களின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு தீர்வுத் திட்ட வரைவொன்றையும் கையளித்திருந்தது.

குறிப்பாக, அரசுக்கும் கூட்டமைப்புக்கும் இடையில் நடைபெற்று வந்த பேச்சுக்களின் போது கலந்துரையாடப்படும் விடயங்களை ஊடகங்களுக்குத் தெரிவிக்கக்கூடாது என்றும், இறுதியில் இரு தரப்பும் இணைந்து கூட்டு அறிக்கையொன்றை வெளியிடுவதாகவும் இரு தரப்பிற்குமிடையில் இணக்கம் ஏற்பட்டிருந்தது.

இதனால் தீர்வுத்திட்டப் பேச்சில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து ஐக்கியதேசியக் கட்சிக்கு உத்தியோக பூர்வமாக எதுவும் தெரியாது.

இதன் காரணமாகவே பிரஸ்தாப அறிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி தெரிவுக்குழுவில் முன்னிலைப்படுத்துமாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.

### தெரிவுக்குழுவுக்குக் கால அவகாசம்

தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டுக்கு வருவதற்குத் தவறிய அரசு, தெரிவுக்குழுவினூடாகத் தீர்வை எவ்வாறு முன்வைக்கும் என அங்கு எழுப்பப்பட்ட கேளிவியொன்றுக்கு, 6 மாத காலங்கள் என்ற காலவரையறையை அடிப்படையாகக் கொண்டே தெரிவுக்குழுவின் செயற்பாடுகள் அமையும் என அரச தரப்பிலிருந்து பதிலளிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தெரிவுக்குழுவுக்கு வருவதற்கு தமது கட்சி தயாராக இருக்கின்றது. எனினும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆயத்தமாகவில்லை. தெரிவுக்குழுவில் அங்கம் வகிப்பது அவசியம் இல்லையேல் அது வெற்றுக் குழுவாகும். எனவே தெரிவுக்குழுவுக்குக் கூட்டமைப்பு வருவதற்கான சூழலை அரசு உருவாக்கவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி தூதுக்குழு இதன்போது அரச தரப்பிடம் வலியுறுத்தியுள்ளது.

அது மட்டுமன்றி நல்லிணக்க ஆணைக் குழு தனது அறிக்கையில் முன்மொழிந்துள்ள சிபார்சுகளை அரசு நடைமுறைப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், அதற்கான கடப்பாடு அரசுக்கு உள்ளது என்றும் ஐக்கிய தேசியக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளைப் படிப்படியாக நடைமுறைப்படுத்தி வருகிறோம் என்றும், நிச்சயம் சிபார்சுகளை நாம் நடைமுறைப்படுத்துவோம் என்றும் அரச தரப்பினர் உறுதியளித்துள்ளனர்.

அதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பு முடிவடைந்த பின்னர் அன்றிரவே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைபின் நாடாளுமன்ற குழுத் தலைவர் இரா. சம்பந்தனையும் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அத்தநாயக்க, தேசிய அமைப்பாளர் தயா கமகே, மங்கள சமரவீர ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர். இதில் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்புக் குறித்து சம்பந்தனுக்கு விரிவாக எடுத்துரைத்த ஐ.தே.க.தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தெரிவுக்குழுவில் கூட்டமைப்பின் பங்களிப்பு அவசியம் என ஜனாதிபதி தெரிவித்த கருத்தையும் எடுத்தியம்பினார்.

அத்துடன் கூட்டமைப்பு தெரிவுக்குழுவுக்கு வரவேண்டியதன் அவசியத்தைத் தெளிவுபடுத்திய ரணில், கூட்டமைப்புக்குத் தனிப்பட்ட ரீதியில் அழைப்பு விடுத்தார் என அறிய முடிகிறது.

இருப்பினும் கூட்டமைப்பு, தனது நிலைப்பாட்டில் இருந்து தளராமல் அரசு நம்பகத்தன்மையை வெளிப்படுத்தும் வரை தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது எனத் திட்டவட்டமாக இடித்துரைத்துள்ளது. இந்தச் சந்திப்பு சுமார் 45 நிமிடங்கள் இடம் பெற்றுள்ளது.

### கூட்டமைப்பின் நிலைப்பாடு தளரவில்லை

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசுடன் இடம்பெற்றுவரும் பேச்சுகளின் மூலம் முதலில் இணக்கப்பாடு எட்டப்பட வேண்டும் என்றும், அதனைப் பரிசீலிப்பதாகத் தெரிவுக்குழு அமைய வேண்டும் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடாக இருந்து வருகின்றது. தேசிய இனப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வினைக் காணுமாறு இலங்கை அரசை சர்வதேச சமூகம் வலியுறுத்தி வரும் நிலையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, நாட்டின் பிரதான எதிர்கட்சியை அழைத்து தீர்வுத் திட்டம் குறித்துக் கலந்துரையாடியமை முக்கியம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் சி.யமுனாநந்தா

# தொங்கல் நீதியும் ஈழத் தமிழினமும்

**தொங்கல் நீதி என்பது சமூகத்தினை மீளாநிலை நிறுத்த இன்றியமையாதது. மேலும் உடைந்த நீதியினை மீளக் கட்டிபெழுப்பவும் ஜனநாயகத்தினை வலுப்படுத்தவும் தொங்கல் நீதியின் செயற்படு தன்மை அவசியம். இதன் மூலமே அமைதியான எதிர்காலத்தினை அமைக்க முடியும்.**

தொங்கல் நீதி என்பது பெரும் அழிவுகளை மனிதர்களால் சந்தித்த சமூகத்திற்கு விசாலமான செயன் முறைகள் மூலம் கடந்த கால அட்டூழியங்களுக்கு நீதியையும் பொறுப்புக் கூறும் தன்மையினையும் ஏற்படுத்தி நல்லிணக்கத்தினை அடைய முனைதல் ஆகும். இதில் சட்டத்திற்கு உள்பட்ட பொறிமுறைகளும் சட்ட முறைகளுக்கு வராத பொறிமுறைகளும் அடங்கும். இதன் பல்வேறு மட்டத்தில் சர்வதேச ஒத்துழைப்புக்கள் இருக்கலாம் அல்லது ஒத்துழைப்புக்கள் இல்லாது இருக்கலாம்.

தொங்கல் நீதி என்பது சமூகத்தினை மீள நிலை நிறுத்த இன்றியமையாதது. மேலும் உடைந்த நீதியினை மீளக் கட்டியெழுப்பவும் ஜனநாயகத்தினை வலுப்படுத்தவும் தொங்கல் நீதியின் செயற்படு தன்மை அவசியம். இதன் மூலமே அமைதியான எதிர்காலத்தினை அமைக்க முடியும். இதில் உண்மையினைக் கண்டறியும் குழுமங்கள் (Truth Commission) மனித உரிமை மீறலுடன் தொடர்புடையவர்களையும் துணை புரிந்தவர்களையும் மறைத்தவர்களையும் பொது நிர்வாகக் கட்டமைப்பில் இருந்தும் அரசியலில் இருந்தும் அகற்றல் (Lustration And Vetting) பழைய தவறுகளை வெளிப்படுத்தலும் நஷ்டஈடு வழங்கலும், புனர்வாழ்வு அளித்தலும் (Reparation) சம்பவங்களைக் கூட்டான மீள் நினைவுக்கு உள்படுத்தல் (Memorialisation) என்பனவாகும்

மேற் கூறிய பொறிமுறைகள் அடங்கிய தொங்கல் நீதியினை நடைமுறைப்படுத்தலே பிளவுபட்ட சமூகத்தினை மீளவும் இணைய சீர் செய்ய உதவும். மேலும் பாதிக்கப்பட்டவர்கள் பாதிப்பில் இருந்து மீள உதவும். சமூகத்தில் சட்ட ரீதியான பொறுப்புத் தன்மை ஏற்படும். யுத்தத்தின் வரலாற்றுப் பதிவினை உருவாக்கக் கூடியதாக அமையும். பல அமைப்புகளுக்கும் நிறுவனங்களுக்கும் தொங்கல் நீதியின் செயற்பாட்டுத் திறனை அறிவுபூர்வமாக உணர்த்தக் கூடியதாக அமையும். இதன் மூலம் சரியான சட்டத்தின் ஆட்சியினை நடைமுறைப்படுத்தக் கூடியதாக அமையும். மேலும் பாதுகாப்பு அமைப்புகளை ஜனநாயகமயப்படுத்தி மனித உரிமையை மேம்படுத்தல் மூலம் நிலையான சமாதானத்தினை உருவாக்கலாம். இவை பற்றி இலங்கையில் எவருமே சிந்திக்கவில்லை. ஆனால் இதனை நாம் இன்று சிந்தித்தால் தான் நாளைய சமூகம் சமாதானத்தினை நாடும் சமூகமாக வாழும். மேலும் போர்க்குற்றங்கள் சாட்டப்பட்டவர்கள் தமது ஆயுத மோகத்தினைக் கைவிடமாட்டார்கள். உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு குற்றம் இழைத்தவர்களை விசாரித்து அமைதியை ஊக்குவிக்க வேண்டும். செய்த தவறுகளுக்கு தண்டனைக்குப் பதிலாக நல்லிணக்கத்தினை உருவாக்க வேண்டும்.

பெரும் அழிவுகளைச் சந்தித்து 3 வருடங்கள் கழிந்த நிலையில் இலங்கை அரசு தொங்கல் நீதியின் செயற்படு தன்மையினை இன்னமும் வெளிப்படுத்தவில்லை. பொது நிறுவனங்களும் இது தொடர்பாக கதைக்கவில்லை. ஆனால் தற்போதைய சூழல் தொங்கல் நீதியின் இயங்கு தளத்திற்கான சூழலே. இதனை நாம் முறைசாரா முறையில் கூட ஆரம்பிக்கலாம். இதன் இலக்குகள் இனிமேலும் இவ்வாறான அழிவுகள் ஏற்படாது பாதுகாத்தல், தொடர்ந்தும் மனித உரிமைத் துஷ்பிரயோகம் தொடர்வதனை அனுமதிக்காது இருத்தல் என்பனவாகும். இதன் தாக்கம் அரசியல்வாதிகள், நிர்வாக அதிகாரிகள் என்பவர்களில் இருந்து பொதுமக்கள் வரை செல்வாக்குச் செலுத்தும். மேலும் போர் அழிவுகளால் ஏற்பட்ட மேல் வறுமையினையும் சமூக உளபொருளாதார மேனிலையும் ஏற்படுத்தக்கூடியதாக அமையும்.

இந்தச் செயற்பாடுகளினால் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவினை அமைக்கவும் குற்றவியல் நீதி விசாரணையை ஊக்குவிக்கவும் முடியும் அடுத்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு, புனர்வாழ்வு அளிக்கப்படும். நடந்த உண்மைகளை அறிய முடியும். நிர்வாக, அரசியல் கூட்டமைப்புக்களில் மாற்றங்களை கொண்டுவர முடியும். மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்களை பொதுப் பணியில் இருந்து அகற்றக்கூடியதாக அமையும்.

தென்னாபிரிக்காவின் உண்மையினைக் கண்டறியும் குழுவும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றமுமே பொதுவாக எமக்குத் தெரிந்தவை. ஆனால் இது போல் பல அமைப்புக்கள் உலகில் செயற்பட்டன. அது போல் நாம் செயற்படல் வேண்டும். மேலாண்மை ஆட்சி, அரசியல் வன்முறை, ஆயுதக் கலாசாரம், அன்னியத் தன்மையான ஆக்கிரமிப்பு என்பவற்றினை இல்லாது செய்ய எமக்கு உரிய தொங்கல் நீதியினை வரையறை செய்து செயற்படுத்துவது மிகவும் அவசியம். பிளவுபட்ட சமூகத்தில் மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களை (Social Repair in Divided Society) வெளிப்படுத்துவதற்குத் தகவல் தொடர்பான சட்டத்தின் சுதந்திரம், விசாரணைகள் ஆவணங்களை மீள வகைப்படுத்தல் உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுக்களில் உருவாக்கம் என்பன மிகவும் இன்றியமையாதவை.

தொங்கல் நீதியின் செயற்படுதன்மை சிறுவர்களில் இன அட்டூழியங்களின் தாக்கம் செல்வாக்குச் செலுத்தாது காக்க வேண்டும். போரினால் அனாதரவான பிள்ளைகளுக்கு சிறந்த சமூக உளக் கவனம் தேவை. இது இன்று போதியளவாக இல்லை. எனவே அதன் தாக்கம் அடுத்த சந்ததிக்குக் கடத்தப்படும். மேலும் போரினால் வெற்றி வீரர்களின் குடும்பங்களில் மேலதிக குழந்தைகளுக்கு அரச ஊக்குவிப்பு, அடுத்த 3 சந்ததிகளுக்குப் போர் வன்மத்தினைக் கடத்துவதற்கு ஏதுவாகும். சிறுவர்களுக்கான புனர்வாழ்வு சுதந்திரமாக அமைதல் மூலமே வன்முறைத்தாக்கம் அடுத்த சந்ததிக்கு கடத்தப்படாது.

இறுதியாகத் தொங்கல் நீதியே இன அட்டூழியங்களை எதிர்கொண்ட சமூகம், அதன் நிர்வாகிகளின் பழைய தவறுகளில் இருந்து மீண்டு புதிய சரியான பாதையில் நகருவதனைக் கோடிட்டுக் காட்டும். மேலும் நிர்வகிக்கும் திறனையும் மேன்மையடையச் செய்யும். இதனை ஈழத் தமிழர்கள் எதிர்பார்க்கின்றனர்.

மருத்துவர் ம.வேலாயுதம்

# பாலியல் கல்வி அவசியமா?

பெண்கள் மற்றும் சிறுவர்கள் மீதான வன்முறை சம்பந்தமான கலந்துரையாடலில் பாலியல் தொடர்பான கல்வி இன்மையும் அவர்களின் துஷ்பிரயோகத்திற்கு ஒரு காரணம் என தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே கொழும்பு சுகாதார மற்றும் கல்வி இலாகாவினால் உருவாக்கப்பட்ட பாலியல் கல்வித் திட்டம் தமிழ் பகுதியிலும் நடைமுறைப்படுத்த ஏற்பாடாகியுள்ளதாக அறிய முடிகிறது. தமிழ் கலாசார சிந்தனையுடைய கல்வியியலாளர்கள் மற்றும் அறிவியலாளர்கள் உடல், உளநல வைத்திய நிபுணர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்கு மாகாணப் பகுதியிலிருந்தும் பாலியல் கல்வி அறிமுகக் கலந்துரையாடலில் பங்கு பற்றியதாக விவரங்கள் தெரியவில்லை.



**பாலியல் கல்விமுறையை தமிழ் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்து முன் தமிழ் கல்விமான்களும் ஏனைய அறிஞர்களும் இது அவசியம் தானா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும்.**

இந்தப் பாலியல் கல்விமுறை தமிழ் மாணவர்களுக்கு அறிமுகப் படுத்தும் முன் தமிழ் கல்விமான்களும் ஏனைய அறிஞர்களும் இது அவசியம் தானா என்பதைத் தெளிவுபடுத்த வேண்டும். எங்கள் கலாசாரத்துக்குப் பாலியல் கல்வி அவசியமில்லை என்றே தோன்றுகிறது. இந்தக் கல்வியினால் எதிர்மறையான விளைவுகளும் ஏற்படலாம்.

கிட்டத்தட்ட நூறு வருட காலத்தில் இன்று வரை எங்கள் மத்தியில் உருவாகிய கல்விமான்கள் பல்துறை அறிஞர்கள், பெரும் தொழில் அதிபர்கள், சமயப் பெரியார்கள் தங்கள் பாடசாலைக் காலத்தில் பாலியல் கல்வி பாடம் படிக்காதவர்கள் என்பது உண்மை. முடிந்த போர்க் காலத்திற்கு பின்னர் தான் துஷ்பிரயோகம் தலை தூக்கியுள்ளது. அதற்குப் பல காரணங்கள் உண்டு. அவற்றில் பெற்றோரின் அலட்சியம், அறியாமை மற்றும் கைத்தொலைபேசி, சைக்கிள், மோட்டார் சைக்கிள் இவற்றின் அதிகூடிய பாவனைகள், மாணவர்களின் கையில் அளவு கடந்த பணம், தனியார் கல்வி நிலையங்கள், பாடசாலை ஒழுங்கு விதிகளை ஆசிரியர்களுக்குள் இருக்கும் பிரச்சினைகளால் அவற்றை கடைப்பிடிக்கத் தவறுவது போன்றவற்றைக் [illegible] லாம். ஆகவே முதலில் பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களுக்கு அவர்களின் பிள்ளைகளுக்கு ஏற்படக்கூடிய துர்நடத்தைகள் பற்றி விவரமான அறிவுறுத்தல்கள், ஆலோசனைகள் உரிய முறையில் வழங்கப்பட வேண்டும். முக்கியமாகப் பாடசாலை மாணவர்கள் மாலையில் தனியார் கல்வி நிலையம் சென்றாலும் மாலை 6 மணிக்கு முன்பதாக வீடு திரும்ப வேண்டும்.

பருவமடைந்த மாணவர்களுக்கு பாலியல் பற்றிய விவரங்கள் கூறாமல், இயல்பாகவே மனிதர்களில் தோன்றக்கூடிய எதிர்ப்பாலாரின் மேல் வரக்கூடிய ஆசைகளை முளையிலேயே [illegible] வளர்க்காமல்) தங்கள் பொறுப்பு அதாவது கல்வி, பாடசாலையில் நடத்தப்படும் போட்டிகள் இவற்றில் மேம்பட வேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்க வேண்டும். பெற்றோர், ஆசிரியர்களின் எதிர்பார்ப்பிற்குத் துரோகம் செய்யக் கூடாது போன்ற புத்திமதிகளை மாணவர்களுக்கு இடை சுகம் கூறிக்கொள்ள வேண்டும். அந்த மாணவர்கள் உகந்த முறையில் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள அறிவுரைகளையும் வழங்க வேண்டும். தெரிந்தவரோ, தெரியாதவரோ ஆசை வார்த்தை காட்டி வேண்டிக்கொள்ளப்படாத உதவி செய்ய வரக்கூடும். அவற்றை ஏற்கக்கூடாது. அவர்களுக்கு நன்றி தெரிவித்து அந்த உதவிகளுக்கு அப்பா, அண்ணா போன்றவர்கள் வந்து கொண்டு இருக்கிறார்கள் என்று கூறித் தப்பித்துக்கொள்ள வேண்டும்.

எனவே ஆசிரியர்கள், பெற்றோர்கள் இவர்களைப் போன்றவர்கள், கிடைத்த நேரங்களில் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களின் சமுதாயப் பங்கு, பெற்றோரின் எதிர்பார்ப்பு போன்ற விஷயங்களை ஞாபகப்படுத்த வேண்டும். ஏற்படக்கூடிய தேவையற்ற ஆசைகளை வளர்த்தால் அதனால் கஷ்டங்கள், கல்வியில் பின்னடைவு, வாழ்க்கையிலும் பின்னடைவு ஏற்படலாம். எனவே ஒழுக்கமாக வாழ்ந்து, படித்து முன்னேற வேண்டும் என்பதை வலியுறுத்த வேண்டும். எப்போதும் நல்ல நடத்தைகளைப் போதனைகள் தீர்மானிக்கின்றன.

மேலும் பாடசாலையில் காலை இறைவணக்கத்துடன், சமய, சன்மார்க்க சிறிய சொற்பொழிவிற்கு பின்னர் வயதான மாணவர்கள் கூட்டாக சபதம் எடுக்க வேண்டும். அதற்குரிய வசனங்கள் அமைக்கப்பட வேண்டும். உதாரணத்திற்கு

01) நான் இன்று சந்தோசமாகவும் ஆரோக்கியமாகவும் உற்சாகத்துடனும் இருக்கிறேன்.

02)எனது குறிக்கோள் படிப்பு, பாடசாலைப் போட்டிகளில் பங்கு பற்றுவது தவிர வேறொன்றுமில்லை.

03) இவற்றிற்கு ஏதாவது இடையூறு ஏற்பட்டால் நிச்சயம் உடன் பெற்றோரிடம் அல்லது ஆசிரியர்களிடம் முறையிடுவேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருகுலத்தில் தர்மம்

அந்தக் காலத்தில் குருகுலவாசம் செய்தே கல்வி கற்க வேண்டும்.குரு ஓர் ஆசிரமத்தில் இருப்பார். அங்கே போய் அவருக்குத் தொண்டுகள் செய்ய வேண்டும்; அவரது துணிகளைத் துவைத்துப்போட வேண்டும்; அவர் தூங்கும் போது அவருடைய காலைப் பிடித்துவிட வேண்டும்; புழுக்கமாக இருந்தால் அவருக்கு விசிற வேண்டும்.

இவ்விதம் அந்தக் காலத்தில் குருவுக்குத் தொண்டு செய்து, அவரிடம் கல்வி கற்க வேண்டும்.

அவர் கற்றுக் கொடுப்பதை சீடர்கள் ஓலைச் சுவடிகளில் எழுதிக் கொள்வார்கள். குருகுலவாசம் என்பது, மனதையும் அறிவையும் பயன்படுத்தும் ஒரு பயிற்சியாகவே இருந்தது.

அந்தக் காலத்தில் பஞ்ச பாண்டவர்கள் ஒரு குருகுலத்தில் கல்வி கற்பதற்குச் சென்றார்கள். ஏற்கனவே அங்கு பதினைந்து பேர் இருந்தார்கள். இவர்களையும் சேர்த்து அந்தக் குருகுலத்தில் மாணவர்களின் எண்ணிக்கை இருபது ஆகிவிட்டது.

எல்லோரும் மிகவும் ஆர்வத்துடன் அங்கு படித்துக் கொண்டிருந்தார்கள்.சில ஆண்டுகள் கழிந்தன.எல்லோரும் ஊருக்குத் திரும்ப வேண்டிய நேரம் வந்தது.குரு ஒவ்வொரு மாணவராகக் கூப்பிட்டு,"இது வரையில் நீ என்ன கற்றுக் கொண்டாய்?" என்று கேட்டார்.

அவரவர் தாங்கள் எழுதி வைத்திருந்ததைக் கூறினார்கள்; கற்றுக் கொண்டதைச் சொன்னார்கள்.அங்கே படிக்க வந்த மாணவர்கள் எல்லோருமே புத்திசாலிகள்; இளவரசர்களாக இருப்பவர்கள்.அதனால் அவர்களிடம் அபாரமான கல்வியறிவைக் குரு எதிர்பார்த்தார்.

ஒரு மாணவன் வந்தான். அவன் தான் எழுதி வைத்திருந்த சரித்திரப் பாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான். இன்னொரு மாணவ, அவன் தான் எழுதி வைத்திருந்த பூகோளப் பாடம் முழுவதையும் படித்துக் காண்பித்தான். இப்படி ஒவ்வொரு மாணவனாக வந்து படித்துக் காட்டிவிட்டுச் சென்றார்கள்.

கடைசியாகத் தர்மர் வந்து பேசாமல் நின்றார்.அவர் தன் கையில் இருந்த ஓலைச் சுவடிக் கட்டைப் பிரிக்கவே இல்லை.குரு தர்மரிடம்தான் அதிகமாக எதிர்பார்த்தார். ஆனால் தர்மர் பேசாமல் நின்றார்.

''நீ என்ன கற்றுக் கொண்டாய்? சொல்... ஓலைச் சுவடியைப் பிரித்துப் படி...'' என்றார் குரு. தர்மர் அசையவே இல்லை, மெதுவாகச் சொன்னார்;''ஐயா நான் ஒன்றே ஒன்றுதான் கற்றுக்கொண்டேன். அதுவே வாழ்க்கையில் எனக்கு மிகவும் முக்கியமான பாடமாக அமையும்'' என்றார்.

''என்னிடம் இவ்வளவு காலம் இருந்து படித்து... கற்றுக் கொண்டது ஒன்றே ஒன்றுதானா?'' என்று கேட்டார் குரு.அவருக்கு ஒன்றும் புரியவில்லை. 'மற்ற மாணவர்களை விடத் தர்மன் பண்புகளில் உயர்ந்தவன்... அறிவில் சிறந்தவன்...வயதில் முதிர்ந்தவன்...இவனே இப்படிச் சொன்னால் மற்றவர்களின் நிலை என்ன? அவர்கள் கெட்டுப் போய்விடுவார்களே?' என்று குரு நினைத்தார்.

''தர்மா... நன்றாக யோசனை செய்து பதில் சொல்...குருகுலத்தில் நீ இவ்வளவு காலம் இருந்து என்ன கற்றுக் கொண்டாய் என்று கேட்கிறேன்'' என்று குரு சிறிது கோபமாகக் கேட்டார்.

தர்மர் முகத்தில் எந்த மாறுதலும் இல்லை. அவர், ''இல்லை ஐயா... இவ்வளவு காலமாக நான் கற்றுக் கொண்ட முக்கியமான பாடம் ஒன்றே ஒன்றுதான்'' என்று திரும்பவும் கூறினார்.

இப்போது குருவுக்கு கடும் கோபம் வந்துவிட்டது.அவர் கோபத்துடன், ''உனக்கு வெட்கமாக இல்லையா? உன்னைவிட வயதில் குறைந்தவர்கள் எவ்வளவோ பாடம் கற்றுக் கொண்டிருக்கிறார்கள்! எவ்வளவு விரிவாகப் படித்துக் காட்டினார்கள். நீயும் ஓலைச் சுவடியில் நிறையக் குறித்துத்தானே வைத்திருக்கிறாய்? அதை ஏன் எடுத்துப் படிக்கக் கூடாது?'' என்று கேட்டார்.

''ஐயா! நான் சொல்வது உங்களுக்கு ஏமாற்றமாக இருந்தால் என்னை மன்னித்து விடுங்கள். நான் மிகவும் முக்கியமான பாடமாக ஒன்றே ஒன்றைத்தான் கற்றுக் கொண்டிருக்கிறேன். மற்ற எதையும் எடுத்துச் சொல்வதற்கு நான் விரும்பவில்லை'' என்றார் தர்மர்.

இதைக் கேட்டதும் எல்லா மாணவர்களும் சிரித்து விட்டார்கள். குருவுக்கு கோபம் அளவு கடந்து போயிற்று.அவர் தர்மரின் கன்னத்தில் ஓங்கி அறைந்தார்.அதனால் தர்மரின் கன்னம் சிவந்து விட்டது... அவரது கண்கள் கலங்கின.ஆனாலும் தர்மர் அமைதியை இழக்கவில்லை. தலைகுனிந்து நின்றார். தர்மரின் பிடிவாதம் முனிவருக்கு மேலும் ஆத்திரத்தை ஏற்படுத்தியது.அதனால் அவர் தர்மரின் இன்னொரு கன்னத்திலும் அறைந்து விட்டார்.

எல்லோரும் பயந்து போய் அமைதியாக நின்றார்கள். குரு, ''அப்படி நீ கற்றுக் கொண்ட அந்த முக்கியமான பாடம்தான் என்ன? அதையாவது சொல்'' என்று கத்தினார்.''ஐயா... அதை மட்டும் ஓர் ஓலைச் சுவடியில் தனியாகக் குறித்து வைத்திருக்கிறேன். இந்தாருங்கள்... நீங்களே படியுங்கள்'' என்றார் தர்மர்.

குரு அதை வாங்கிச் சத்தம் போட்டுப் படித்தார்.

''எப்படிப்பட்ட சோதனை ஏற்பட்டாலும், நிதானம் இழந்து கோபத்துக்கு ஆளாகக் கூடாது'' -இதுதான் தர்மரது ஓலைச் சுவடியில் எழுதப்பட்டிருந்தது.

அந்த ஒரு விநாடியிலேயே குருவும், மற்ற மாணவர்களும், 'தர்மர் கற்றுக் கொண்டது வெறும் ஏட்டுச் சுரைக் காய் இல்லை... வாழ்க்கையில் பயன் படக் கூடிய மிக முக்கியமான அனுபவப் பாடம்' என்ற உண்மையைப் புரிந்து கொண்டார்கள்.



குருவின் கண்களில் கண்ணீர்... அவர் தர்மரை அன்போடு கட்டித் தழுவிக் கொண்டு, ''தர்மா...என்னை மன்னித்து விடு. நீ சாதாரண மாண வன் அல்ல...நான் இதுவரையில் தெரிந்து கொள்ளாத அனுபவப் பாடத்தை நீ இப்போது எனக்குக் கற்றுக் கொடுத்து விட்டாய். நீ என்னு டைய மாணவன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்குத்தான் பெருமை'' என்றார். ''நிதானம் தவறக் கூடாது'' என்பது நாம் எல்லோரும் கற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நல்ல பாடம்.

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**



# சமூக வளர்ச்சிக்கு அரும்பணியாற்றும் வலி.கிழக்கு சைவ அருள்நெறி மன்றம்




சமூகத்தோடு இணைந்த நிலையில் சமயத்தையும் மானிட நேயத்தையும் வளர்த்து வயது வேறுபாடு இன்றி அனைத்துத் தரப்பினரையும் மேல் நிலைப்படுத்துவதற்கு தமது பணி முன்னெடுப்புக்களை மேற்கொண்டு வருகின்றது வலி.கிழக்கு சைவசமய அருள் நெறி மன்றம். 1966 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்கள் 23 நாள் இதன் கால் கோள்விழா கோப்பாய் வீரபத்திரர் கோயில் முன்மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் கால்கோள்விழாவில் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்ததோடு அதன் பணி தொடர ஆசி வழங்கியிருந்தார். மன்றத்தின் ஸ்தாபகரும் தலைவருமான சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்கள் தீர்க்க தரிசன சிந்தையோடு ஆரம்பித்த மன்றத்தின் ஆரம்பகாலநாமம் 'வலிகிழக்கு திருவருள் தவநெறி மன்றம்'.

ஈழத்தின் மூத்த பத்திரிகையாளர்களில் ஒருவரும் தமிழ் இன உணர்வாளருமான கோவை மகேசனின் (சுதந்திரன் ஆசிரியர்) உடன் பிறந்த சகோதரன் குருக்கள் ஐயாவும் ஊடகவியலாளராக ஆரம்பகாலத்தில் பணியாற்றியவர் ஈழநாடு பத்திரிகையில் ஹரன் ஐயர் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிய காலத்தில் ஈழநாடு பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராக கடமையாற்றியவர். சமூக மேம்பாடு கருதி சமயத்தோடு இணைந்த நிலையில் தனது பணி முன்னெடுப்புக்களை தளராத நிலையில் தனது 68 ஆவது வயதிலும் மேற்கொண்டு வருகின்றார்.

> திருவருள் தவநெறி மன்றம் என்ற பெயரோடு தமது பணிகளை 46 வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட மன்றத்தின் செயற்பாடுகள் போர்க்காலச் சூழ்நிலை, மற்றும் நாட்டு நிலை காரணமாக இடைக்காலத்தில் ஸ்தம்பிதம் நடைபெற்றுள்ள போதிலும் ஆரம்பகால நோக்கங்களை அடியொற்றி தமது பணிமுன்னெடுப்புக்களை தொடர்ந்து கொண்டு வருகின்றது.

திருவருள் தவநெறி மன்றம் என்ற பெயரோடு தமது பணிகளை 46 வருடங்களுக்கு முன்னர் மேற்கொண்ட மன்றத்தின் செயற்பாடுகள் போர்க்காலச் சூழ்நிலை, மற்றும் நாட்டு நிலைகாரணமாக இடைக்காலத்தில் ஸ்தம்பிதம் நடைபெற்றுள்ள போதிலும் ஆரம்பகால நோக்கங்களை அடியொற்றி தமது பணிமுன்னெடுப்புக்களை தொடர்ந்து கொண்டு வருகின்றது.

சைவசமய அருள் நெறி மன்றத்தின் அலுவலகம் கோப்பாய் தெற்கு வீரபத்திரர் கோயிலின் வடக்கு வீதியில் உள்ள தலைவர் குருக்கள் ஐயாவின் இல்லத்தில் அமைந்துள்ளது. மன்றத்தின் ஆரம்பகால பெயரான திருவருள் தவநெறி மன்றம் என்பது ''சைவ சமய அருள் நெறி மன்றம்'' என மாற்றம் செய்யப்பட்டு இந்து கலாசார அலுவல்கள் அமைச்சில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றத்தின் சேவைகள் என்ற வகையில் மக்கள் மத்தியில் சைவநெறி ஆன்மிகத்தை வளர்த்தல், சமயம் தொடர்பான பிரசாரம், பிரசங்கம், கருத்தரங்குகளை மக்கள் மத்தியில் ஏற்பாடு செய்து நடத்துதல், சமய அறிவுப் போட்டிகள் மற்றும் சமயம் தொடர்பான போட்டிகளை நடத்துதல் மூலம் மாணவர்களை கல்வி மேம்பாடடையச் செய்தல்

✱சமய நாயன்மார்கள் பெரியோர்களின் குருபூசைத் தினங்களை கொண்டாடுதல்,

✱மாணவர்களுக்கு சமயம், தமிழ், கணினி அறிவினை [illegible] இலவசமாக குறித்த துறை [illegible]களை நடத்துதல்,

✱வருடம்தோறும் நடைபெறும் ஆண்டுவிழாவில் தமிழ், சைவம், கலை, கலாசாரம், சார்நிலையில் தொண்டு செய்பவர்களை அறிஞர்களைப் பாராட்டிக் கௌரவித்தல்,

✱நலிவுற்ற மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

மன்றத்தின் சேவை நோக்கு சைவ சமயம் சார்நிலையில் மட்டுப்படுத்தப்படாமல் சமூக மேம்பாட்டை உள்ளடக்கியதாக சமயங்கடந்த நிலையில் மேற்கொள்ளப்பட்டு வருவதை அவதானிக்க கூடியதாக உள்ள துறை சார்நிலை விற்பன்னர்கள் மற்றும் அறிஞர்களைப் பாராட்டி கௌரவித்தல், நலிவுற்ற குடும்பங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு உதவுதல், மாணவர்களின் கல்வி அறிவை உயர்நிலை பெறச்செய்தல் என்ற வகையில் சகல மதங்களைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கியதாக மேற்கொண்டுவருவது சகல சன்மார்க்க மேம்பாட்டிற்கு வளம் சேர்ப்பதோடு மனிதநேயம் சார்நிலையில் பணிமுன்னெடுப்புகள் மேற்கொள்வதையும் வெளிப்படுத்துகின்றது.

வலி.கிழக்கு பிரதேச செயலர், நல்லை ஆதீன முதல்வர் உள்ளிட்ட பிரமுகர்களை மன்றக் காப்பாளர்களாகவும், கல்வியாளர்கள் மற்றும் பல்கலைக் கழக பேராசிரியர்கள் மற்றும் சமூகப் பிரமுகர்களை ஆலோசகர்களாகவும் கொண்டு செயற்படும் வலி.கிழக்கு சைவசமய அருள்நெறிமன்றத்தின் தலைவராக சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக்குருக்களும், உபதலைவராக வைத்தியகலாநிதி வை.தியாகராசாவும், செயலாளராக பிரமஸ்ரீ ச.காந்தராஜேஸ்வ ரசர்மாவும் உப செயலாளராக சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனும், பொருளாளராக பிரம்மஸ்ரீ பி.ரவிசங்கர சர்மாவும் கடமை புரிகின்றனர்.

மன்றத்துக்கென தனித்துவமான விதிகளை உள்ளடக்கிய யாப்புடன் செயற்படும் சைவ சமய அருள்நெறிமன்றம் வலி. கிழக்கில் அமைந்துள்ள போதிலும் அதன் செயற்பாடுகள் மற்றும் பணி முன்னெடுப்புக்கள் பிரிவுகள் எல்லைகளைக் கடந்த நிலையில் யாழ்.மாவட்டம் சார்நிலையிலும் தமிழ் இனம்சார் நிலையிலும் அமைந்திருப்பதோடு மனித நேயம் சார்நிலையிலும் மேற்கொள்ளப்பட்டு வருவதும் காலத்தின் தேவையறிந்து காத்திரமான முறையில் செயற்படுவதும் பாராட்டைப் பெற்றுள்ளது.

சம காலச் சூழலில் சமயம் தொடர்பாக இளைய தலைமுறையினர் மத்தியில் குழப்பமான நிலை காணப்படுவதையும் நிறுவன மயப்படுத்தப்பட்ட நிலையில் சைவ சமயம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் மன்றத்தின் செயற்பாடுகள் முன்னெடுப்புக்கள் மேற்கொள்ளப்படுவதும் காலத்தின் கட்டாயமாகும்.

ஞானி

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீருடை மோசடி; விசேட விசாரணை

குருநாகல்,மே 25

குருநாகல் பாடசாலை ஒன்றில் நடைபெற்றதாகக் கூறப்படும் பாடசாலை சீருடை மோசடி குறித்து கண்டறிவதற்கு விசேட விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று குருநாகல் கல்வி வலயப் பணிப்பாளர் சிரிமெவன் பொடிநிலமே தெரிவித்தார்.

கடந்த ஏப்ரல் மாதம் விடுமுறைக்கு முன்னர் இந்தப் பாடசாலையில் சீருடை மோசடி நிகழ்ந்துள்ளது. ஐந்து பெட்டிகளில் வெள்ளைச் சீருடைகள் கல்வி அலுவலகத்துக்கு மீண்டும் ஒப்படைப்பதற்கு ஓட்டோவில் எடுத்துச் செல்லப்பட்டதாக குறித்த பாடசாலையின் ஆசிரியர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

குறித்த பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள் சிலர் இந்த மோசடியில் சம்பந்தப்பட்டுள்ளனர் என்று பாடசாலையின் சில ஆசிரியர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

மோசடியுடன் தொடர்புடைய ஆசிரியர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்காத மாணவர்களுடைய கையொப்பத்தை இட்டு மோசடியில் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# நில அதிர்வுகள் குறித்து தெளிவுபடுத்த நடவடிக்கை

## நுவரெலியா மாவட்ட செயலாளர் தெரிவிப்பு

நுவரெலியா,மே 25

நில அதிர்வு சிறிய சம்பவமாக இருந்தாலும் இது தொடர்பாக அவதானமாக இருக்க வேண்டும். அதே வேளை இவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்பட்டால் மாணவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு தெளிவுபடுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ. பீ. ஜீ. குமாரசிரி தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலாளர் அலுவலகத்தில் நாட்டில் சில இடங்களில் ஏற்பட்ட நில அதிர்வு தொடர்பாக கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எந்த ஒரு விடயத்தையும் நாம் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக் கூடாது சுனாமி வந்த பொழுது அது தொடர்பாக எமக்கு தெளிவான ஒரு நிலைப்பாடு இருக்கவில்லை. அதன் காரணமாக நாம் அழிவுகளைச் சந்திக்க நேர்ந்தது. எனவே நில அதிர்வு என்பது எமக்கு புதிய விடயமாக இருந்தாலும் அது தொடர்பான அறிவை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.

> சுனாமி வந்த பொழுது அது தொடர்பாக எமக்கு தெளிவான ஒரு நிலைப்பாடு இருக்கவில்லை. அதன் காரணமாக நாம் அழிவுகளை சந்திக்க நேர்ந்தது.

குறிப்பாக பாடசாலை மாணவர்களையும் பொது மக்களையும் தெளிவுபடுத்த வேண்டும். சிலவேளைகளில் எமது வாழ்நாளில் நில அதிர்வுகளை நாம் சந்திக்க வாய்ப்பில்லை. அப்படி ஒரு நிலை எமக்கு ஏற்படவும் கூடாது. இருப்பினும் அது தொடர்பான அறிவை நாம் கொண்டிருக்க வேண்டும்.

எதிர்காலத்தில் பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் நாம் சில வேலைத் திட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளோம். இதன்போது அனைத்து சாராரையும் இணைத்துக் கொள்ள திட்டமிட்டுள்ளோம். நுவரெலியா மாவட்டத்தில் இயற்கையாகவும் செயற்கையாகவும் அமையப்பெற்ற பல நீர்த்தேக்கங்கள் உண்டு.

தலவாக்கலையில் மேல் கொத்மலை நீர் தேக்கத்தில் மீன்பிடிக்கச் சென்ற ஒரு சிறுவன் இறந்துள்ளான். இது மிகவும் மன வேதனைக்குரிய செயல். இந்த குற்றத்தை அதிகாரிகள் மீது பழிபோடுவது பிழையான செயலாகும். அதில் அனைவருக்கும் பொறுப்பு உண்டு. அதற்காகவே இவ்வாறான தெளிவுபடுத்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்- என்றார். (ச)

# கண்டி பஸ் உரிமையாளர்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம்



கண்டி,மே 25

கண்டி - வடகொட வீதிக்கு புதிதாக பஸ்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கியதை எதிர்த்து கண்டி, பூஜாபிட்டிய வீதியில் பயணிக்கும் பஸ் ஊழியர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

அரசியல்வாதி ஒருவருடைய தலையீட்டில் புதிதாக பஸ்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன. பின்னர் குறித்த பஸ்கள் அதிக விலைக்கு விற்பதாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்ட ஊழியர்கள் தெரிவிக்கின்றனர்.

புதிதாக வழங்கப்பட்ட அனுமதிப் பத்திரத்தை ரத்து செய்யும் வரை தமது ஆர்ப்பாட்டத்தைக் கைவிடப் போவதில்லை என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (ச)



நுவரெலியாவுக்கான சுற்றுப் பயணத்தை நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொண்ட சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன விமான நிலையம் அமைப்பதற்கான இடங்களைப் பார்வையிட்டார். இவருடன் மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக்க, நுவரெலியா மாவட்ட செயலாளர் டீ.பீ.ஜீ.குமாரசிரி உட்படப் பலர் சென்றிருந்தனர்.

## ஆயுதத் தொழிற்சாலை சிக்கியது

மாத்தறை,மே 25

மாத்தறை மாவட்டத்தின் அக்குரஸ்ஸ, தெடியாகல பகுதியில் ஆயுதங்கள் தயாரிக்கும் நிலையம் ஒன்றை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

பலகைத் தொழிற்சாலை என்ற போர்வையில் இந்த ஆயுதத் தயாரிப்பு நிலையம் இயங்கியுள்ளது. இந்த முற்றுகையின்போது ஒரு நபரை பொலிஸார் கைது செய்தனர்.

எந்த ரகத் தோட்டாவையும் பயன்படுத்தக்கூடிய துப்பாக்கிகளைத் தயாரிக்கும் ஆற்றலை குறித்த சந்தேக நபர் கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சந்தேக நபரிடமிருந்து துப்பாக்கிகளை வாங்கிய நபர்களை பொலிஸார் தேடி வருகின்றனர். (ச)

# அட்டாளைச்சேனை மக்களின் அரசியல் தலைவன் மசூர்

## மு.கா. செயலர் ஹமீட் அனுதாபம்

மட்டக்களப்பு,மே 25

கிழக்கு மாகாண சபையின் உறுப்பினராகவும், அட்டாளைச்சேனை பிரதேசசபை தவிசாளராகவும் இருந்து பிரதேச மக்களுக்கு அளப்பரிய சேவைகள் ஆற்றிய நல்லதொரு சகோதரரை நாம் இழந்துள்ளோம். அவரின் இழப்பை கிழக்குக்கு பெரும் இழப்பாகவே கருத வேண்டியுள்ளது என்று அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் வை.எல்.எஸ்.ஹமீட் தெரிவித்துள்ளார்.

மர்ஹூம் மசூர் சின்னலெப்பையின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கிழக்கில் இலங்கை முஸ்லிம் காங்கிரஸை பலப்படுத்துவதில் மர்ஹூம் மசூர் சின்னலெப்பையின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாக இருந்தது. தேர்தல் காலங்களில் போட்டியிடுகின்ற போதும், மிகவும் சாதுவாக மக்களுடன் பழகக் கூடிய உள்ளத்தை அவர் கொண்டிருந்தார்.

குறிப்பாக அட்டாளைச்சேனை மக்களால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் அரசியல் தலைவராக, அவரை நாம் காணுகின்றோம்- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்பூட்டல்

கல்முனை,மே 25

சாய்ந்தமருது பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் சுனாமி முன்னெச்சரிக்கை விழிப்பூட்டல் செயலமர்வு நேற்றுமுன்தினம் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சாய்ந்தமருது பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 17 கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் தீகவாபி இராணுவமுகாம் தலைமை அதிகாரி மேஜர் டீ.கமகே, அம்பாறை மாவட்ட இடர் முகாமைத்துவ உதவியாளர் சீ.முகுந்தன் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ச)

# ஒலுவில் கடலரிப்பால் தொடரும் மீனவர் அவலம்

ஒலுவில்,மே 25

கடந்த பல தினங்களாக ஒலுவில் பிரதேசத்தில் ஏற்பட்டிருக்கும் கடலரிப்பினால் அப்பிரதேச மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

வேகமான கடலரிப்புக் காரணமாக மீனவர்களின் தொழில் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.கடற்கரை ஓரங்களில் காணப்பட்ட மீனவர்களுடைய வாடி வீடுகள் மற்றும் களஞ்சியசாலைகள், கடைகள், வலை முதலிய மீன்பிடி உபகரணங்கள், கரையோரத்தில் காணப்பட்ட அதிகமான தென்னை மரங்கள், வெளிச்சவீட்டின் அடிக்கட்டுகள் என்பன அனைத்தும் கடலரிப்பால் அழிக்கப்பட்டு மிகப்பரிதாபமாகக் காணப்படுகின்றன.

அன்றாடம் கடலுக்குச் சென்று மீன் பிடிக்க, தொழிலுக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது என அப்பிரதேச மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றார்கள். அதுமட்டுமல்லாமல், தங்களுடைய தோணிகளை நிறுத்துவதற்குக்கூட இடமில்லாத நிலை ஏற்பட்டிருக்கிறது. கடலலை ஊருக்குள் வருகின்ற அபாயம் ஏற்பட்டிருக்கிறது என்றும் அச்சம் தெரிவிக்கின்றார்கள்.

மீண்டும், புதிய வாடி வீடுகளை அமைப்பதற்கும், இழப்பீடுகளைப் பெறுவதற்கும் முடியாதவர்களாக இவர்கள் காணப்படுகின்றார்கள். எனவே உரியவர்களால் இதற்கான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படும் என்று அப்பிரதேச மீனவர்கள் கோருகின்றனர். (ச)

# மலையக மக்களுக்கான சலுகைகள் இ.தொ.கா. பெற்றுக் கொடுத்தவையே

## தொழிலாளர் காங்கிரஸ் தெரிவிப்பு

நுவரெலியா,மே 25

மலையக மக்கள் இன்று அனுபவித்து வரும் உரிமைகளும், சலுகைகளும் இ.தொ.காவின் அர்ப்பணிப்போடு மேற்கொண்ட போராட்டங்களாலும், அணுகுமுறைகளாலும் கிடைத்தவை என்பதில் மாற்றுக்கருத்துக்கள் இருக்கமுடியாது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

மலையக மக்கள் இன்று சுமார் 200 வருடங்களுக்கு மேலாக லயன் அறைகளில் வாழ்கின்றனர். இதனால் இவர்களின் வாழ்க்கை ஒரு வட்டத்துக்குள் முடங்கிக் கிடக்கின்றதென வெளிவந்த செய்திக்கு பதிலளிக்கும் வகையில் இ.தொ.கா ஊடகப்பிரிவு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

மலையக மக்களின் வரலாற்றில் இரண்டு நூற்றாண்டுகள் என்றபோதிலும் அவர்களது வாழ்க்கைத் தரம் படிப்படியாக உயர்ந்து, இன்று அவர்கள் மாடி வீடுகளிலும் தனி வீடுகளிலும் சுகாதார அடிப்படையில் வாழ்ந்து வருகின்ற நிலையை நாம் பார்க்கின்றோம்.

லயத்து வாழ்க்கையில் சொல்லொணா துன்பங்களையும், துயரங்களையும் அனுபவித்து வருவதாக பறைசாற்றுகின்றவர்கள் மலையக மக்களின் வாழ்க்கையை கொச்சைப்படுத்தியும் வாழ்க்கை முறைமைகளை வெளிச்சம் போட்டு காண்பிப்பவர்கள் தலைவர்களாக முடியுமா? கடமையை தட்டிக்கழிப்பவர்கள் தலைவர்களாக ஆக முடியாது.

1970 ஆம் ஆண்டு அமரர் தொண்டமானின் வழிகாட்டலில் நுவரெலியா, லபுக்கலையில் தோட்டத் தொழிலாளர்களுக்கு தனித் தனி வீடுகள் அமைத்து கொடுக்க நடவடிக்கை எடுத்ததை இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**மேடம்:** சில தகவல்கள் மன உற்சாகத்தைக் குறைக்கும். பொறுப்புடனும், தன்னம்பிக்கையுடனும் பணியாற்ற வேண்டிய நாள். வீட்டுக்கு வரும் உறவினர்களால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடலாம். உறவினர்களிடையே மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். தொழிலில் திடீர் நடவடிக்கைகளை மேற்கொள்வீர்கள். சற்று யோசித்துச் செயல்படுங்கள்.

**இடபம்:** வெற்றிச் செய்திகள் வீடு தேடி வரும். காலை நேரத்தில் கணிசமான பண வரவுக்கு வாய்ப்புகள் உண்டு. குழந்தைகளின் வேடிக்கையான பேச்சுக்கள் அதிகம் சிந்திக்க வைக்கும். பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பால், தொழில் இடர்பாடுகள் தீரும். வீண் விரயங்களுக்கும் வாய்ப்பு உண்டு.

**மிதுனம்:** சிந்தனை கூடும். சிறப்புகள் ஏற்படும். முரண்பாடாக செயல்பட்ட நண்பர்கள் நல்லாதரவு கொடுக்க முன்வருவர். தொழிலுக்கான நிதி தேவைக்கு வங்கிகளின் உதவியை நாடுவீர்கள். அரசியல்வாதிகளின் சந்திப்பைத் தவிர்க்கவும். உங்களின் முயற்சிகளுக்கு மாமன், மைத்துனர்கள் உறுதுணையாக இருப்பர்.

**கடகம்:** மகிழ்ச்சி கூடும். மனதில் மாற்றமான சூழ்நிலை நிலவும். விமர்சனம் செய்தவர்களைக் கூட, விரும்பி நட்புக்களை ஏற்படுத்திக் கொள்வீர்கள். வீட்டுக்காக சில ஆடம்பரப் பொருள்கள் வாங்குவீர்கள். கடிதங்கள் மூலம் எதிர்பார்த்த தகவல் வருவதில் தாமதம் ஏற்படும்.

**சிங்கம்:** பெண்களால் உருவான மனக் கலக்கம் அகன்று மாற்றங்கள் காண்பீர்கள். நிதி நிலை மேம்படும். தொழிலில் எதிர்பாராத விதமாக சில இடர்பாடுகளைச் சந்திக்கக் கூடும். அனுபவம் உள்ளவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பதன் மூலம் பிரச்னைகளைத் தவிர்த்துக் கொள்ள முடியும். சுப விடயம் ஒன்றுக்காகப் பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

**கன்னி:** இனம்புரியாத குழப்பம் மனதில் ஏற்படும். தன்னம்பிக்கை குறைந்து உள்ளத்தில் சோர்வு ஆள்கொள்ளும். எதுவும் தங்களால் முடியும் என்பதை மனதில் நினைவில் கொள்ளுங்கள். உற்சாகம் ஏற்படும். எதிர்ப்புகளை புத்திசாலித்தனத்தால் வெல்வீர்கள்.

## நாளை

வைகாசி 13 சனிக்கிழமை 26.05.2012
திதி: பஞ்சமி மு.ப.11.04வரை
நட்சத்திரம்: பூசம் சித்தம் மு.இ 08.56வரை
சுபநேரம்: 02.52- 04.22 வரை
ராகு காலம்: 08.52- 10.22 வரை

**துலாம்:** நட்பு, பகை பாராமல் உதவி செய்து மகிழ்வீர்கள். செலவுகள் இருந்தாலும் புதிய பணவரவுகளால் அதைச் சமாளிப்பீர்கள். மருத்துவச் செலவுகள் ஏற்படும். வியாபார விடயங்களில் அலைச்சல்கள் உண்டாகலாம். சுப விடயங்களில் கலந்து கொள்வீர்கள்.

**விருச்சிகம்:** ஆனந்தமான அனுபவங்களைச் சந்திப்பீர்கள். வருமானம்வரும் வழிகளை அதிகரிக்க முயற்சி மேற்கொள்வீர்கள். குடும்ப உறுப்பினர்களின் செயல்பாடுகள் அதிகம் யோசிக்கவைத்தபோதும், அதனை வெளிக்காட்டாமல் கொண்டு செல்வீர்கள். அலுவலகப் பணிகளில் பளு கூடும். முன்கூட்டியே திட்டமிட்டு கொள்ளுங்கள்.

**தனுசு:** எண்ணிய விடயங்கள் நிறைவேற இறைவழிபாடு மேற்கொள்வீர்கள். குடும்பத்தில் சில விவகாரங்களில் இல்லறத் துணையோடு வாக்குவாதங்கள் ஏற்படும். சற்று யோசித்தீர்களேயானால் வாதத்தைத் தவிர்த்துக் கொள்ளலாம். செலவுகளில் சிக்கனம் கொள்வீர்கள். தாமதம் அடைந்த விடயம் ஒன்று முடிவுக்குவரும்.

**மகரம்:** உணர்ச்சிவசப்பட்ட சூழ்நிலையில் செயல்படுவீர்கள். வீண் பிரச்சினைகளில் சிக்காமல் இருக்க பொறுமையுடன் செயல்படுங்கள். சட்ட விவகாரங்கள் சாதகமாக அமையும். வரவை விட ஓரிரு மடங்கு செலவுகள் அதிகரிக்கும். வாகனம் இயக்கும் போது வேகத்தோடு விவேகமும் கலந்து இருக்கட்டும்.

**கும்பம்:** சுகமான இனிய அனுபவங்களைச் சந்திப்பீர்கள். உறவுகள், நட்புகள் மூலம் நன்மைகள் கிடைக்கும். இல்லறத் துணையின் மாற்றமான செயல்பாடுகள் சந்தோஷம் கொள்ளச் செய்யும். வியாபாரம், தொழிலில் முன்னேற்றமான பலன்களைக் காணலாம். வேலைப்பளு கூடினாலும் அதற்கேற்ற வருமானம் கிடைக்கலாம்.

**மீனம்:** மனதில் உற்சாகம் கூடும். தாமதப்பட்ட பணிகளை விரைந்து செய்து முடிப்பீர்கள். இல்லறத் துணையின் அனுசரிப்பு, கூடுதல் உதவியாக இருக்கும். தாயாரால் சிறு மனக் கஷ்டம் ஏற்பட்டபோதும் பெரிதுபடுத்திக் கொள்ளாதீர்கள். தொழிலில் எதிர்பாராத லாபம் கிடைக்கும். மாலையில் நண்பர்கள் சந்திப்பும் அவர்களுக்கான செலவுகளையும் மேற்கொள்வீர்கள்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 3 | | 8 | | 5 | 6 |
| | 6 | 2 | | 9 | 5 | | | 3 |
| 5 | 8 | | | | 4 | | | |
| 2 | | 9 | 6 | | | | | |
| | | 6 | 4 | | 9 | 7 | | |
| | | | | | 3 | 1 | | 9 |
| | | | 9 | | | | 4 | 8 |
| 9 | | | 8 | 4 | | 5 | 7 | |
| 8 | 4 | | 5 | | 2 | | | 1 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 9 | 7 | 1 | 3 | 6 | 4 | 5 | 2 |
| 2 | 5 | 6 | 4 | 8 | 9 | 3 | 1 | 7 |
| 1 | 3 | 4 | 5 | 2 | 7 | 6 | 8 | 9 |
| 7 | 2 | 3 | 8 | 6 | 1 | 9 | 4 | 5 |
| 4 | 6 | 8 | 9 | 7 | 5 | 2 | 3 | 1 |
| 5 | 1 | 9 | 2 | 4 | 3 | 7 | 6 | 8 |
| 6 | 8 | 2 | 7 | 1 | 4 | 5 | 9 | 3 |
| 9 | 4 | 1 | 3 | 5 | 2 | 8 | 7 | 6 |
| 3 | 7 | 5 | 6 | 9 | 8 | 8 | 7 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் செந்தில்நடராஜா

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்)



காரைநகர், தங்கோடையைப் பிறப்பிடமாகவும், பண்ணாகத்தை வசிப்பிடமாகவும்கொண்ட பொன்னம்பலம் செந்தில் நடராஜா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம்) (21.05.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான க.பொன்னம்பலம் - சிவபாக்கியம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான பண்டிதர் ஆறுமுகம் - அற்புதமலரின் மருமகனும் திலகவதி யாரின் அன்புக் கணவரும் ஜனனி, கம்சவாகினி, தர்சிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஆனந்தநடராஜா (அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான மனோரஞ்சிதம், தில்லைநடராஜா மற்றும் சுந்தரநடராஜா (லண்டன்), திலகவதி ஆகியோரின் சகோதரரும், காலஞ்சென்ற கோபாலன் மற்றும் புனிதவதி, மாலினி (லண்டன்), சிவகுமார், விவேகானந்தன் (நோர்வே), சிவானந்தன் (லண்டன்), முருகானந்தன் (நோர்வே), வசந்தமலர், மங்கையர்க்கரசி (நோர்வே) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பண்ணாகம் தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:
குடும்பத்தினர்.

(18501) (2-6-7)

# Immediate Vacancy

28 Positions available now Earn Rs.45,000 per month. Company gives 6 month trainning in

* Sales
* Customer Relationship
*Supervisory
*Management

Contact Immediately
Manager
Innovage Company International

021 7200867
077 5566226

(18505) (6-7-8)

# கண்ணீர் அஞ்சலி

எமது உயிருக்கு உயிரான உறவினரும்
யாழ்.வலயக் கல்விப் பணிமனையின்
பாடசாலைகள் வேலைப்பகுதியின்
ஓய்வு பெற்ற தொழில் நுட்ப
உத்தியோகத்தருமான



## பொன்னம்பலம் செந்தில்நடராஜா

(21.05.2012)திங்கள் காலமான
செய்தியறிந்து நாம் அனைவரும்
துயருற்றிருக்கும் அதே நேரம், அவரது
இழப்பால் துன்பத்தில் துடிக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible]
குடும்பத்தினர்
திருநெல்வேலி.

(18503) (2-6-7-9)

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
01★ 06★ 1980
இறப்பு
02★ 05★ 2006

## அமரர் இராசரத்தினம் றஞ்சித்

திதி:- 2012.05.25

ஆறாண்டுகள் சென்றபோதிலும்
ஆறவில்லை எம் மனத்துயரம்
நீ எம்மை விட்டுச்சென்றது வெகுதூரம்
ஆனாலும் எப்போதுமே எம்முடனே
எம்மில் ஒருவராய் வாழ்கின்றாய்.

நாவற்குழி சந்தி

சகோதரன் -
நகிலன் மற்றும்
குடும்பத்தினர்.

(18502) (2-6-9)

# நீங்கா நினைவில் ஒன்பதாம் ஆண்டு



வையத்துள்
09★ 02★1932
வானுலகில்
04★ 06★ 2003

## அமரர் கோணேசபிள்ளை சிவபாதசுந்தரம்

(ஓய்வுபெற்ற அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்,
சோலைவரிப் பகுதி - யாழ்.மாநகரசபை)

திதி:- 2012.05.25

கோணேச்சரத்தில் ஓர் கோணேஸ்வரர்
சிவனடியில் ஓர் சிவபாதசுந்தரம்
மூவுலகையும் ஆண்ட முருகபக்தரே!
முத்தமிழால் கவி பல வளர்த்தீர்

ஒன்பதாவது ஆண்டையொட்டிய பின்னரும்
ஒல்காப் புகழ் பெற்று மிளிர்கின்றீர்!
நினைத்த நேரமெல்லாம் வருகின்றீர் - எம்
நினைவுகளில் ஆடிப் பதிந்தீரே!

118/4, பிறவுண் வீதி
யாழ்ப்பாணம்.

என்றும் நீங்கா நினைவுடன்
- குடும்பத்தினர்.

(18380) (2-6-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரக் குற்றங்களால் இலங்கைக்கு கடும் நிதி இழப்பு

## ஆய்வில் தகவல்

கொழும்பு,மே25

பொருளாதாரக் குற்றங்கள் காரணமாக இலங்கைக்கு கடந்த இரண்டு வருடங்களில் பல பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

சர்வதேச கணக்கியல் நிறுவனத்தின் ஆய்வின்படி, பொருளாதாரக் குற்றம் அதிகரித்துள்ளமையை 83 வீத தரவுகள் உறுதிப்படுத்தியுள்ளன.

கைத்தொழில்துறையில் மாத்திரம் பொருளாதாரக் குற்றம் காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் 3 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. விவசாயத் துறையில் 2.5 பில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது. இதனை தவிர இலங்கையில் நிதி சம்பந்தப்பட்ட ஊழல் மற்றும் ஏனைய காரணங்களின் அடிப்படையிலேயே அதிகளவான பொருளாதாரக் குற்றங்கள் இடம்பெறுகின்றன.

இந்த ஆய்வுக்காக இலங்கையில் உள்ள 50 மில்லியன் முதல் 10 பில்லியன் ரூபா வருட வருமானமாகக் கொண்ட 400 அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் 5000 வரையிலான பணியாளர்களிடம் கேள்விகள் கேட்கப்பட்டன.

இதில் 70 வீதமான பணியாளர்கள் நிறுவனங்களில் ஊழல்கள் இடம்பெறுவதை ஏற்றுக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதில் 44 வீத பொருளாதாரக் குற்றங்கள் விநியோகப் பிரிவுகளில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



சம்பள அதிகரிப்பைக் கோரி கொழும்பிலுள்ள பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு அலுவலகத்துக்கு முன்னால் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தினர் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

# களனி கங்கையில் தங்கம்?

தங்கம் இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து பலர் களனி கங்கையில் தங்கம் பிரித்தெடுக்க படை யெடுத்து வருகின்றனர்.



களனி கங்கை, பூகொட பகுதியில் தங்கம் இருப்பதாக தகவல் வெளியானதை அடுத்து தங்கத்தைப் பிரித்து எடுக்க பலரும் முயன்று வருகின்றனர். இவர்கள் பயன்படுத்தும் ஒருவகை இரசாயன திரவத்தால் சூழலுக்கு பாதிப்பு ஏற்படும் என்று பூகோள மற்றும் அகழ்வாராய்ச்சி நிலையம் தெரிவித்துள்ளது. இந்த இரசாயன திரவம் பயன்படுத்துவது சட்டவிரோத மானதென நிலையத்தின் தலைவர் என்.பி. விஜயானந்த தெரிவித்தார்.

தங்கம் இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து பலர் களனி கங்கையில் தங்கம் பிரித்தெடுக்க படையெடுத்து வருகின்றனர் என்று அவர் குறிப்பிட்டார். எனினும் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்ட செயலாளர்களை நேற்று வியாழக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடி சட்ட திட்டத்துக்கு அமையத் தங்கத்தை பிரித்தெடுக்க மக்களுக்கு வாய்ப்பளிக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ச)

# முதியோருக்கு 1,000 ரூபா

## ஜூன் முதல் ரூ.700 அதிகரிப்பு

கொழும்பு,மே 25

இலங்கையில் வாழும் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்கு எதிர்வரும் ஜூன் மாதம் முதல் 1000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும் என்று சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா நேற்றுமுன்தினம் புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

முதியோரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகள் மீதான விவாதத்தை நாடாளுமன்றத்தில் ஆரம்பித்துவைத்து உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 11 வீதமாகக் காணப்படுகின்றது. கல்வியறிவும், சுகாதார வசதிகளும் அதிகரித்தமையே நாட்டில் முதியோர்களின் எண்ணிக்கை அதிகரிக்க காரணமாகும்.

இதுவரை முதியோருக்கு அரசினால் உதவித் தொகையாக 300 ரூபாவே வழங்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் இவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு 1,000 ரூபா கொடுப்பனவை வழங்க அரசு தீர்மானித்தது.

நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பல பெயர்களில் முதியோர் இல்லங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 248 இல்லங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

எதிர்வரும் காலத்தில் சகல முதியோர் இல்லங்களும் கட்டாயம் பதிவு செய்யப்பட வேண்டும். இனிவரும் காலங்களில் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும் - என்றார். (ச)

# வெளிநாடு சென்ற விரிவுரையாளர் 11 பேர் வருகை

கொழும்பு,மே25

உயர் கல்விக்காக வெளிநாடு சென்று நீண்டகாலமாகத் தங்கியிருந்த 11 விரிவுரையாளர்கள் மீண்டும் தமது பல்கலைக்கழகங்களில் சேவையாற்றுவதற்குத் திரும்பி வந்துள்ளனர் என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை தெரிவித்தார்.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கலாநிதிப் பட்டங்களை கொண்டுள்ள கல்வியியலாளர்களுக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் முகமாக இத்தகைய விரிவுரையாளர்களை ஈர்ப்பதற்கான திட்டங்களை அரசு ஆரம்பித்துள்ளது என்று அவர் கூறினார். (ச)

# சேமிப்பு வங்கி முறைகேடுகளை விசாரிக்க தெரிவுக்குழு தேவை

கொழும்பு,மே25

தேசிய சேமிப்பு வங்கியின் கொடுக்கல் வாங்கல், ஊழிய சேமலாப நிதி யத்தின் நிதிப்பயன்பாடுகள் ஆகியன தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா நேற்று முன்தினம் நாடாளுமன்றில் கோரிக்கை விடுத்தார்.

தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெற்ற பணக் கொடுக்கல், வாங்கல்கல் தொடர்பில் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றி யபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய சேமிப்பு வங்கியில் மிகமோசமான கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தனது உறவினர்களையும் நண்பர்களையும் தேர்ந்தெடுத்தே குழுக்களை அமைத்துள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கியின் நற்பெயருக்கு தற்போது அபகீர்த்தி ஏற்பட் டுள்ளது. அதனைப் போக்குவதற்கு அரசு கட்டாயம் நடவடிக்கை எடுக்கவேண் டும். மோசடியு டன் தொடர்புபட்டவர்களைத் தண்டிக்க வேண்டும்.

தேசிய சேமிப்பு வங்கியின் தலைவர் இராஜினாமா செய்துள்ளதன் மூலம் பிரச்சினைகளை மூடிமறைக்க முடியாது.

தேசிய சேமிப்பு வங்கியில் என்ன நடந்தது என்பது தெரியாமல் மக்கள் பெரிதும் குழப்பமடைந்துள்ளனர்.

அந்த வங்கியில் முதலீடு செய்த பணத்தை மீளப் பெறுவதற்கு வங்கியின் முன்னால் மக்கள் நிற்கின்றனர்- என்றார். (ச)

# சூதாட்டக் கும்பலின் தலைவர் கப்ரால்

## அநுரகுமார எம்.பி. குற்றச்சாட்டு

கொழும்பு,மே25

நாட்டில் நிதிக் கும்பலொன்று இருக்கின்றது. இந்த சூதாட்டக் கும்பலின் பிரதான தலைவராக அஜித் நிவாட் கப்ரால் நியமிக்கப்பட்டுள்ளார் என்று ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டியுள்ளார்.

தேசிய சேமிப்பு வங்கியில் இடம்பெற்ற பணக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷா டி சில்வா கொண்டு வந்த சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையை வழிமொழிந்து உரை நிகழ்த்துகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தேசிய சேமிப்பு வங்கியில் திருட்டுத்தனமான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன. மக்கள் பணத்திலேயே இந்த மோசடி நிறைந்த கொடுக் கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளன.

தேசிய சேமிப்பு வங்கி எந்தெந்தக் கம்பனிகளின் பங்குகளை வாங்கியுள்ளது என்பதை அறிவிக்க வேண்டும். அதேசமயம் மோசடியில் ஈடுபட்டோர் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ச)

# அரசியல் தலையீடு இன்றிய விசாரணையே நடத்தப்படும்

## பொலிஸ் ஆணைக்குழு தகவல்

ஏதாவது ஒரு விசாரணையில் எவராவது அரசியல் செல்வாக்கைப் பிரயோகிக்க முயன்றால் அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் அல்லது ஏழு வருட சிறை விதிக்கப்படும்.

கொழும்பு,மே25

அரசியல் தலையீடுகளுக்கு விட்டுக்கொடுக்காமல் எந்தவொரு முறைப்பாட்டையும் தான் ஆராயவுள்ளதாக பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அரசியலமைப்பின் 17 ஆவது திருத்தத்தால் முன்பு வழங்கப்பட்ட அதிகாரங்கள் இப்போது இல்லாதுவிடினும் நாடாளுமன்றத்தின் கீழ் இந்த ஆணைக்குழு வருவது அதற்கு பலம் சேர்ப்பதாக உள்ளது என்று பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஏதாவது ஒரு விசாரணையில் எவராவது அரசியல் செல்வாக்கைப் பிரயோகிக்க முயன்றால் அவருக்கு ஒரு லட்சம் ரூபா அபராதம் அல்லது ஏழு வருட சிறை விதிக்கப்படும் என்று பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவர் சேனக வலகம்பாய கூறினார்.

18ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் படி பொலிஸ் ஆணைக்குழுவுக்கு ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை, இடமாற்றம், இடைநிறுத்தம் ஆகிய அதிகாரங்கள் உள்ளன என்று அவர் தெரிவித்தார்.

பொலிஸ் ஆணைக்குழு செயற்படத் தொடங்கிய பின் 224 முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 129 முறைப்பாடுகளை பொலிஸ் ஆணைக்குழு விசாரித்து வருகின்றது என்று அவர் தெரிவித்தார்.

சிறிய பிரச்சினைகள் மீதான முறைப்பாடுகள் 30 நாள்களிலும், பெரிய பிரச்சினைப் பற்றிய முறைப்பாடுகள் 60 நாள்களிலும் விசாரித்து முடிக்கப்படும்-

இந்த ஆணைக்குழு தொழிற்பட தொடங்குவதற்கு முன் செய்யப்பட்ட முறைப்பாடுகள், உரிய நடவடிக்கைகளுக்காக பொலிஸ் மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொது மக்களுக்கு உதவும் வகையில் பொலிஸ் ஆணைக்குழுவின் அலுவலகங்கள் ஏழு மாகாணங்களில் அமைக்கப்பட்டுள்ளன என்றும் வலகம்பாய தெரிவித்தார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்லையடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த பொங்கல் விழாச் சிறப்புமலர் - 25.05.2012

## வில்வையம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட்பார்வை

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்மனின் அருட் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று

இன்றைக்கு சுமார் 46 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட் பார்வை இவ்விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம் அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத்தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன்னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக் குழம்பின் மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்து கின்றன.



வில்வை மரத்தானை வெவ்வினைகள் களைவானை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வானை
பொல்லா வினையகல புங்கங்குளத்தூர் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.

### அம்பிகையின் அருள் தோற்றம்

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை, அறிவும், ஆற்றலும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புதமரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வ மரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத்தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர்.

காலப்போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களால் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

*"மேன்மை கொள் சைவ நீதி
விளங்குக உலகமெல்லாம்"*

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

- கே. வைத்திலிங்கம்


## பொங்கல் விழாச் சிறப்புறப் பிரார்த்திப்போரும், விளம்பர அனுசரணையாளர்களும்

கட்டடப் பொருள்கள்,
உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர்
உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி சேலைச்சோலை**
(பட்டுப் புடைவைகளின்
சாம்ராஜ்யம்)
நவீனசந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 2222 503

கோயிலுக்குத் தேவையான பட்டு
சரிகைத் துணிகள், பட்டு வேட்டிகள்,
சால்வைகள் மற்றும் நவீன சாறி
வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
66, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும்
அசல் 22
கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம்
மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
டிஜிற்றல் கலர் லாப், வீடியோ அன் ஸ்ருடியோ
20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்லையடி
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S. நாதன்
இல. 96/1, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2491

தரமான நல்ல பொருள்களை நீங்கள்
நயமாக வாங்கிக்கொள்ள நாடுங்கள்
**வேல் முருகன் வணிக நிலையம்**
(முருகன் றேடர்ஸ்)
56 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான
மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில்
பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க. முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க
ஆபரணங்களுக்கு நீங்கள்
நாடவேண்டிய இடம்
**அலங்கார் நகை மாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும்
விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191 (545), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**சாந்தன் ஸ்ரோர்ஸ்**
173, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்

தரமான குளிர்பான வகைகளுக்கும்
ஐஸ்கிறீம் வகைகளுக்கும்
நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
458, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும்
நகைகளை ஓடருக்குப்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சானுகா நகைமாடம்**
200 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3700

பிஸ்கட் மற்றும் சொக்லேட்
வகைகளில் மொத்த
விற்பனையாளர்
**நிஷோ ரேடர்ஸ்**
இல. 05, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில்
நவநாகரிக
முறையில் அழகிய தங்க நகைகளை
குறித்த தவணையில்
செய்துபெற்றுக்கொள்ள
**பூரணி நகைமடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய
நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல
இடம்
**சோபனா நகைமாளிகை**
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜூவல்லர்ஸ்**
193, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.
021 222 8334

உங்கள் இளமைக்கு மேலும்
மெருகூட்டும் கண்கவர் 22
கரட் தங்க நகைகளைப் பெற்றிட
சிறந்த ஸ்தாபனம்
**உதயா ஜூவல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன டிசைன்களில்
நாகரிகத்திற்கேற்ப தங்கப்பவுண்
நகைகளை
நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜூவல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
103, புங்கன்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 7877 760

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல.105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 6953

(ச/146)(2-6-7-9)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காற்று இருக்கும் மட்டும் ஓடலாம்.......

மோட்டார் சைக்கிள் ஓடும் போது அதன் சுமை தெரியாது. காற்றுப் போனால் தான் அது தெரியும். அதைவிட அலைச்சல் வேறு ஒன்றும் கிடையாது பாருங்கோ. கடந்த புதன்கிழமை பிற்பகல் 5 மணி இருக்கும் மோட்டார் சைக்கிளில் யாழ்.நகர்ப் பகுதிக்குள் சென்று கொண்டிருந்தபோது கஸ்தூரியார் வீதியில் ஓர் ஆணி மோட்டார் சைக்கிள் ரயரில் ஏறிவிட அது காற்றுப்போய் நடுத்தெருவில் நின்றது. சலித்துக் கொண்டு சைக்கிளை விட்டு இறங்கி உருட்டிக் கொண்டு ரியூப் ஒட்டும் கடையைத் தேடிச்சென்றேன்.

அந்த வழியில் செல்பவர்கள் எல்லோரும் ஏதோ காணாததைக் கண்ட மாதிரி பார்த்துக் கொண்டு போனார். என்ன நடந்தது என்று கேட்பார் இன்றி நகர்கிறேன். எனக்குத் தெரிந்தவர்களும் தலையை ஆட்டிவிட்டு செல்கிறார்கள். என்ன ஏது எனக் கேட்கக் காணோம். அந்தளவுக்கு யோசிப்பதற்கு எங்க நேரம்? அந்த வழியில் வந்த ஒருவர் " ரயர் கடை ஐந்து சந்திக்கு முன்னம் இருக்கு"என்றுசொல்லிவிட்டுசென்றுவிட்டார். யார் பெத்த மகனோ வழியைக் காட்டி விட்டுச் செல்கிறான், அவன் நல்லாய் இருப்பான் என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டு இன்னும் வேகமாக மகாதேவன் கடையை நோக்கி சைக்கிளை உருட்டினேன். காற்றுப் போன சைக்கிளை உருட்டுற கஷ்டம் அவருக்கும் தெரிந்திருக்க வேண்டும். அதுதான் பொறுப்புடன் சொல்லி விட்டுப் போய் இருக்கிறார். கடையும் வந்தது. நாலு மோட்டார் சைக்கிளும், ஒரு ஆட்டோவும் சில்லு கழட்டினபடி அங்கே நின்றன. இது போதாதென்று நிறையப் பேர் காற்றுப்போன வாகனத்தின் சில்லுகளை கழட்டிக்கொண்டு வந்து ஒட்டும்படி அங்கே வைக்கிறார்கள். இதற்குள் எப்பத்தான் என்னுடைய சில்லினை கழட்டி ஒட்டப் போகிறார்களோ என்று தெரியாமல் சைக்கிளை அடுத்ததாக கொண்டு போய் நிற்பாட்டினேன். அன்றைக்கு அன்னைதான்.

என்னுடைய சைக்கிள் ஓட்ட விடியப் போகுது என்று எனக்குள்ளே நினைத்துக் கொண்டு அந்த ரயர் கடையில் சுறுசுறுப்புடன் ஒரு இளைஞர் வேலை செய்து கொண்டிப்பதை பார்க்கிறேன். அந்த வேலைப் பளுவிலும் அந்த இளைஞர் என்னைப் பார்த்ததும் "ஒட்டா அண்ணை" என்று கேட்டார். "ஓம்" என்று தலையை ஆட்டினேன். உடனடியாக எனது மோட்டார் சைக்கிள் பக்கம் வந்து ஒரு நிமிடத்தில் எனது ரயரினைக்கழட்டி ஒட்டும்வேலையில் இறங்கினான்.

அந்த இளைஞனின் சுறுசுறுப்பினைப் பார்த்து வியந்து கொண்டிருக்கையில், ஒரு வயது வந்தவர் யம்பரோட "யாரை எங்கே வைப்பது என்று யாருக்கும் தெரியலை நல்லவனுக்கும், கெட்டவனுக்கும் பேதம் தெரியலை" என்று கண்ணதாசன் எழுதிய பாடலை பாடிக் கொண்டு வந்தார். யாரடா இந்த ஆள் என்று அவரையே பார்த்துக் கொண்டு நின்றேன். கடையில் போடப்பட்டிருந்த ஒரு கதிரையில் வந்து உட்கார்ந் தார். நாலுபக்கமும் பார்த்துவிட்டு "தம்பி வேளைக்கு ஆள்களை அனுப்பு" என்று சொன்னார். அப்பொழுதுதான் புரிந்து கொண்டேன். இந்தக் கடையின் ஓனர் என்று.

எவரும் கேட்கினமோ இல்லையோ தொடர்ந்து கதைத்துக்கொண்டு இருந்தார். அவர் கதையில் பல விசயம் இருந்த படியால் அவர் கதைப்பதைக் கேட்கத் தொடங்கி னேன். அவரைப் பார்க்கிறேன். அவரை நான் பார்க்கிறேன் என்று அறிந்து கொண்டதும் அவர் என்னைப் பார்த்து "தம்பி இது கடைசிக் கட்டம் அதுதான் உந்த ஆட்டம் போடுறாங்கள். தமிழன் என்றால் எவரும் கேட்க முடியாத நாதியற்ற சனம் என்று பாக்கிறான். அதனால் தான் சிங்களவன் உந்த ஆட்டம் போடுறான். இது கன நாளைக்கு இல்லை. தமிழர்களைக் கொன்ற ராஜீவ் காந்திக்கு என்ன நடந்தது? அதே போலத்தான் நடக்கும் பிரச்சினை ஒருபோதும் முடிவுக்கு வராது. பிரச்சினைகள் கூடிக்கொண்டு போகுமே யொழிய குறைய வாய்ப்பில்லை" என்றவர், "ரியூப் ஒட்டியாச்சா அண்ணை" என்று அங்கு வந்தவரின் கேள்விக்கு பதில் அளித்து விட்டு மீண்டும் கதைக்க ஆரம்பித்தார்.

நான் முந்திலொறி றைவராக இருந்த காலத்தில ஒழுங்கா வேலை செய்ததால் இப்ப இப்படி ஒரு ரயர் கடையினைப் போட முடிந்தது. இந்த அரசும் ஒழுங்கா தனது வேலையைப் பார்த்திருந்தால் இவ்வளவு தூரம் தமிழர் பிரச்சினை வந்திருக்க வாய்ப்பிருக்காது. போராட்டம் தொடங்க முதல் சிங்களவன் தமிழனை ஒரு விதமாகத் தான் பார்த்தான் அடக்கி ஆழ நினைத்தான். போராட்டம் வெடித்ததில் இருந்து சிங்களவன் தமிழனை அடக்கி ஆளும் நினைப்பை இல்லாமல் செய்தது. போராட்டம் வீழ்ச்சி கண்டபின் மீண்டும் தனது வேலை யைக் காட்ட முயற்சிக்கிறது அரசு. பிறகு எப்படி இந்த நாட்டில் சமாதானம் நிலவும். எங்கட தலைவர்களும் தமிழர் தீர்வு தொடர்பில் அரசுடன் கதைக்கிறோம் என்று சொல்லிக் கொண்டு இருக்கினமே ஒழிய அந்தப் பிரச்சினையில் கவனம் செலுத்தாமல் சம்பந்தமே யில்லாமல் வேறு பிரச்சினையில் இறங்கி பழியைச் சுமந்து கொண்டிருக்கினம். இது இவர்களுக்குத் தேவைதானா? கருத்துச் சொல்வதற்குபெரிய ஆள்நான்இல்லை. ஆனால் என்னை மாதிரி சிந்திக்க முடியாத தலைவர்கள் இருந்து என்ன பிரயோசனம்? எனது வேலையும் சரி, வாழ்வும் சரி உண்மை யாவும் சுத்தமாக வும் இருக்கிறது. எத்தனை பேர் சைக்கிள் ஓட்ட வருவார்கள். அவர்களிடத்தே பணம் இல்லாத போது சரி என்று சொல்லி பணம் பிறகு கொண்டு வந்து தாருங்கள் என்று சொல்லி வேலை செய்கிறேன். இருக்கும் போது இல்லாத வன் கேட்கும் போது கொடுக்கப் பழக வேண்டும். அப்பொழுது தான் எமது சமூ கத்துக்கு ஒற்றுமை வரும். பணம் முக்கியம் இல்லை. மனிதன் தான் முக்கியம். இந்தச் சைக்கிளைப் பார்த் தீர்களா காற்று இருக்கும் மட்டும் ஓடுகிறீர்கள். இல்லாது போயின் அவ்வளவு தான். அதேபோலத்தான் மனிதர்களும் தமது வாழ்வினை விளங்கிக்கொள்ள வேண்டும். இது என்னுடைய கடை என்று சொல்லி விட்டு வேலை செய்யாமல்

**கோப்பாய் சண்முகம்**
**கதையோடு செய்தி**

இருந்தால் பெரிதாக சம்பாதிக்க முடியாது. இதேபோலத்தான் பல வேலைகளில் உள்ள அதிகாரிகள் சிந்திக்க வேண்டும். அப்பொழுது தான் அபிவிருத்தி வேலைகள் முழுமை யாகும். அல்லது வெறுமனே றோட்டை மட்டும் போட்டுவிட்டு அதுவும் அரை குறையாய் சேடம் இழுக்கிறதைப் போலத் தான் எல்லாமே இருக்கும்". என்று. அந்தப் பெரியவர் சொன்னபோது ரியூப் ஒட்டப் பட்டு ஆணி ஏதாவது ரயரில் ஏறி இருக்குமா என ரயரைப் பார்த்தான் அந்த இளைஞன். உடனே நானோ "ஆணியை எடுத்துவிட்டேன்" என்றேன். அதற்கு அந்தப் பெரியவர் "ஆணியை எடுத்துப் போட்டு சைக்கிளை உருட்டிய தால ரியூப் தப்பிச்சுது. இல்லாது போயின் அவ்வளவு தான். ரியூப் மாற்ற வேண்டி வந்திருக்கும் இதேபோலத்தான் எல்லாவற்றி லேயும் கவனமாக இருந்தால் நாங்கள் எப்பவோ முன்னேறி இருப்போம்" என்றார். "எவ்வளவு" என்று கேட்க அந்த இளைஞர் "170 ரூபா" என்று சொன்னான். 200 ரூபா வைக் கொடுத்தேன் மீதிப் பணம் இல்லாததால் 150 ரூபாவை எடுத்துவிட்டு 50 ரூபா மீதியைத் தந்தார். அந்த இளைஞரும் அந்தப் பெரியவர் போல பொறுப்புடன் இருப்பது தெரிகிறது. "சரி நன்றி அண்ணை, வாறன்" என்று சொல்லி விட்டு வீடு நோக்கிப் புறப்பட்டேன். அந்த நேரத்தில் ஒன்று ஞாபகம் வந்தது, அந்தப் பெரியவர் இவ்வளவும் நல்லாக் கதைச்சார்; ஆனால் ஒரு வேலை செய்ய வில்லை பெரியவை என்றால் அப்படித்தான் போலும்.


ஆண்மை குறைவால்
குழந்தைகள் இல்லையே என்ற கவலையா? வீரியம் அதிகரிக்க. குழந்தை பாக்கியம் பெற
ஆலோசனைக்கு அழையுங்கள்
0750 252 141

## தவறிவிட்டது

நிலாவில், அல்வாய் வடமேற்கில் வசிக்கும் மாரிமுத்து இராகவன் என்பவருடைய மோட்டார் சாரதி அனுமதிப்பத்திரம் நெல்லியடியில் தவற விடப்பட்டது. கண்டெடுத்தவர்கள் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: 077 6257977

(16994)(6-7-8)

## அறிவித்தல்

2010-06-15 ஆம் திகதி நொத்தாரிசு லி.துரைராஜா முன்பாக 7102 ஆம் இலக்கத்தில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி கிழக்கு ஆர்.சி.லேன் வல்லிபுரம் மகள் லலிதாம்பிகை பெயரிலும் மறுபெயரிலுமாக நிறைவேறிய பிரிவிடுதல் உறுதிப்பிரகாரம் திருநெல்வேலி இறையிலுள்ள "பெரிய வளவும் கந்தன் குடியிருப்பும், சிதம்பரன் குடியிருப்பும், கஞ்சன் குடியிருப்பும், அடைக்கலன் குடியிருப்பும்" நி.பர 2 குளி 5.31ம் வீடும் கிணறும் என்ற ஆதனம் குறித்த லலிதாம்பிகையின் பிரிவிடலும் ஆட்சியு மாயுடையதானதாகும் என உறுதிப்படுத்துகிறேன்.

(18508) (6,7,10) தகவல்: ல. வல்லிபுரம்

## மணிவிழா வாழ்த்து



(27.05.2012) இல் பணி ஓய்வு பெறும் யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலய உபஅதிபர்

திருமதி மங்கையர்க்கரசி சிவபாலசற்குணம்

அவர்களின் சேவையை நயந்து போற்றுகிறோம். அவரது ஓய்வுகாலம் சிறக்க எமது நல்வாழ்த்துக்கள்

யா/வரணி வடக்கு சைவப்பிரகாச வித்தியாலயம், வரணி
பாடசாலைச்சமூகம்

(18506)(6-7-8)

# மரண அறிவித்தல்

## அம்பலவாணர் மங்கையர்க்கரசி



நெடுந்தீவு, கிழக்கைப் பிறப்பிடமாகவும், முகத்தான்குளம், செட்டிகுளம் மற்றும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும், பிரான்ஸில் வசித்து வந்தவருமாகிய மங்கையர்க்கரசி அம்பலவாணர் கடந்த (23.05.2012) புதன்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார்காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - பொன்னு தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மணியர் ஐயம்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான சுப்பையா (செட்டிகுளம்), மகேஸ்வரி (வட்டக்கச்சி) மற்றும் காராளசிங்கம் (திருவையாறு) ஆகியோ ரின் பாசமிகு சகோதரியும், தனபாலன் (இந்திரன் - வட்டக்கச்சி), சகுந்தலநாயகி (வவா - பிரான்ஸ்), கமலநாயகி (கலா - லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், றஞ்சிதமாலா (றஞ்சி - வட்டக்கச்சி), காலஞ்சென்ற ஜெராட் (பிரான்ஸ்), மகாதேவன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, தையலம்மா, கணபதிப்பிள்ளை, நாகம்மா, கந்தையா, முருகேசு, அப்பாக்குட்டி, சுப்பையா ஆகியோரின் அன்பு மைத்துனியும், றோகன் (கனடா), காலஞ்சென்ற றோகினி (வட்டக்கச்சி), யாழினி (ஜேர்மனி), தட்சினி (யாழ்ப்பாணம்), கோபி (வட்டக்கச்சி), காண்டீபன் (வட்டக்கச்சி), கிருஷாந்தி (பிரான்ஸ்), ஜெயாணி (கனடா), பிரான் (டென்மார்க்), ஆதவன் (லண்டன்), பிரணவன் (லண்டன்), வாரிஷா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும், சஜன் (ஜேர்மனி), அபி (ஜேர்மனி), மதுரா (ஜேர்மனி), பரிதிக்கதிர் (யாழ்ப்பாணம்), தனுகா (பிரான்ஸ்), டயானா (பிரான்ஸ்), சிந்துஜா (பிரான்ஸ்), ஆகாஷ் (கனடா), சகானா (டென்மார்க்), இலக்கியா (டென்மார்க்) ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.05.2012) ஞாயிற்றுக்கிழமை இல. 273, சில்வா வீதி, வட்டக்கச்சியில் அமைந்துள்ள அன்னாரின் மகனின் இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக மம்மில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டக்கச்சி, கிளிநொச்சி. (16839) (2-6-7) தகவல்: அ.தனபாலன் (இந்திரன் - மகன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உடுவில் அருள்மிகு
# சொர்ணசித்தி விநாயகர் ஆலய
# மகா கும்பாபிஷேகச் சிறப்புமலர்
## 25.05.2012

### பிரதிஷ்டா பிரதம குருவின் ஆசிச் செய்தி



இலங்கைத் திருநாட்டின் வரலாற்றுப் பெருமையுடைய உடுவில் கிராமத்தில் சொர்ண சித்தி பஞ்சமுக விநாயகனாக நிமிர்ந்த கம்பீரமான தோற்றத்தோடு மூலாலயத்தில் வீற்றிருந்து வேண்டுவார் வேண்டும் வரனை அள்ளி வழங்கும் விநாயகப் பெருமானுடைய பஞ்சகுண்ட பக்ஷ அஷ்டபந்தன சமர்ப்பண மஹாகும்பாபிஷேகம் இன்றையதினம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது. கும்பாபிஷேகத்தில் சரியைத் தொண்டுகள், கிரியைத் தொண்டுகள் செய்த அனைவரும் உலகில் வாழும் சகல இன மக்களும், சகல ஜீவராசிகளும் சகல சௌபாக்கியங்களையும் பெற்று வாழ விநாயகப் பெருமானை வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

*பிரதிஷ்டா பிரதமகுரு*
*சிவஸ்ரீ சி.சந்திரகுமாரக் குருக்கள்*
*(பொன்னம்பல வானேஸ்வரக்கோயில் - கொழும்பு - 13)*

### சகல செல்வமும் கிடைக்கட்டும்



தனக்கு மேல் நாயகரில்லாத தனி நாயகராக விளங்கும் உடுவில் பதியுறை பஞ்சமுக சொர்ண சித்தி விநாயகரது பெருஞ்சாந்தி விழா மிகச் சிறப்பாக இன்றைய தினம் நிகழ்வதும் ஒரு தனிச் சிறப்பாகும். ''பெருஞ்சாந்தி காணாது போவாயோ பூம்பாவாய்'' என்ற சமயகுரவர் வாக்கிற்கிணங்க இந்த குடமுழுக்கு விழாவைக் கண்ணாரக் கண்டு மனதாரத் தொழுத சகல மெய்யடியார்களுக்கும் சகல செல்வங்களும் கிடைத்து நலமுடன் வாழ எம் பெருமானைத் தொழுது ஆசி கூறி அமைகின்றேன்.

*பிரம்மஸ்ரீ ச.சி.பாலஷண்முகக் குருக்கள்*
*கட்டுடை, மானிப்பாய்.*

### அருட் கடாட்சம் கிட்டட்டும்



வளங்கள் நிறைந்த வடபகுதியான யாழ்.மண்ணில் வட உடுவில் பதிகொண்டு வரங்களை எல்லாம் வாரி வழங்கிக் கொண்டிருக்கும் ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுக விநாயகரின் புனராவர்த்தன பிரதிஷ்ட பஞ்சகுண்ட மஹா கும்பாபிஷேகத்தினை நடத்திக் கொண்டிருக்கும் பிரதம குரு சிவஸ்ரீ ச.சந்திரகுமாரக் குருக்களுக்கு பஞ்சமுக விநாயகனின் சகல கடாட்சங்களும் பெற்று சுபீட்சகரமான பெருவாழ்வு வாழ வேண்டிப் பிரார்த்திக்கின்றோம். இக் கும்பாபிஷேகத்தை நுட்பமாகவும் அடியார்களிடத்து சைவ சமய சிறப்பைத் தெளிவாக விளங்கும் விதத்தில் நடத்திய பெருமைக்குரியவர். இக் கும்பாபிஷேகத்தைச் சிறப்பாக நடத்தும் ஏனைய குருமார்களும், சர்வசாதகர்கள் அனைவரும் பஞ்சமுகனின் சகல கடாட்சங்களும் பெற்று என்றும் சீருடன் வாழ வாழ்த்துகின்றோம். ஆலய நித்திய பூசகரின் அயராத முயற்சியும் அர்ப்பணிப்பும் இவ்வாலய வளர்ச்சிக்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளன. அவருக்கு என்றும் பஞ்சமுக விநாயகனின் அருட்கடாட்சம் நிலைத்துப் பெரு வாழ்வு வாழப் பிரார்த்திக்கின்றோம். இவ்வாலயத்தை ஆகம விதிக்கமைய நுட்பமாகவும் அழகாகவும் அமைத்துத் தந்த பெருமைக்குரிய சிற்பாச்சாரிகள், வர்ணவாளர்கள் அனைவருக்கும் என்றும் பஞ்சமுக விநாயகனின் அருட்கடாட்சமும், சிறப்பும் கிட்டும். என்றும் பஞ்சமுகத்தானின் பாதார விந்தங்களைப் பணிந்து பிரார்த்திப்போம்.

*திருமதி சொ.வரதராஜன், ஆலய தர்மகர்த்தா*

### விநாயகர் அருள் கிடைக்கட்டும்



அருள்மிகு ஸ்ரீ சொர்ணசித்தி பஞ்சமுகப் பிள்ளையார் ஆலயம் உடுவில் பகுதியில் வாழ்கின்ற அனைத்துப் பக்தர்களையும் ஆட்கொண்டு ஆலயத்தைத் தரிசிக்க வருகின்ற அடியவர்களுக்கு வேண்டுவார் வேண்டும் வரங்களை வாரி வழங்கி பஞ்சமுகம் கொண்டு பஞ்ச பூதங்களையும் அடக்கி ஆழ்ந்து அடியவர்களை ஆட்கொண்டு பஞ்சமுகப் பிள்ளைார் ஆலய கும்பாபிஷேகம் மிகவும் சிறப்புற நடைபெற்று எம் பெருமானைத் தொழுது வேண்டுகின்ற வரத்தைப் பெறுவோம். ஆலயத்தில் குருவாகத் தொண்டு செய்யக் கிடைத்தமைக்கும் ஆலய தர்மகர்த்தா சபைக்கு எம் பெருமான் திருவருள் கிடைக்க விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஆலய நித்திய குரு*
*பிரம்மஸ்ரீ ஸ்ரீ.பவன்சர்மா, கோண்டாவில்.*

### எம்பெருமான் திருவருள் பாலிக்கட்டும்



அருள்மிகு உடுவில் ஸ்ரீ சொர்ண சித்தி பஞ்சமுகப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை இடம் பெறத் திருவருள் பாலித்துள்ளமை வெவ்வினை தீர்க்கும் விநாயகன் அருளே.

இக் கும்பாபிஷேகத்தைச் சிறப்புற நடத்த முன்னின்றுழைக்கும் ஆலய பரிபாலன சபையினர், அந்தணப் பெருமக்கள் மற்றும் விநாயகப் பெருமானின் அடியார்களுக்கு எம்பெருமானின் திருவருட்கடாட்சம் கிட்ட அருள வேண்டுமென விநாயகப் பெருமானின் பாதம் பணிகின்றேன்.

வேண்டுவார் வேண்டுவதை ஈந்தருளும் விநாயகப் பெருமானின் அருட்கடாட்சம் இப் பகுதியில் வாழும் அனைத்து அடியார்கள், கும்பாபிஷேகம் காணவரும் பக்தர்கள் மற்றும் அனைத்துச் சைவ அன்பர்களுக்கும் கிட்ட எம்பெருமான் அருள் பாலிக்க வேண்டுமெனப் பெருமானின் பாதம் பணிகின்றேன்.

ஐந்து கரத்தனை, ஆனை முகத்தனை எல்லோர்க்கும் நல்வாழ்வு அருள இறைஞ்சுகின்றேன்.

*ஈ.சரவணபவன்,*
*நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்.மாவட்டம்.*

### கோயில்கள் நிறைந்த ஊரில் குடியிருத்தல் சிறப்பு



இலங்கைத் திருநாட்டின் சிரசென விளங்கும் யாழ்.நகரின் வடபாலமைந்திருக்கும் வரலாற்றுப் பெருமை மிக்க உடுவில் கிராமம், மக்கள் மன அமைதியுடன் வளம் பெற்று வாழ வழிபடும் கோயில்கள், தேவாலயங்கள் நிறைந்த தொன்றாகும். இக் கிராமத்தின் ஆலயங்களின் வரிசையில் ஒன்றாக அருள்மிகு சொர்ணசித்தி பஞ்சமுகப் பிள்ளையார் கோயில் விளங்குகின்றது.

முழுமுதற் கடவுளாக சொர்ணசித்தி பஞ்சமுகப் பிள்ளையார் கோயிலுக்குப் பொறுப்பான அம்மையாரின் தெய்வீக அருளுடன் கூடிய விடாமுயற்சியால் இவ்வாலயம் புதுப் பொலிவுடன் முழுமையான தோற்றம் பெற்றுள்ளது.

இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை இவ்வாலயத்தில் நடைபெறும் மஹா கும்பாபிஷேகம் சிறப்புற நிகழ்ந்து அனைவருக்கும் பஞ்சமுகப் பிள்ளையாரின் அருள் கிடைக்கத் திருவருள் பாலிக்க வேண்டும் என்று இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*த.தேவராஜன்*
*ஓய்வுநிலை திட்டமிடல் உதவிப்பணிப்பாளர், உடுவில்.*

### மக்கள் இடர் நீக்கும் பெருமான்



எழில் நிறைந்த இலங்கைத் திருநாட்டின் முடியென விளங்கும் யாழ்.குடாநாட்டின் மத்திய பகுதியில் திலகமென மிளிரும் உடுவிலூரில் கோயில் கொண்டு, அடியார்களின் மனக் குறைகள் நீக்கும் அருள் மிகு சொர்ணசித்தி பஞ்சமுகப் பிள்ளையாருக்கு இன்று மஹா கும்பாபிஷேகப் பெருவிழா.

உடுவிலில் மக்கள் வழிபட ஏதுவாக இருக்கும் ஒரேயொரு பஞ்சமுகப் பிள்ளையார் இவரே என்பதால் இவர் அன்பர் கூட்டத்தின் செல்லப் பிள்ளையார் ஆவார். அடியார்கள் இன்னல் களைந்து வேண்டும் வரங்கள் அத்தனையையும் அள்ளி வழங்கும் பெருவள்ளல். தேவர்களுக்குத் துன்பங்களைச் செய்த கஜமுகாசுரனை சம்ஹாரம் செய்து தேவர்களைக் காத்த விநாயகப் பெருமான், பஞ்சமுகங்களுடன் காட்சி தந்து அருளாட்சி புரிந்து எம்மையெல்லாம் காப்பாற்றி வருகின்றார்.

ஆலய பரிபாலன சபை அங்கத்தவர் ஒத்துழைப்பும், அயராத முயற்சியும், தொழிலாளர்களின் உள்ளச் சுத்தியான அர்ப்பணிப்பும், பல வழிகளிலும், மனம் கோணாது உதவிய தொண்டர்களின் சேவையும் சிவாச்சாரிகளின் ஆலோசனையும், ஆசிகளும், அரவணைப்பும் ஒன்றாகப் பலம் பெற்றதால் ஆலயத் திருப்பணிகள் யாவும் இனிதே நிறைந்து சிறப்புப் பெற்று மஹா கும்பாபிஷேகம் நடைபெறுவது ஊருக்குச் செழிப்பும், மகிமையும், எழுச்சியுமாகும்.

மக்களின் இடர்கள் நீக்கி அவர்கள் மனம் குளிர வைக்கும் அருள்மிகு சொர்ணசித்தி பஞ்சமுகப் பிள்ளையாரின் திருவடிகளை சிரம் தாழ்த்தி வணங்கி யாவரும் இன்புற்று வாழ்வாங்கு வாழ வேண்டுமென்று [illegible] இன்புறுகின்றேன்.

*[illegible] (ஓய்வுபெற்ற அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)*

### அடியார்கள் அமைதி பெறட்டும்

அருள்மிகு உடுவில் சொர்ண சித்தி விநாயகப் பெருமானின் பஞ்சகுண்ட பக்ஷ மகா கும்பாபிஷேகம் இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை நடைபெறுவதில் அளவிலா ஆனந்தம் அடைவதோடு,

இந்தக் கும்பாபிஷேகத்தில் பங்கு பற்றும் வாய்ப்பையும் எனக்குத் தந்த பிரதான சிவாச்சாரியார் சிவஸ்ரீ வி.சந்திரகுமாரக் குருக்களுக்கும் ஆலய பரிபாலனசபையினருக்கும் நன்றி கூறுகின்றோம். கும்பாபிஷேகத்தைத் திறம்பட நடத்துகின்ற சிவாச்சாரியார்களுக்கும் சர்வசாதகச்சாரியார்களுக்கும் உதவியாளர்களுக்கும் ஆலயத்தை நடத்துகின்ற பரிபாலனசபையினருக்கும், அடியார்களுக்கும் உலகம் எங்கும் வாழுகின்ற சைவ அடியார்களுக்கும் விநாயகப் பெருமானின் திருவருள் கிடைக்க வேண்டும் என்று ஆசி வழங்குகின்றேன்.

*சிவஸ்ரீ இ.பத்மகுமாரக்குருக்ள்,*
*ஊற்றங்கரை சித்தி விநாயகர் தேவஸ்தானம்,*
*தண்ணீரூற்று.*

### கும்பாபிஷேகம் சிறப்புறட்டும்



வடமாகாணத்தில் கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோர்கள் வாழுகின்ற ஊர்களில் ஒன்றான உடுவில் மத்திய பகுதியில் கோயில் கொண்டு, அடியார்களின் விக்கினங்களைக் களைந்து, அருள்பாலித்து சர்வவியாபகமாய் வியாபித்து இருக்கும் சொர்ணவிநாயகர் திருப் பாதங்களைப் பணிந்து வாழ்த்துரை வழங்க விழைகின்றேன்.

எமது ஊரில் தனித்தொரு குடும்பமாக தன்னம்பிக்கையோடு சொர்ணவிநாயகர் ஆலயத்தைப் பரிபாலித்து இவ்வளவு சிறந்த நிலைக்குக் கொண்டு வருவதற்கு அயராது உழைத்தவர்கள் திருவாளர் வரதராஜன் குடும்பத்தினர். இதன் விளைவு இன்று எமது ஊர் மங்கலமும் பக்தி மணமும் சைவத் தமிழும் மேலும் விளங்குவதாகின்றது. இந்த நிலையில் இன்று கும்பாபிஷேகம் காணும் இவ் விநாயகர் ஆலயம் மூலம் எமது ஊர் தேவ அருட்கடாட்சத்தைப் பெற்று மிளிர்கின்றது.

ஸ்ரீ சொர்ண சித்தி விநாயகர் ஆலயத்தின் வளர்ச்சியிலும் பராம ரிப்பிலும் பெரும் பங்களிப்புச் செய்துவரும் சிவாச்சாரியர், வரதராஜன் குடும்பத்தினர், தொண்டர்கள், நலனோம்புனர்கள், அடியவர்கள் அனைவருக்கும் விநாயகனின் இஷ்ட சித்திகள் அவனருளாலே வந்து சேரும்.

ஆலயங்களின் பணி மக்கள் மத்தியில் ஆன்மிகத்தை நிலைபெறச் செய்தலும் சமூக கலாசார விழுமியங்களைப் பின்பற்றி ஒழுகச் செய்தலுமாகும். அந்த வகையில் சொர்ண சித்தி விநாயகர் ஆலயத்தின் பணியும் எமது ஊர் மத்தியில் இத்தகைய மேன்மைகளை விளங்கச் செய்வதாக அமையட்டும். உண்மையும் நன்மையும் உயர்வும் விளங்க கும்பாபிஷேகம் சிறப்பு எய்தட்டும்.

*பொ.சத்தியநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி.*

### சமாதானம் நிலைக்கட்டும்

உடுவில் அருள்மிகு சொர்ணசித்தி விநாயகர் ஆலயம் வைகாசித் திங்கள் பன்னிரண்டாம் நாளில் இன்று (25.05.2012) மகாகும்பாபிஷேகம் காண்பது மகிழ்ச்சிகரமான விடயமாகும்.

அடியார்களின் துன்பங்களை இறை அருளால் போக்கி வரும் அம்மா அவரவர் தேவை உணர்ந்து தாமாகவே முன் வந்து உதவி செய்வதும் இறைஅருளே. திருநீற்றினதும், வேப் பிலையினதும் மகத்துவத்தை அனுபவித்து வரும் மக்கள் அம்மாவைத் தேடி வருவதில் ஆச்சரியமில்லை.

அம்மா அவர்கள் விழிப்புடன் வெளிப்பாடு கொள்ளும் போது தூரம், நேரம், சடத்துவம் ஆகிய பௌதிக நிலைகளைக் கடந்து உயர்நிலை - உளவியலின் தத்துவங்களினாலும் உணர்ந்துகொள்ள முடியாத ஓர் உயரிய நிலைக்கு வந்து அருள் வாக்குகளை அடியார்க்கு அவரவர் நிலைகளுக்கு ஏற்றபடி தனித்தனியாகவே வாரி வழங்குகிறார்கள். ஆண்டவனின் அருளாசியுடன் அம்மாவின் சேவை இன்றைய சமூகத்திற்கு மிகமிகத் தேவையானதே

இன்றைய பரபரப்பான யுகத்தில் இந்த ஆலய கும்பாபிஷேகத்துடன் உலகம் சாந்தமடைந்து சாந்தி, சமாதானம், சந்தோசம், நீதி, நேர்மை யாவற்றையும் மக்கள் செவ்வனே பெறவேண்டும் என்பதே சொர்ணசித்தி விநாயகரின் அருளாசியும் கூட. எம் அன்னையின் அன்பையும் ஆண்டவனின் அருளையும் இந்த ஆலயம் அள்ளி வழங்கி மக்களை ஈடேற்றும் என்பதில் ஐயமில்லை...

*இறை அருளை வேண்டி*
*சிவராஜா கோகுலன்*

(13959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டமைப்பு தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டிய தருணம் இது

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் அறிக்கை

யாழ்ப்பாணம்,மே.25

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக தொடர்ச்சியான அடக்கு முறைகளை மேற்கொண்டு வரும் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மக்கள் சார்ந்ததும் தீர்க்கமான்துமான முடிவை எடுக்க வேண்டிய தருணம் இது என்று யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

தெற்கில் நாடாளுமன்றத் தெரிவுக்குழுவினுள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உள்ளீர்ப்பதற்கான நடவடிக்கையை அரசு அரங்கேற்றுகிறது. மறுபுறத்தில் தமிழர் பிரதேசங்களில் தமிழரது காணிகள் பறிக்கப்படுகின்றன. சிங்கள, இராணுவக் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றன. தமிழர்களது சமூக, மாணவ தலைமைகள் தாக்கப்படுவது அச்சுறுத்தப்படுவதும் தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் விளக்கமறியலில் இருப்பது போன்ற இன்னோரன்ன அநியாயங்கள் எமது பகுதியில் தொடர்கின்றன.

இது தொடர்பில் மக்கள் சார்ந்ததும் தீர்க்கமானதுமான முடிவு ஒன்றை எமது மக்களின் நன்மை கருதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எடுக்க வேண்டிய தருணம் இது.

தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கும் நிலையில் அரசியல் தீர்வுக்கான செயல்முறை எனும் அரசின் காலம் தாழ்த்தும் மற்றும் சர்வதேசத்திடம் நேரத்தைக் கடத்தும் முயற்சியில் பங்குபற்றுவது அர்த்தமற்ற தொன்று.

ஜெனிவாத் தீர்மானத்தாலும் எல்.எல்.ஆர்.சி. அறிக்கையாலும் தமிழர்களுக்கு என்ன பயன் என்பது தொடர்பில் சர்வதேச சமூகம் தமிழ் மக்களுக்குப் பதிலளிக்க வேண்டும். யுத்தத்துக்கு தலைமை தாங்கிய சரத்பொன்சேகாவின் விடுதலைக்கு கொடுத்; முக்கியத்துவத்தை தமிழர் பிரச்சினைகள் தொடர்பான விடயங்களுக்கு சர்வதேசம் முக்கியத்துவம் அளிக்காமை கவலையளிக்கிறது.

யாழ். பல்கலைக்கழகம் நீண்டகாலமாக தமிழ் மக்களின் பேசும் சக்தியாக இருந்து வருகிறது. யாழ். பல்கலைக்கழகம் தமிழ்த் தேசியச் செயற்பாடுகளுக்கு அளித்துவரும் ஆதரவை குறைப்பதற்காகவே பல்வேறுபட்ட தலையீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பல்கலைக்கழக பேரவைக்கான வெளியகப் பிரதிநிதிகள், துணைவேந்தர் பதவிக்கான நியமனம் என்பவற்றில் அரசியல் பயன்படுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் மத்தியில் இராணுவ உளவாளிகளின் ஊடுருவலைச் செயற்படுத்துவதற்கான முயற்சிகள் கல்விசாரா ஊழியர் நியமனங்களில் அரசு சார்ந்தோரால் பிரேரிக்கப்படுவோர் நியமிக்கப்படுதல் போன்றவற்றை உதாரணப்படுத்த முடியும். இவ்வாறான செயற்பாடுகளால் பல்கலைக்கழக ஆசிரியர்களதும் மாணவர்களதும் சுயாதீன கல்வி சார்ந்த மற்றும் சமூகச் செயற்பாடுகளுக்கு குந்தகமாக அமைந்துள்ளது. கடந்த வருடம் தவபாலசிங்கம் தாக்கப்பட்டார், தற்போது தர்சானந் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதல் நடத்தியோர் தொடர்பான விசாரணையில் எதுவித முன்னேற்றமும் இல்லை. இராணுவக் காவலரணுக்கு அண்மையில் வைத்து இவர்கள் தாக்கப்பட்டமை தாயகத்தில் பயங்கரமான நிலையை ஏற்படுத்தியுள்ளது.

மாணவர்கள், சமூக சேவையாளர்கள், பொதுமக்கள் மீதான அடக்குமுறைகளைச் சர்வதேச நாடுகள் தட்டிக் கேட்க வேண்டும் - என அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-4)

# அடாத்தாக அட்டை பிடிப்பு: மன்னாரில் மக்கள் கொதிப்பு

## நேற்று உண்ணாவிரதப் போராட்டம்

மன்னார், மே 25

மன்னாரில் அரசியல் கட்சியொன்றின் பின்னணியுடன் சட்டவிரோத கடலட்டை பிடிக்க முயலும் முஸ்லிம் நபருக்கு எதிராக மக்கள் ஒன்றுதிரண்டு நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மன்னார், வெள்ளாங்குளம் தேவன்பிட்டி கிராமத்தில் உள்ள சுமார் 217 குடும்பங்கள் கடந்த பல வருடங்களாக அட்டை வளர்ப்பு தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போது அங்கு ஒரு முஸ்லிம் நபர்ஒருவர் அங்கு வசிக்கும் 45 சிறுவர்கள் உட்பட 120 பேரிடம் 'அடாத்தாகக்' கையொப்பம் பெற்று தான் அத்தொழிலில் ஈடுபட முயற்சித்துள்ளார். இவர் அமைச்சர் றிசாத் பதிதினுக்கு நெருக்கமானவர் என்றும் கூறப்படுகின்றது.

எனவே அவரின் செயலை தடுத்து நிறுத்தக் கோரி அப்பகுதி மக்கள் நேற்று உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அத்துடன் மன்னார் மாவட்ட அரச அதிபர், மாந்தை பிரதேச செயலர் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோதராதலிங்கம் ஆகியோருக்கும் முறைப்பாடு செய்துள்ளனர். (ங-16-6)

# தமிழர்களுக்கு தீர்வை வழங்க இலங்கைக்கு அழுத்தம் கொடுங்கள்

## இந்தியத் துணைத் தூதரிடம் வலியுறுத்தல்

யாழ்ப்பாணம், மே 25.

கடந்த காலங்களில் நடைபெற்ற கசப்பான சம்பவங்களை மறந்து தமிழ் நாட்டில் ஏற்பட்டிருக்கும் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து தமிழ்பேசும் மக்களின் அடிப்படை அபிலாசைகளை நிறைவேற்ற இந்திய மத்திய அரசு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம்.ரதன் தெரிவித்தார். யாழ்ப்பாணத்திலுள்ள விடுதி ஒன்றில் இந்தியத் துணைத் தூதரக அதிகாரி வி.மகாலிங்கத்துக்கும் வவுனியா நகரசபை உறுப்பினர்களுக்குமிடையே நேற்று முன்தினம் இடம் பெற்ற கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் மக்கள் 13ஆவது அரசியல் தீர்வுத் திட்டத்தின் அடிப்படையில் தமது உரிமைகளை ஏற்கத் தயாரில்லை. போரினால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்குத் தேவைப்படுவது அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யும் நிவாரணமே. இதற்கு வலுவான கட்டமைப்புத் தேவை. வடக்கு, கிழக்கு இணைந்த தாயகத்தில் சமஷ்டி முறையில் ஒரு சுயாட்சியினை இலங்கை அரசு வழங்க இந்திய அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும்.

இந்திய அரசு ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக வாக்களித்தமை போன்று எமது தீர்விலும் இந்திய அரசு பக்கபலமாக இருத்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியத் தூதுக்குழுக்கள் வன்னிப் பகுதிக்கு விஜயம் செய்தபோது வவுனியா நலன்புரி முகாம்களில் வாழும் மக்களைச் சந்தித்தமை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களுக்கோ, நகர சபை உறுப்பினர்களுக்கோ தெரியாது. இவர்களது வருகை கண்துடைப்பு நாடகமோ என மக்கள் கருதினர். எதிர்காலத்தில் இவ்வாறான குழுக்கள் வருகின்றபோது இலங்கை அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கு அப்பாற்பட்டு போரினால் பாதிக்கப்பட்ட எமது பிரதேச மக்கள் நிலைப்பாடு தொடர்பாக அறிவதற்கு உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளை அழைத்து விரிவாக கலந்துரையாடுவதன் மூலமாகவே உண்மைப் பிரச்சினைகள் வெளியில் தெரியவரும்.

வடமாகாணத்தில் சிவில் நிர்வாகம் இல்லை. ஆளுநர் இராணுவத் தளபதியாக இருந்தபோது எப்படி நடந்து கொண்டாரோ தற்போதும் அப்படியே செயற்படுகிறார். அது எமது இனத்தின் அரச அதிகாரிகளையும் உத்தியோகத்தர்களையும் மௌனிக்கச் செய்துள்ளது. வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட்டு சிவில் நிர்வாகம் ஏற்படுத்த இந்திய அரசு தனது பங்களிப்பை வழங்க வேண்டும் -என்றார். (ங-4)

# சத்திரசிகிச்சை இன்று நடைபெற மாட்டாது

யாழ்ப்பாணம், மே 25

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்று நடைபெறவிருந்த வளர்ப்புப் பெண் நாய்களுக்கான சத்திர சிகிச்சைகள் மருந்துகள் முடிந்த காரணத்தால் நடைபெறமாட்டாதென சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார்.

கெருடாவில் பாலமுருகன் சனசமூக நிலயம், மீசாலை கிழக்கு சிறிமுருகன் சனசமூக நிலையம் ஆகியவற்றில் நடைபெறவிருந்த சத்திரசிகிச்சைகளே நடைபெறாதெனவும் இச்சிகிச்சைகளுக்கான மறு திகதி பின்னர் அறிவிக்கப்படுமென மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ங-16-9)


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்: 03.12.1954 மறைவு: 26.04.2012



அமரர்

அப்பையா சிவலிங்கம் (சந்திரன்)

(உரிமையாளர் அ. சிவலிங்கம் பல்பொருள் வாணிபம், சத்திரச்சந்தி)

கடந்த (26.04.2012) வியாழக்கிழமை இறை பதமடைந்த எமது குடும்பத் தலைவரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (26.05.2012) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

93/9, இராசாவின் தோட்டம் வீதி;
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(18521) (14-34)


# 'கண்டனன் சீதையை' இசை நாடகம்

யாழ்ப்பாணம், மே 25

நாடக அரங்கக் கல்லூரியின் தயாரிப்பல் உருவான 'கண்டனன் சீதையை' என்னும் இசைநாடகம் எதிர் வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இவ் இசை நாடகமானது அருணாசலக்கவிராயரின் இராமநாடகக் கீர்த்தனையிலிருந்து தொகுக்கப்பட்டதாகும். இதன் எழுத்துருவை யே.ம. யோசப்மேரி, குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் உருவாக்கியுள்ளனர். இசையமைப்பு, இசைப் பயிற்சி மற்றும் இசை நெறியாள்கையை யாழ். பல்கலைக்கழக இசைத்துறை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் வழங்கவுள்ளார். இந் நாடகமானது கடந்த மார்ச் 11 ஆம் திகதி கைலாசபதி கலையரங்கில் அரங்கு நிறைந்த காட்சியாக மேடையேற்றப்பட்டது. அன்றையதினம் இவ் ஆற்றுகையை பார்வையிட முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்ற ரசிகர்கள் இவ் வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நாடக அரங்கக் கல்லூரியின் இயக்குநர் க. ரதனபாஸ்கரன் தெரிவித்துள்ளார். (ங)


# மரண அறிவித்தல்

## கந்தையா இராசையா

துன்னாலை மத்தி கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா இராசையா (முன்னாள் உப தபாலதிபர், துன்னாலை) நேற்று (24.05.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஞானாம்பிகையின் அன்புக்கணவரும் இராசசுந்தரம் (கிளை முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், நெல்லியடி), இராசசெளந்தரி (உபதபாலதிபர், துன்னாலை), சோமசவுந்தரி (உதவி தபாலதிபர் சாவகச்சேரி), சோமசந்தரம் ஆகியோரின் அன்புத்தந்தையும் காலஞ்சென்ற சதானாந்தாம்பிகை (ஆசிரியை, நெ.ம.ம.வி.) மற்றும் விக்னேஸ்வரன் (களஞ்சியப்பொறுப்பாளர், ப.நோ.கூ.சங்கம், நெல்லியடி), ஸ்ரீராமகிருஸ்னன், மோகனரஜனி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனும் மகேஸ்வரி, இளகேஸ்வரி ஆகியோரின் அன்புச்சகோதரனும் மிதிலா (மாணவி, தொழில்நுட்பக்கல்லூரி, யாழ்ப்பாணம்), பிரதாபன், பிரதீபன், விநோஜா (மாணவி யா/நெ.ம.மவி), பிரவீனன் (மாணவன், யா/துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்), தனுஜன்(கனடா) ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தியான்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(சி/383) (15-14)

தகவல்
குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிரிக்கெட் போட்டி

பண்டத்தரிப்பு,மே 25

பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழகத்தினரின் ஏற்பாட்டில் யாழ்.மாவட்ட விளையாட்டுக்கழகங்களுக் கிடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடர் ஒன்று நடத்தப்பட்டு வருகின்றது.

யாழ்.மாவட்டத்தின் சகல பாகங்களிலும் இருந்து வருகை தந்த 58 விளையாட்டுக்கழகங்கள் இச்சுற்றுத் தொடரில் பங்கு பற்றி ஆடிவருகின்றன.

இச்சுற்றுத் தொடர் கடந்த 12 ஆம் திகதி ஆரம்பமாகி முதற்சுற்றுப் போட்டிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்ற.

ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் முன்னாள் அங்கத் தவர்களான பொன். கனகரத்தினம் ,அனுசா சிவரஞ்சினி ஆகியோர் ஞாபகார்த்தமாகவே இச்சுற்றுத் தொடர் நடத்தப் படுவது குறிப்பிடத்தக்கது. (த-120)

# விமானப் படை- பொலிஸ் அணிகள் இறுதியாட்டத்தில் மோதும்

யாழ்ப்பாணம்,மே 25

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்தும் ''யாழ்ப்பாண வெற்றிக்கிண் ணத்திற்கான'' கூடைப் பந்தாட்டச் சுற்றுப் போட்டி யின் அரையிறுதி ஆட்டங் கள் நேற்றுமுன்தினம் புதன் கிழமை யாழ். மத்திய கல் லூரி கூடைப்பந்தாட்டத் திடலின் மின்னொளியில் இடம்பெற்றது.

முதலில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் விமானப்படை கூடைப் பந்தாட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட கூடைப் பந்தாட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் விமானப்படை கூடைப்பந்தாட்ட அணி 75:51 என்ற புள்ளி அடிப் படையில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவதாக இடம் பெற்ற அரையிறுதியாட்டத் தில் கடற்படை கூடைப் பந்தாட்ட அணியை எதிர்த்து பொலிஸ் கூடைப்பந்தாட்ட அணி மோதிக் கொண் டது.கடும் போராட்டத்துக்கு மத்தியில் பொலிஸ் கூடைப் பந்தாட்ட அணி 76:71என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று இறுதி யாட்டத்துக்கு தகுதி பெற் றது. ( த-23 )



# ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்கான இறுதியாட்டம் நாளை காலை





யாழ்ப்பாணம் ,மே 25

ஜொலிஸ்ரார் விளை யாட்டுக்கழகம் நடத்தும் ''ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான 40 பந்துப் பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட்சுற் றுப் போட்டித் தொடரின் இறுதியாட்டம் நாளை சனிக் கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற வுள்ளது.

இறுதியாட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட் டுக்கழக அணியை எதிர்த்து பற்றீசியன் விளையாட் டுக்கழக அணி மோதவுள் ளது.

பிரதமவிருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆர்.ரி.ஜெயசீலன், சிறப்பு விருந்தினராக பிரபல தொழிலதிபர் ஈ.எஸ்.பி. நாகரத்தினம், யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேச ராசாவும் கலந்து கொள்ளவுள் ளனர். (த- 23)

# தாச்சிப்போட்டி

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி, யாழ்ப்பாணம் வர்த்தகவங்கி, யாழ்ப்பாணம் மக்கள் வங்கி ஆகியவற்றின் ஆதரவுடன் யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் யாழ்.மாவட்ட ரீதியில் கைதடி குமரநகர் மைதானத்தில் மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் நாளை சனிக்கிழமை இரவு மோதும் கழகங்கள்:

* கொக்குவில் வராகி வி.க. எதிர் தாவடி காளி அம்பாள் வி.க.
* உடுவில் ஆலடி சிந்து வி.க. எதிர் கைதடி குமரநகர் வி.க.

(த-288)

***

யாழ்.மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கத்தின் ஆதரவுடன் கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே மின்னொளியில் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கைதடி குமரகுரு வி.க. எதிர்த்து கைதடி விநாயகர் வி.க. மோதவுள்ளது. (த-288)

## உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், மே 25

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் நடத்தும் அமரர். ஈ.கே.குமரையா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்துக்கான 11 பேர் பங்கு பற்றும் வில கல் முறையிலான உதைபந் தாட்டச் சுற்றுப்போட்டி எதிர் வரும் ஜூன் மாதம் 2 ஆம் திகதி உரும்பிராய் இந்துக் கல்லூரிமைதானத்தில் ஆரம்ப மாகவுள்ளதெனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்+ துள்ளார். ( த-23)

# இறுதிக்கு முன்னேறியது றோயல்



யாழ்ப்பாணம்,மே 25

குப்பிளான் விக்னேஸ் வரா விளையாட்டுக்கழகம் நடத்தும் டாக்டர் பொ.மகா லிங்கன் ஞாபகார்த்த வெற் றிக்கிண்ணத்துக்கான 7 பேர் பங்கு கொள்ளும் உதை பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் முதலாவது அரை யிறுதியாட்டம் நேற்றுமுன் தினம் புதன்கிழமை இடம் பெற்றது.

இதில் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட் டுக்கழக அணி மோதிக் கொண்டது.

முதலாம் பாதியாட்டம் ஆரம்பமானபோது தத்தமது அணியின் வெற்றியைக் கருத்தில் கெண்டு இரண்டு அணியினரும் தமது ஆட்டத் தினை வேகப்படுத்திக் கொண்டு எதிர் அணியி னரின் கோல்பரப்பினுள் நுழைந்த வண்ணம் இருந் தனர்.

இதன் பயனாக 15 ஆவது நிமிடத்தில் ஊரெழு றோயல் அணியின் வீரன் சயந்தன் தனது அணிக்கான முதலாவது கோலினை அடித்தார். இதனால் ஆட் டம் சூடுபிடிக்கத் தொடங் கியது.

முதலாம் பாதியாட்டம் இடைவேளைக்காக இடைநிறுத்தப்பட்ட போது ஊரெழு றோயல் விளையாட் டுக்கழக அணி1:0 என்ற கோல் கணக் கில் முன்னிலையில் இருந்தது.

இரண்டாம் பாதி யாட்டம் ஆரம்பமான போது மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணி தனது அணிக் கான கோல்களை அடிப்ப தற்கு முயற்சிகளை மேற் கொண்ட போதும் எதுவித கோல்களையும்அதனால் பெறமுடியவில்லை.

இதனால் ஆட்டமுடிவில் ஊரெழு றோயல் விளை யாட்டுக்கழக அணி 1:0 கோல்கணக்கில் வெற்றி பெற்று இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. (த-23)

# பாடசாலைகள் மட்டத்தில் மேசைப்பந்தாட்டம் அறிமுகம்

வலி.வடக்கு, மே 25

இலங்கைகல்வி அமைச்சு பாடசாலை மட்டத்தில் மேசைப்பந்தாட்டத்தை அறிமுகம் செய்யும் திட்டம் ஒன்றை முன்னெடுத்துள் ளது.

இதற்கெனக் கல்வி அமைச்சினால் இணைத்து மாகாணக் கல்வி அமைச்சுக் கும் சுற்று நிருபங்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள் ளது.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கு அமைவாக வடக்கு மாகாணப் பாட சாலைகளில் மேசைப்பந் தாட்டத்தை வளர்த்தெடுக் கும் நடவடிக்கையாக வட மாகாணக் கல்வித் திணைக் களத்தினால் பாடசாலைகள் மட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட ஆசிரியர்கள் வலய மட்டத்தில் பயிற்றுவிப்பாளர் களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர்.

வட மாகாண கல்வித் திணைக்களத்துக்கு உட் பட்ட கல்வி வலயங்கள் ரீதியாக தெரிவு செய்யப் பட்ட ஆசிரியர்களின் விவ ரங்கள் வருமாறு:-

* யாழ்ப்பாணம் கல்வி வலயம்- ஏ.மோகன் (யாழ்ப் பாணம் மத்திய கல்லூரி.)
* வலிகாமம் கல்வி வலயம் - என்.தியாகராசா (ஆனைக்கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை.)
* வடமராட்சி கல்வி வலயம் எ.பவாநந்தன் (கர வெட்டி தேவரையாளி இந் துக் கல்லூரி.)
* தென்மராட்சி கல்வி வலயம் - ப.மதனபவன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி.)
* தீவகக் கல்வி வலயம் ரி.துஷியா வேலணை கல் விக்கோட்டம்.
* கிளிநொச்சி கல்வி வலயம் - ஆர்.ஸ்ரீரமணன் (கிளிநொச்சி கனகபுரம் மகா வித்தியாலயம்)
* முல்லைத் தீவு கல்வி வலயம் - கே.சசிக்குமார் (இரணைப்பாலை றோமன் கத்தோலிக்க மகா வித்தி.)
* துணுக்காய் கல்வி வலயம்- எ.செல்வச்சந்தி ரன் (மல்லாவி மத்திய கல்லூரி.)
* வவுனியா வடக்கு கல்வி வலயம் - டபிள்யூ. ஜெபநேசன் ( சுந்தரபுரம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை.)
* வவுனியா தெற்கு கல்வி வலயம் - எ.குமரேசன் (வவுனியா அல் இக்பால் முஸ்லிம் மகா வித்தியாலயம்.)
* மன்னார் கல்வி வலயம்- எ.கிங்ஸிலி (மன் னார் சென்சேவியர் ஆண்கள் கல்லூரி.)
* மடு கல்வி வலயம் - எப். வி.நிஷாந்தன் ( அடம்பன் மத் திய மகா வித்தி.) (த-86)

# தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் விளையாட்டு விழா

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 2012 ஆண்டின் தேசிய இளைஞர் சேவை கள் மன்றத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான விளை யாட்டு விழா கடந்தவாரம் நெடுந்தீவு பிரதேச தொண்டர் சேவை இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஞா.அமலஜான் தலைமையிலும் நெடுந்தீவு பிரதேச இளை ஞர் கழக சம்மேளனத் தலைவர் க.ரஜீவ் பிரகாஸ் வரவேற்பிலும் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தின ராக நெடுந்தீவு கடற்படைக் கட்டளை அதிகாரி கொமான்டர் இ.எம்.எச்.எஸ்.எக்க நாயக்கவும் சிறப்பு விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் த.ஈஸ்வரராஜா,நெடுந் தீவு பிரதேச செயலர் ஆ.சிறி,நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் தா.றெக்ஷியன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் அன்றைய நாளில் மெய் வன்மைப் போட்டிகள் ,உதைபந்தாட்ட இறு திப் போட்டி என்பன இடம்பெற்றன. இந்த விழாவில் [illegible] ஆகிய இளைஞர் [illegible] 1 ஆம், 2 ஆம் இடங்களைப் பெற்றன.

(த-23)



[illegible] புதுக்குளம் சித்தி விநாயகர் விளையாட்டுக்கழகம் நடத்திய விளையாட்டு விழா [illegible]ந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இதில் முதியோருக்கான பாரம்பரிய விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றியவர்கள். (த-421)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# "வீட்டுக்குப் போக ரெடியாக இரு"

## பொலார்ட், பிராவோக்கு எஸ்.எம்.எஸ்



ஐ.பி.எல் 5 ஆவது தொடரில் அதிர்ஷ்ட வசமாக 'பிளே-ஓப்' சுற்றில் உள்ளே நுழைந்து வெற்றி பெற்றுள்ள சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் பிராவோவுக்கு மும்பை இந்தியன்ஸ் அணியின் பொலார்ட் அனுப்பிய ஒரு குறுந்தகவல் குறித்து தகவல் வெளியாகியுள்ளது.

தகுதி நீக்கச் சுற்றில் அதிரடியாக விளையாடி சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 187 ஓட்டங்கள் எடுத்து 38 ஓட்டங்கள் வித்தியாசத்தில் மும்பையை தோற்கடித்து தனது அபார வெற்றியைப் பதிவு செய்தது.

இந்த ஆட்டத்தில் அணித் தலைவர் மஹேந்திர சிங் டோனியுடன் இணை சேர்ந்து வெற்றிக்கு வித்திட்ட பிராவே கூறுகையில், 2 நாள்களுக்கு முன்பு பொலார்ட் எனது கைபேசிக்கு ஒரு குறுந்தகவல் (எஸ்.எம்.எஸ்) அனுப்பியிருந்தார்.

அதில் என்னை ''பயணப் பையைத் தயார் செய்து வைத்துக் கொள். வீட்டுக்குப் போக ஆயத்தமாக இரு '' என்று அதில் கூறியிருந்தார்.

ஆனால், நாங்கள் அதற்கு நேற்று (நேற்று முன்தினம்) எங்கள் பாணியில் பதில் சொல்லியிருக்கிறோம் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இதனாலோ தான் என்னவோ பொலார்ட் இலக்கை வீழ்த்திய போது அவரைப் பார்த்து பிராவோ நளினமாக சைகை செய்தார். (5)




# சானியா 500

ரெனிஸ் அரங்கில் தனது 500 ஆவது வெற்றியைப் பெற்று சாதித்தார் இந்தியாவின் சானியா மிர்சா.

பெல்ஜியத்தில், பிரஸ்சல்ஸ் ஓபன் ரெனிஸ் தொடர் நடக்கிறது. இதன் இரட்டையர் பிரிவின், முதல் சுற்றில் சானியா, பெத்தானி மேடக் (அமெரிக்கா) ஜோடி, ஹொர்வானா (போஸ்னியா), சாண்டிரா (ஆஸ்திரியா) ஜோடியை சந்தித்தது. இதில், சானியா ஜோடி 6-4, 6-2 என்ற நேர் செட் கணக்கில் வென்று, காலிறுதிக்கு முன்னேறியது. இந்த வெற்றியின் மூலம் ரெனிஸ் அரங்கில் சானியா, தனது 500 ஆவது (ஒற்றையர் பிரிவில்-270, இரட்டையர் பிரிவில் 230) வெற்றியை பதிவு செய்தார். (5)





# மிரட்டலுக்குப் பணிந்தார்

தன்னிடம் பாலியல் தொந்தரவு செய்ததாக ஐ.பி.எல் கிரிக்கெட் வீரர் லூக் போமர்ஸ்பேக் மீதான வழக்கை திரும்ப பெற்றுக் கொள்வதாக அமெரிக்க பெண் ஜொஹைல் ஹமீது தெரிவித்துள்ளார். தொடர்ச்சியாக ஜொஹைல் மீது மிரட்டல் விடுக்கப்பட்டு வந்த நிலையில் அவர் இந்த வழக்கை திரும்பப் பெற்றுக் கொண்டுள்ளார்.

ஐ.பி.எல் கிரிக்கெட் தொடரைக் காண்பதற்காக அமெரிக்கப் பெண் ஜொஹைல் ஹமீது தனது காதலருடன் இந்தியா வந்துள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு, டெல்லியில் ஐந்து நட்சத்திர 'ஹோட்டல்' ஒன்றில் தன்னிடம் பாலியல் தொந்தரவு செய்ததாக பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணியை சேர்ந்த லூக் போமர்ஸ் பேக் மீது ஜொஹைல் புகார் அளித்தார்.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட லூக் பிணையில் விடுதலையானார். தற்போது இவர்கள் இருவரிடையே ஏற்பட்ட சமரசத்தையடுத்து வழக்கைத் திரும்பப் பெறுக்கொள்வதாக ஜொஹைல் தெரிவித்துள்ளார். இருப்பினும் ஜொஹைல் மீது கடுமையான அழுத்தங்களும் மிரட்டல்களும் பிரயோகிக்கப்பட்டு வந்ததாலேயே அவர் தனது வழக்கை திரும்பப் பெற்றுள்ளதாக இந்திய செய்தி இணையத்தளங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. (5)

### ஐ.பி.எல்.அணிகளின் அலுவலகங்களில் தேடுதல்

ஐ.பி.எல் தொடரில் விளையாடும் வீரர்களுக்கு ஒப்பந்த தொகைக்கும் மேலாக ஏராளமான கறுப்புப் பணம் கொடுக்கப்பட்டதாக தகவல் வெளியானது. இதனையடுத்து புனே வாரியர்ஸ் மற்றும் பெங்களூர் ரோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிகளின் அலுவலகங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டதாகத் தகவல் வெளியாகி உள்ளது.

மும்பையில் உள்ள 'சஹாரா நட்சத்திர ஹோட்டலிலும்', பெங்களூரில் உள்ள ரோயல் சலஞ்சர்ஸ் அலுவலகத்திலும் ஒரே நேரத்தில் ஆய்வு மேற்கொண்ட அதிகாரிகள் சில முக்கியமான ஆவணங்களை எடுத்துச் சென்றுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஒரு தனியார் தொலைக்காட்சிச் சேவை சமீபத்தில் வெளியிட்ட வீடியோ பதிவில், ஐ.பி.எல் வீரர்கள் 'ஸ்பொட் பிக்சிங்' சூதாட்டத்தில் ஈடுபடுவது மற்றும் ஒப்பந்த தொகைக்கு மேலாக கறுப்பு பணம் பெறுவது அம்பலப்படுத்தப்பட்டது இந்தியா முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இது குறித்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் அஜய் மாக்கன் நாடாளுமன்றத்தில் வலியுறுத்தியதை அடுத்து, வருமானத் துறையினர் இந்த ஆய்வை மேற்கொண்டுள்ளதாகத் தெரிகிறது. (5)

# விரைவில் ஓய்வு



இடம்பெறவுள்ள ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் சுற்றுத் தொடரின் பின்னர் ரெனிஸ் போட்டிகளிலிருந்து ஓய்வுபெறவுள்ளதாக உலகின் முன்னாள் முதற்தர வீராங்கனை கிம் கிளைஸ்டர்ஸ் (வயது -28) தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சியான உபாதைகள் காரணமாகப் பாதிக்கப்பட்ட கிம் கிளைஸ்டர்ஸ், 2 வருட காலத்திற்கும் மேலாக ஓய்வில் காணப்பட்ட பின்னர் 2009 ஆம் ஆண்டு ஓய்விலிருந்து வெளியே வந்து போட்டிகளில் பங்குபற்றியிருந்தார். இந்த நிலையிலேயே தனது ஓய்வை அவர் தற்போது அறிவித்துள்ளார்.

இதுவரை 41 பெண்கள் ரெனிஸ் அமைப்பின் தனிநபர் பட்டங்களை வென்றுள்ள அவர், 11 இரண்டு பேர் தொடர்களிலும் சம்பியனாகியுள்ளார். 2005, 2006, 2010 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் பட்டத்தை வென்ற அவர், 2011 ஆம் ஆண்டில் ஆஸ்திரேலிய பகிரங்க ரெனிஸ் பட்டத்தையும் வென்றார்.

ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் தொடரே தனது வாழ்வில் மிகவும் உச்சத்தை வழங்கிய தொடராகக் காணப்படுகிறது எனத் தெரிவித்துள்ள கிம் கிளைஸ்டர்ஸ், அதன் காரணமாக ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் தொடரிலிருந்து தனது ஓய்வை ஆரம்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளார். ஐக்கிய அமெரிக்கப் பகிரங்க ரெனிஸ் தொடர் எதிர்வரும் ஓகஸ்ட் [illegible] ஆம் திகதியிலிருந்து செப்டெம்பர் [illegible] ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது. (5)

# "டுவிட்டரால்" வந்த வினை


இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சனுக்கு இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. அவரது தனிப்பட்ட '' டுவிட்டர் '' தளத்தில் கெவின் பீற்றர்சன் தெரிவித்த கருத்துக்களுக்காகவே இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டம் நிறைவடைந்ததும் தனது '' டுவிட்டர் '' பக்கத்தில் கருத்துத் தெரிவித்த கெவின் பீற்றர்சன் '' நிக் நைட் எவ்வாறு (இங்கிலாந்தின்) உள்ளூர் டெஸ்ட் ஆட்டங்களுக்கு நேர்முக வர்ணனை செய்ய உள்ளே புகுந்தார் என்று யாராவது சொல்ல முடியுமா? கேலிக்குரியது!'' எனத் தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்து அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரரான நிக் நைட் அந்த ஆட்டத்துக்கான நேர்முக வர்ணனையில், இங்கிலாந்து அணியில் கெவின் பீற்றர்சனின் இடம் கேள்விக்குரியது என்று விமர்சித்ததன் காரணமாகவே கெவின் பீற்றர்சன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் உத்தியோகபூர்வ ஒளிபரப்பாளர்களான 'ஸ்கை' நிறுவனத்திடம் ஒப்பந்தத்தைக் கொண்டுள்ள நிக் நைட் மீதான பகிரங்க விமர்சனத்தை அடுத்து கெவின் பீற்றர்சனை விசாரணைக்கு அழைத்த இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை அவருக்கு அபராதம் விதித்துத் தீர்ப்பளித்துள்ளது. அபராதத் தொகையை இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை வெளியிட மறுத்துவிட்டது.


இதற்கு முன்னரும் '' டுவிட்டர்'' தளத்தில் தனது கருத்தைப் பகிர்ந்து கொண்டமைக்காக கெவின் பீற்றர்சன் சர்ச்சைக்குள் சிக்கியிருந்தார். 2010 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் ஒரு நாள் சர்வதேச அணியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்து தனது '' டுவிட்டர் '' தளத்தில் ஏமாற்றத்தை வெளிப்படுத்திய கெவின் பீற்றர்சன், மோசமான வார்த்தைகளையும் பயன்படுத்தியிருந்தார். அதன் போதும் அவருக்கு வெளிப்படுத்தப்படாத அபராதத் தொகையொன்று விதிக்கப்பட்டது. (5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்கள் நினைப்பதைச் செய்யட்டும்

## கபில்தேவ் பெருந்தன்மை



பி.சி.சி.ஐ., தான் 'பொஸ்'. அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்களோ அதை செய்கின்றனர். இதைப் பற்றி பேசி ஒரு பயனும் இல்லை, என்று விரக்தியுடன் தெரிவித்துள்ளார் கபில்தேவ்.

ஐ.பி.எல்., வருமானத்தின் ஒரு பகுதி, கவாஸ்கர் உள்ளிட்ட 160 வீரர்களுக்கு பிரித்துக் கொடுக்க, இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) முடிவு செய்தது. இதற்கான முதல் பட்டியலில் 1983 இல் இந்திய அணிக்கு உலகக் கிண்ணத்தை வென்று கொடுத்த அணித்தலைவர் கபில் தேவ், அசார், கீர்த்தி ஆசாத் உள்ளிட்டோர் இடம் பெறவில்லை.

சூதாட்ட் சர்ச்சையில் சிக்கியதால் அசாருக்கும், 2007 இல் பி.சி.சி.ஐ., யை எதிர்த்து, இந்தியன் கிரிக்கெட் லீக் (ஐ.சி.எல்.,) என்ற அமைப்பை தொடங்கியதால் கபில் தேவுக்கும் இதில் இடமில்லை என்று தெரிகிறது.

இதுகுறித்து கபில் தேவ் கூறியதாவது:

இப்போது ரூ. 1.5 கோடி கிடைக்கவில்லை என்பதற்காக வருந்தப் போவதில்லை. இந்திய அணிக்காக ஆட்டங்களில் மகிழ்ச்சியுடன் பங்கேற்றேன். அந்தத் திருப்தி போதும். வாழ்க்கையில் எது நடந்தாலும், நன்மைக்கே என்று எடுத்துக்கொள்பவன். பி.சி.சி.ஐ.,யை பொறுத்தவரையில் அவர்கள் தான் 'பொஸ்'. என்னிடம் வரவில்லை என்றாலும், எனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.சி.சி.ஐ., என்ன வேண்டுமானாலும் செய்யட்டும், விட்டுவிடுங்கள். அவர்கள் என்ன செய்ய வேண்டும் என்று நினைக்கின்றார்களோ, அதை செய்கின்றனர். இந்தத் திட்டத்தினால், எனது சக வீரர்கள் பயன் பெறுவது தான் ஒரே மகிழ்ச்சி, இவ்வாறு கபில் தேவ் கூறினார்.

### எதிர்க்கத் தயங்க மாட்டேன்

அண்மையில் ஐ.பி.எல்., தொடரை எதிர்த்து வருவதால் கீர்த்தி ஆசாத் பெயரும், பி.சி.சி.ஐ., நிதியுதவி பட்டியலில் இடம் பெறவில்லை. இதுகுறித்து கீர்த்தி ஆசாத் கூறுகையில், நிதி என்னிடம் வந்தால் தான் அதை ஏற்பதா, மறுப்பதா என்பது குறித்து பேச முடியும். ஐ.பி.எல்., தொடரை எதிர்ப்பதால், எனது பெயரை சேர்க்கவில்லை என்று நினைக்கிறேன். எங்கு, எப்போது தவறு நடந்தாலும், அதை எதிர்க்கத் தயங்க மாட்டேன் - என்றார். (ங-5)

# கிண்ணம் கொல்கத்தாவுக்கே!

## கங்குலியின் கணிப்பு இது



ஐந்தாவது ஐ.பி.எல்., தொடரில், காம்பீர் தலைமையிலான கொல்கத்தா நைட்ரைடர்ஸ், கிண்ணம் வென்று சாதிக்கும் என்று, புனே வாரியர்ஸ் அணித் தலைவர் கங்குலி கணித்துள்ளார்.

ஐந்தாவது ஐ.பி.எல்., தொடர் முக்கிய கட்டத்தை எட்டியுள்ளது. 'பிளே-ஒப்' சுற்றின் முதல் ஆட்டத்தில் கொல்கத்தா அணி 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் டெல்லி அணியை வீழ்த்தி, முதன் முறையாக இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது.

இதுகுறித்து கொல்கத்தா அணியின் முன்னாள் அணித்தலைவரும், தற்போதைய புனே அணியின் தலைவருமான கங்குலி கூறியதாவது :

எனது ஆறாவது அறிவு கூறியபடி கொல்கத்தா அணிக்கு இந்த முறை ஐ.பி.எல். கிண்ணத்தை வெல்லும் வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. கிண்ணம் வெல்வதற்கான அனைத்து தகுதிகளும் கொல்கத்தா அணிக்கு உள்ளது.

கிரிக்கெட் என்பது ஒரு வட்டம். இந்த முறை ஒரு அணி கிண்ணம் வெல்லும், அடுத்த முறை வேறு ஒரு அணி சம்பியன் பட்டத்தை கைப்பற்றும். இந்த முறை கடைசி இடம் பிடித்த புனே வாரியர்ஸ் அணி, அடுத்த தொடரில் கிண்ணம் வெல்லலாம்.

கொல்கத்தா அணியில் சுனில் நரைன் இருப்பது சாதகமான விஷயம். கொல்கத்தா அணியின் வெற்றிக்கு நரைனின் பங்களிப்பு முக்கிய பங்குவகிக்கிறது. இவருக்கு தொடர் நாயகன் விருது வழங்கலாம். இக்கட்டான நேரத்தில் பந்துவீசும் இவர், எதிரணி துடுப்பாட்ட வீரர்களின் மனநிலைக்கேற்ப பந்துவீசி நெருக்கடி கொடுக்கிறார். இந்திய அணியின் துணைத் தலைவர் பொறுப்பில் இருந்து காம்பீர் நீக்கப்பட்டதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். ஆனால் ஐ.பி.எல்., தொடர் மூலம் சிறந்த அணித்தலைவர் என்பதை நிரூபித்துள்ளார் - என்றார். (5)


**விசேட கருத்தரங்கு**

எதிர்வரும் 9ஆம் திகதி நடைபெறவுள்ள அஞ்சல் சேவைக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சை

விசேட கருத்தரங்கு

ஆரம்பம் 26.05.2012 காலை 9 மணி | சனி, ஞாயிறு 9.00 - 4.00 PM

விரிவுரையாளர்

P. உமாசங்கர் • கமல்தாசன்

நாவலர் கல்வி நிலையம் — பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0774696695

(சி-360)

**மானிப்பாயில் முதன் முறையாக German, Swiss செல்லவுள்ளவர்களுக்கான**

**Dutch Classes**

(டொச், பிரெஞ்சு மொழி வகுப்புக்கள் ஆரம்பம்)

German ,Swiss இல் குடியுரிமை பெறவுள்ளவர்களுக்கும் உகந்தது)

வகுப்பு ஆரம்பம் :- சனி, ஞாயிறு

நேரம் :- காலை 10.30மணி

(யாழ்ப்பாணம் மற்றும் நெல்லியடியிலும் வகுப்பு ஆரம்பம்) (சி-361)

மேலதிக விபரங்களுக்கு :-

UNI ICT Education (Pvt) Ltd,
Jaffna Road, Manipay,
T.P. :- 021 22 55 867 / 0777 110 862
(மானிப்பாய் பிரதேச சபைக்கு நேர் எதிரே)

(சி/361)


# மரண அறிவித்தல்

## பிரம்மஸ்ரீ குகானந்தசர்மா இரத்தினேஸ்வர ஐயர்

(இளைப்பாறிய அதிபர், மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை)



புன்னாலைக்கட்டுவனைப் பிறப்பிடமாகவும், பூத்தன் சீமா அளவெட்டியை வதிவிடமாகவும் கொண்ட பிரம்மஸ்ரீ குகானந்தசர்மா இரத்தினேஸ்வர ஐயர் நேற்று (24.05.2012) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பகவதி அம்மாவின் அன்புக் கணவரும், ஜலஜா, விஜயா, சுகல்ஜா, சௌமியா, பிரதாபன் (R.Pசர்மா) நீராஜா ஆகியோரின் பாசமிகு தந்தையும், வாகீஸ்வரக் குருக்கள் (ஊரெழு பர்வதவர்த்தனி அம்மன் தேவஸ்தான்ம்), கதிர்காமநாதக் குருக்கள்(செட்டித் தெரு விநாயகர் தேவஸ்தானம், கொழும்பு), அகிலேஸ்வரக்குருக்கள் (பிரதம சிவாச்சாரியார், துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப் பழை), செந்தில்ராஜக்குருக்கள் (துர்க்கா தேவஸ்தானம், தெல்லிப்பழை), மாதவராஜசர்மா (துறையூர் ஐயனார் தேவஸ்தானம், வேலணை), உஷா ஆகியோரின் அன்பு மாமனும், வித்தியாதரக்குருக்கள், சிவானுஜா, ஆரணி, ரோகிணி, ஜனனி, வினோதினி, கிருபாகரன், அமிர்தினி, கோபிகிருஸ்ணா, லலிதாதாஸ், பிரகஸ்பதி, வாசவி, மதுவந்தி, சுவஸ்திகன், அமிர்தவர்சினி ஆகியோரின் அன்புப் பேரனும், நித்தியஸ்ரீயின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கட்டுப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீநிவாசா,
3ஆம் கட்டை, தெல்லிப்பழை.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்.

(18524)


**அஞ்சல் சேவை உத்தியோகத்தர் போட்டிப்பரீட்சைக்கான கருத்தரங்கு**

சனி, ஞாயிறு 1 மணி தொடக்கம் 5 மணிவரை

யாழ்ப்பாணக்கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு யாழ். கொமர்ஷல் வங்கி அருகில்

முகாமைத்துவ உதவியாளர் (ஞாயிறு 1 மணி)

SLAS Ltd (சனி 9 மணி) SLPS - SLAS Open (சனி 1 மணி)

SLPS Ltd (சனி 1 மணி) Accountant (சனி, ஞாயிறு 1 மணி)

வங்கி ஆட்சேர்ப்பு (ஞாயிறு 1 மணி) ஆகிய பரீட்சைக்கான வகுப்புகள் ஏற்கனவே தொடங்கி நடைபெறுகின்றன.

தொடர்பு : 0754164564 (சி-349) (34-6-7)

**வர்த்தகப் பிரிவு மாணவர்களுக்கான தொடர் கருத்தரங்கும் பரீட்சையும் A/L 2012**

| வணிகக்கல்வி | கணக்கீடு |
|---|---|
| திரு. S.K. பாலசபேஷ் (HND. Dip.in.Acc) | திரு. K.B. பாலகஜன் (B.Com, H.N.Dip.in.Acc) |

- முற்றிலும் எதிர்பார்க்கை வினாக்களை உள்ளடக்கியது
- பரீட்சை தொடர்பான புதிய மாற்றங்களை உள்ளடக்கியது.
- கையேடுகள் வழங்கப்படும்.
- அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டன.
- 28.05.2012 இற்கு (திங்கள்) முன்னர் உங்கள் அனுமதியினைப் பெற்றுக்கொள்ளவும்.
- நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(18573) (34-14-6)

கருத்தரங்கு நடைபெறும் இடம்:

**புதிய பொருளியல் கல்லூரி,**

யாழ்ப்பாணம்

(மணிக்கூட்டு கோபுரவீதி, பெருமாள் கோயில் அருகில்)

**தேவை**

வயதான பெண்மணி ஒருவருக்கு, நன்றாக சமைக்க, பராமரிக்கத் தெரிந்த பெண் பணியாளர் தேவை.

தொடர்பு: Clock Tower Road, Jaffna.
T.P. 0770222232.

(18499) (34-6-7)


# மரண அறிவித்தல்



## . புவனேஸ்வரி கந்தசாமி

அரியாலை, கச்சேரியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட புவனேஸ்வரி கந்தசாமி நேற்று (24.05.2012) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - மாணிக்கம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், முருகேசு கந்தசாமியின் பாசமிகு மனைவியும், தேவகி, ருக்குமணி ஆகியோரின் சகோதரியும், நளாயினி ஞானசேகரம் (ஆசிரியை, கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), ரவீந்திரன் (பொறியியலாளர், தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கலை) ஆகியோரின் அன்புத் தாயும், ஞானசேகரன் (ஓய்வுபெற்ற இலங்கை வங்கி காசாளர்), சுகந்தினி, கேதீசன், கௌரி, சந்திரா, இந்திரா, தியாகநாதன், சத்தியநாதன் ஆகியோரின் மாமியும், தமயந்தி, காண்டீபன், அபிராமி, பார்த்தீபன், மகிழினி, குமுதினி ஆகியோரின் பெரியம்மாவும், புஸ்பதேவி, காலஞ்சென்ற தங்கரெத்தினம் மற்றும் தம்பிராசா, மகாஞானசம்பந்தர், சண்முகராசா ஆகியோரின் மைத்துனியும் சந்தோஸ் நாராயணன், பிரகாஸ் நாராயணன், சாயினி, பேரன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2012) வெள்ளிக்கிழமை இல. 96, கண்டி வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 3.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 96, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(18516) (34-6-14)

தகவல்:
குடும்பத்தினர்.


**MCS நிறுவனத்திற்கும் விரிவுரையாளர்களுக்கும் எமது நன்றிகள்**

CIMA, Operational மாணவர்களாகிய நாம் எமது கற்கைநெறிகளிற்காக கொழும்பை நாட வேண்டிய சூழ்நிலையிலிருந்தோம். இந்நிலையில் கொழும்பிலிருந்தும் இங்கிருந்தும் தகைமை வாய்ந்த விரிவுரையாளாகளை இணைத்தும் மிகச்சிறப்பான முறையில் விரிவுரைகளை ஒழுங்கு செய்த MCS நிறுவனத்திற்கும் மிகவும் அர்ப்பணிப்புடன் உரிய காலத்திற்கு முன்னரேயே பாடவிதானங்களை பூர்த்திசெய்த விரிவுரையாளர்களிற்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

(சி-359)

**CIMA @ MCS**

**CIMA-UK பதிவுக்கட்டணத்திற்கான 100% புலமைப்பரிசில்-**



**Certified Level -26.5.2012**

**Operational Level- 27.5.2012**

**Successful Pass History!**

Syllabuses are covered on Time

Approved Training centre

SMS <name>_<level> to 772 395 895 & get Scholarship

MCS IT CAMPUS

324, Palay Road, Jaffna.

For details Call us 772 395 895


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.